ஸ்ரீ
அருணாசல மாண்பு

ஸ்ரீ சாது ஓம்

ஸ்ரீ

அருணாசல மாண்பு

(அருணாசலத்தின் அருள் வலிமை
அருணாசல வெண்பா மற்றும்
விரிவுப்பாமாலை உரையுடன்)

ஸ்ரீ சாது ஓம்

ஸ்ரீ அருணாசலரமண நிலயம்
79/11-A, மணக்குள விநாயகர் தெரு
ஸ்ரீரமண நகர், திருவண்ணாமலை - 606 603
e-mail : sadhuom@gmail.com

உரிமை © : ஸ்ரீ அருணாசலரமண நிலையம்
e-mail : sadhuom@gmail.com

முதற் பதிப்பு : 2008

1000 பிரதிகள்

விலை ரூ : 40/-

அச்சிட்டோர் :

ஆரித்ரா பிரிண்டர்ஸ்
பெங்களூர் - 560 003.
தொலைபேசி - 23346025

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய

நூன்முகம்

அருணாசலம் கணக்கற்ற ஜீவர்களின் கதி. மனித வாழ்வில் உலகமேன்மைகள் கிடைக்கட்டும் அல்லது கிட்டாமல் போகட்டும்! அருணாசலமே வாழ்வின் உண்மையான புகலாக அடைந்தோர் மட்டுமே பாக்கியவான்கள்! மற்றோர் உலக இன்பத்திற்காக அலையும் வறியோர்கள்! இவ்வாறு ஸ்ரீ ரமணர் உலகிற்கு ஞாபகப்படுத்திய விலை மதிப்பற்ற மாணிக்கம் இவ் வருணாசலம்.

அருணாசலத்தின் அருள் வலிவு மக்களை உலக மயக்கத்திலிருந்து தெளிய வைத்து, மனமாகிய மயக்கத்தைப் போக்கித் தன்னுடன் இணைத்துக் கொள்கிறது. இந்நூலின் முதற்பாகம் இவ்வருணாசலத்தின் அருள் வலிமையை விளக்குகிறது.

அடுத்த பாகமாகிய "ஸ்ரீ அருணாசல வெண்பா", ஸ்ரீ சாது ஓம் அவர்களின் உள்ளத்தில் எழுந்த அமுத ஊற்று; ஆசிரியர் உரையுடன் தந்துள்ளோம்.

கடைசி பாகமாகிய "விரிவுப்பாமாலை" ஸ்ரீ பகவான் அருளிய அருணாசல அக்ஷரமணமாலையை கடைசி இரு அடிகளாகக் கொண்டு ஸ்ரீ சாது ஓம் அருளிய பா ரத்தினம். இப்பாமாலையும் ஆசிரியர் உரையுடன் தரப்பட்டுள்ளது.

ஸ்ரீ பகவானருளிய இந்த 'அருணாசல சிவ' நாமத்தைக் கொண்டே நாம் அனைவரும் உய்வடையும் பொருட்டு இந்நூலை ஸ்ரீ அருணாசல ரமண பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்கிறோம்.

N.சங்கரன்

திருவண்ணாமலை
1-9-2008

ஸ்ரீ அருணாசல ரமண நிலையம்

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய

பொருளடக்கம்

நூன்முகம்

பாகம் - 1

அருணாசலத்தின் அருள் வலிமை 1

பாகம் - 2

a) ஸ்ரீஅருணாசல வெண்பா 27

b) அருணாசலப் பிரதக்ஷிண மாண்பு 62

c) அருணாசல மாஹாத்மியம் 67

பாகம் - 3

அருணாசல அக்ஷரமணமாலையின்
விரிவுப் பாமாலை 69



ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசலரமணாய

அருணாசலத்தின் அருள் வலிமை

அருணாசலமே புகலிடம் :

அதுவேதல மருணாசலந் தலம்யாவிலு மதிக
மதுபூமியி னிதயம்மறி யதுவேசிவ னிதயப்
பதியாமொரு மருமத்தலம் பதியாமவ னதிலே
வதிவானொளி மலையாநித **மருணாசல** மெனவே.

– ஸ்ரீ பகவான்

''ஸ்தலம்'' என்று கூறப்படுவதென்றால் அது அருணாசல க்ஷேத்திரமே. (அது) ஸ்தலங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும். அது பூவுலகின் இதயமாகும் (என்று அறிக). இம் மலையே சிவபிரானாகும். (அன்றியும் அது) சிவபிரானது நடுநாயக ஸ்தானமான ஒப்பற்ற ஒரு இரகசிய ஸ்தலமுமாகும் (என்று அறிக). (மேலும்), இறைவனாகிய சிவபிரான் அத்தலத்தின்கண் **'அருணாசலம்'** என்ற பெயரோடு ஜோதி மலையாக எப்பொழுதும் விளங்குகின்றான். (மேற்கண்டவாறெல்லாம்) இவ்வாறு அறிவாயாக.

எல்லா வுலகுந் தகையவ் வியலாற்
பொல்லா வினைகள் றாணமாம் புகலீ
தில்லா ததுவா மெதுகண் ணுறலா
லெல்லா **ரருணா சலமா** மிதுவே. – ஸ்ரீ பகவான்

கொடிய வினைகள் எல்லா உலகங்களையும் கட்டுப்படுத்தும் தன்மையாவதால், (ஜீவர்களுக்கு) அவை பந்த (காரண)மாகும். ஆனால் எதைத் தரிசிப்பதால் அந்த வினைகள் எல்லாம் இல்லாமற் போகுமோ அது ஜீவர்களுக்கு புகலிடமாகிய **இந்த ஒளிபொருந்திய அருணாசலமே** யாகும்.

யோசனை மூன்று மித்தல வாசர்க்
காசறு தீக்கை யாதியின் றியுமென்
பாசமில் சாயுச் சியம்பயக் கும்மே
யீசனு மென்ற ணையி னனே. – ஸ்ரீ பகவான்

மூன்று யோசனை அளவுள்ளதாகிய (30மைல்) இத்தலத்தில் வசிப்பவர்களுக்கு குற்றம் (பாவம்) அகற்றும் (குருவினுடைய) தீட்சை முதலியன எதுவும் இல்லாமலேயே பற்றற்றதான, என்னோடு இரண்டறக் கலக்கும் சாயுச்சிய முக்தியை சர்வேசுவரனாகிய நானே என்னுடைய ஆக்ஞையால் கொடுக்கின்றேன்.

கிரியுருவாகிய கிருபைக் கடல்

கிருபை, கருணை, அனுக்கிரகம், அருள் என்பவை யெல்லாம் ''நான் இருக்கிறேன்'' என்ற வடிவில் ஒவ்வொரு ஜீவனின் உள்ளத்திலும் விளங்கிக் கொண்டிருக்கும் ஆன்ம விளக்கமே என்று ஸ்ரீ பகவான் கூறுவதுண்டு. எங்கும் நிறைந்துள்ள இக் கிருபைக்கடல், இப்பூவுலகில்

அருணாசலமென கிரியுருவாக எழுந்தருளக் காரணம் என்ன?

பிரம்ம விஷ்ணுக்களுங்கூட நிலைகலங்கிய காலத்தில் அவர்கள்மேல் தனிப்பெருங்கருணை கொண்டு அவர்கள் அகந்தையை வேரறுத்து அவர்கட்கு மெய்ஞ்ஞானத்தைப் புகட்டியருள்வதற்காகக் கிருபை கடலாகிய சிவபெருமான் அவர்களிடையில் இவ் வறிவொளி மலை வடிவில் ஞானகுருவாய் எழுந்தருளினர். எனவே எல்லோரிடத்துள்ளும் ஆன்ம சொரூபமாய் விளங்கும் சிவபெருமான் புறத்திலும் இக் கிரியுருவாக எழுந்தருளியிருப்பது ஜீவர்கள்பால் அவருக்குள்ள எல்லையற்ற பரம கருணையே யாகும். அதுவே அருணாசலனைப் பார்த்து ஸ்ரீ பகவான் **'கிரியுருவாகிய கிருபைக்கடலே'** என்றும் **''அருள் நிறைவான அமுதக்கடலே''** என்றும் **'இதய மன்றகம் அசலமா நடமிடும் அருண மலையெனும் எலையறும் அருளொளிக் கடலே'** என்றும் **'அருள்நனி சுரந்து அங்கு அருவியாய்ப் பெருகும் அருண மா மலை எனும் அன்பே'**

என்றும் ' **அன்புரு அருணாசல**' என்றும் '**கருணார் ணவமாய்க் கருதக் கதிநல் கருணாசலசிவ மீதாம்**' என்றும் இம் மலையை வர்ணித்து, வர்ணித்து மகிழ்கிறார் .

கருதக் கதிநல்கும் அருணாசலம் எவ்வாறு மனத்தின்கண் செயல்பட்டு அகந்தையை வேரறுக்கிறது என்பதை ஸ்ரீபகவான் கீழ்க்கண்ட ஸ்ரீ அருணாசல பதிகம் பாடல் 10-ல்

பார்த்தனன் புதுமை! உயிர்வலி காந்த
பருவதம்! ஒருதரம் இதனை
ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி
ஒருதன(து) அபிமுக மாக
ஈர்த்(து) அதைத் தன்போல் அசலமாச் செய்(து)அவ்
இன்னுயிர் பலிகொளும்; இஃதென்!
ஓர்த்துய்மின் உயிர்காள் உளமதில் ஒளிர் இவ்
வுயிர்க்கொலி அருணமா கிரியே.

என்று கூறுகிறார். ''ஒரு தனது அபிமுகமாக ஈர்த்து'' என்ற சொற்கள் ''தன்னை ஒருமுறையாவது நினைக்கும் உயிரை, ஒப்பற்ற அத்வைத உண்மைப் பொருளாகிய தன்னை நோக்கும்படி இழுத்து வசப்படுத்தி'' என்ற கருத்தையே குறிப்பனவாகும். அதாவது, இவ் வருணாசல நினைவானது மனத்தின் பஹிர்முகப் பிரவிருத்தி சேஷ்டைகளை யெல்லாம் ஒடுக்கி, ஆன்மாவாகிய தன்னை நோக்கும்படி இழுத்து வசப்படுத்தி, தன்னைப் போலவே அசலமாகச் செய்கிறது. இவ்வாறாக, அருணாசல நினைவானது மனத்தை எல்லார்க்கும் நேர்மார்க்கமான ஆன்ம விசார மார்க்கத்திற்கு இட்டுச் செல்கிறது என்பதை ஸ்ரீ பகவான் இப்பாடலில் உறுதிப்படுத்துகிறார். இது ஸ்ரீ பகவானது சுவானுபவமே. அருணாசலத்தின் தன்னிகரற்ற இவ்வலிமையை ஸ்ரீ பகவான் இப்பாடலின் கடைசி அடியில் ''**ஓர்த்துய்மின் உயிர்காள் உளமதில் ஒளிர் இவ் வுயிர்க்கொலி அருணமாகிரியே**'' என்று மிகுந்த உறுதிப்பாட்டுடன் ஸ்ரீ பகவான் அறிவுறுத்துகிறார். இதனையே பின்னர் ஸ்ரீசாது ஓம் அவர்கள்

தன்னை நினைவுறுத்தத் தக்கதோர் முன்னிலையா
யென்னை வசீகரிக்கும் எந்தையே – உன்னை
அருணா சலமென் றகநினைக்க நானென்
றொருமா வுணர்வா யுளாய். – ஸ்ரீ ரமண ஸஹஸ்ரம்-989

(காணப்படும் எந்த முன்னிலைப் பொருளும் பிற எண்ணங்களையே பெருக்கித் தருவனவாயிருக்க, ஆனால்) ஆன்மாவாகிய என்னை ஞாபகப்படுத்தித் தரத்தக்க ஒரு முன்னிலைப் பொருளாக என்கண்முன் எழுந்து வந்து என்னை வசீகரிக்கின்ற என் தந்தையே, உன்னை 'நீ இந்த ஸ்ரீ அருணாசலமே என்று உள்ளத்தில் **நினைக்கும்போது** நீ அங்கு **'நான்'** என்ற ஒரு பேருணர்வாக விளங்குகின்றாய்!

அருணாசல ரூபம் :

அன்பர்கள் சிலர் ''அருணாசலம் என்பதே ஆன்மாவாகையால், இந்த மலைக்கு ஏன் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்?'' என்று கேட்போருக்கு ஸ்ரீ பகவான் இம்மலை என்னை உட்பட இங்கு கூடியிருக்கும் எல்லா பக்தர்களையும் ஈர்த்திருக்கிறது என்றும், ஆதலால் அருணாசலத்தின் ஆற்றலை யாரும் மறுக்க முடியாது என்றும் விடை யளித்துள்ளார்.

அருணாசல நாமரூபத்துக்கு ஸ்ரீ பகவான் அளித்த முக்கியத்துவத்தை மேலும் முழுமையாகப் புரிந்து கொள்ள, அவருடைய உபதேசங்களைப் பரந்த நோக்கத்துடன் காண்பது அவசியம். 'உள்ளது நாற்பது' 4வது பாடலில் **''உருவந் தானாயின் உலகு பரம் அற்றாம்''** என்கிறார். 'ஸ்ரீ அருணாசல அஷ்டகம்' 3வது பாடலில் அருணாசலத்தை விளித்து **''நின்னை யான் உரு என எண்ணியே நண்ண, நிலமிசை மலை எனும் நிலையினை நீதான்''** என்று பாடுகிறார். அதாவது, நாம் தேகத்தை 'நான்' என்று பாவிக்கும் வரையில் இம் மலை இறைவனே என்பதும் உண்மையே. நாம் உடம்பை 'நான்' என்று அபிமானித்தலால், பரம்பொருளாகிய சிவபிரான் நம் மீதுள்ள அளவற்ற கருணையால் இந்த மலையுருவாகத் திகழ்கிறார் என்றும், இதனால் அச்சந்நிதியில் அவரைத் தரிசித்து, நினைத்து, வசித்து வலம் வந்து அதனால் அவர் அருளையும் ஞான

விளக்கத்தையும் அடையலாம். ''**விண்டிடாது உன் நிலே விளக்கிட என்றே விண்தலம் அசலமா விளங்கிட நின்ருய்**'' என்று 'ஸ்ரீ அருணுசல அஷ்டகம்' இரண்டாவது பாடலின் கடைசி அடியில் பகவான் அருள்கிருர்.

நாம் நம்மை ஒரு நாமரூபமாக - ஓர் உடலுருவமாக - உணர்கின்ற வரையில், நம்மால் இறைவனே நாமரூப முடையவராகத் தான் கருத இயலும். இறைவனே ரூபமற்றவராக எண்ண முயன்ருலும், இறைவனேப் பற்றிய அவ் வெண்ணமே மனத்தால் கற்பனே செய்யப்பட்ட ஓர் உருவமாகும். அதனுல் தான் ஸ்ரீ பகவான் ''**உன் உரு அரு என உன்னிடின், விண் நோக்குற உலகு அலே தரும் ஒருவனே ஒக்கும்**'' என்று 'ஸ்ரீ அருணுசல அஷ்டகம்' மூன்ருவது பாடலின் இரண்டாவது அடியில் கூறுகிருர்.

எப்பொழுதும் நாமரூபத்தையே பற்றியிருக்கும் மனித மனத்திற்கு இறைவனின் ரூபம் எவ்வளவு அவசியமும் முக்கியமுமாகும் என்பதை நன்கு அறிந்திருந்த உத்தம ஞாஞசிரியரான ஸ்ரீ பகவான், அருணுசல ரூபத்தின் ஒப்பற்ற அருட்சக்தியையும் தம்முடைய ஸ்வானுபவத்தி லிருந்து உணர்ந்திருந்தார். **மனத்தை ஆன்மாவின்பால் திருப்பி அதனுல் அகந்தையை வேரறுக்கும் இவ் வருட்சக்தியை அருணகிரியைத் தவிர இறைவனின் வேறு எந்த ரூபத்திலும் உணர இயலாது.** 'ஸ்ரீஅருணுசல பதிகம்' 11வது பாடலில் ''**கிரியிது பரமாக் கருதிய என்போல் கெட்டவர் எத்தனே கொல்லோ!**'' என்று வியப்புடனும் ஆனந்தத்துடனும் விளிக்கிருர்.

தெய்வமென் றுன்னேச் சாரவே யென்னேச்
சேர ஒழித்தாய் அருணுசலா.

— அக்ஷரமணமாலே - 48

செய்பல கன்மத் திறமையி ஞற்ருன்
சித்தித் திடுஞ்சுக மெனநம்பி
நைவகை விடாது நாஞ விதத்தவம்
நாடிட வேனு(ம்) நாஞெருவன்

உய்வது நலமென் றுன்னிமற் றிதற்கே
யுதவிடத் தக்க உறுதுணையாந்
தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேரவொ ழித்தாய் ரமணேசா.

– விரிவுப்பாமாலை - 48

ஸ்ரீ ரமணேசா, திறமையோடு கூடிய பலவிதமான தவங்களான கர்மங்களைப் புரிவதால்தான் சுகானுபவங் கிட்டும் என்று நம்பிக்கொண்டு, அந்த நானாவித கர்மங்களையெல்லாம் தவறுமல் நடத்தி முடிப்பதற்காகவாவது 'நான்' என்று ஒருவியக்தி நசிக்காமல் இருக்கவேண்டும் என்றும் (அதனால் 'என்னைக் காப்பாற்று' என்று வேண்டிக்கொண்டு) என்னை அப்படிக் காப்பாற்றத்தக்க உற்ற துணையான ஓர் தெய்வம் நீயே என்றும் நம்பிக் கொண்டு நான் உன்னைநாடி வந்தடைந்தேன். ஆனால் அதற்கு மாறுக நீ என்னை (என்தனிவியக்தி இருப்பை) அடியோடு அழித்து விட்டாயே! அந்தோ!

இருந்தொளி ருனைவிடுத் தடுத்திட றெய்வ
மிருட்டினை விளக்கெடுத் தடுத்திட லேகா
ணிருந்தொளி ருனையறி வுறுத்திடற் கென்றே
யிருந்தனை மதந்தொறும் விதவித வுருவா
யிருந்தொளி ருனையறி கிலரெனி லன்னே
ரிரவியி னறிவறு குருடரே யாவா
ரிருந்தொளி ரிரண்டற வெனதுளத் தொன்று
யிணையறு மருணமா மலையெனு மணியே.

– ஸ்ரீ அருணாசல அஷ்டகம்-4

உன்னை நினைப்பதுநான் றன்னை நினைப்பதுவே
யென்னை நினைப்ப தெண்ணுமையே–அன்னதூஉம்
நானென் றெழாதிருக்கும் நாட்டமே; நாடுவது
மேனென் னிருப்பே அது.

– ஸ்ரீரமண ஸஹஸ்ரம்-990

நான் உன்னைச் சரியாக தியானிக்க வேண்டுமென்றால், 'நான்' என்று விளங்கும் என்னை தியானிப்பதே அதுவாகும். என்னை

அவ்வாறு நினைப்பது என்றால், மற்ற எதையும் எண்ணாது இருப்பதே அதுவாகும். மற்றவற்றை நினையாது இருத்தல் என்றால், 'நான்' என்ற அகந்தை எழாதபடி 'இருக்கின்றேன்' என்ற உணர்வின்மேல் நாட்டங் கொள்வது மட்டுமே அதுவாகும். இவ்வாறு தன்னை நாடுவது என்ற ஒரு முயற்சியும் ஏன்? (இருப்பு தன்னை அறியும் அறிவு ஆகிறதல்லவா?) ஆகவே தன்னாட்ட முயற்சியுமற்று தானாயிருப்பதே அது.

என்னிருப்பி லேயே எழாதிருக்கும் பேராசை
யுன்னிடத்திற் கொள்ளு முயற்பத்தி....

– ஸ்ரீரமண ஸஹஸ்ரம் - 848

என் சொந்த நிலையாகிய ஆன்மாவிலேயே மூழ்கி, பிறகு என்றென்றும் அகந்தையாக எழாமல் இருக்கவேண்டும் என்று கொள்ளும் பேராசை தான் உன்னிடத்தில் நான் கொள்ளும் பக்தி வகைகளுக்குள் உயர்ந்ததாகும்.....

அருணாசல நாமம்

இறைவனின் எல்லா நாமங்களிலும் ஸ்ரீ பகவான் உள்ளத்திற்கு மிக உகந்தது **'அருணாசலம்'** என்ற நாமமே. 108 பாடல்கள் கொண்ட'ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை' யில் ஒவ்வொரு பாடலும் 'அருணாசலா' என்ற நாமத்துடன் முடிகிறது; மற்றும் **'அருணாசல சிவ, அருணாசல சிவ, அருணாசல சிவ, அருணாசலா'** எனும் பல்லவியைக் கொண்டது. இந் நாமத்திடம் ஸ்ரீ பகவானுக்கிருந்த பேரன்பிலிருந்து, அருணாசல நாமம் அருணாசல ரூபத்துக்குச் சற்றும் குறையாத ஆற்றல் பெற்றதாக மதித்தார் என்பது தெளிவாகும். இவ்வுண்மை 'அருணாசல அக்ஷரமணமாலை' 70வது பாடலில் **"பெயர் நினைத்திடவே பிடித்திழுத்தனை; உன் பெருமை யார் அறிவார்? அருணாசலா!"** என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளதால் உறுதிப்படுத்தப் பெறுகிறது.

ஸ்ரீ பகவானுடைய வாழ்க்கையில் 'அருணாசலம்' என்ற தெய்வீக நாமத்தின்பால் அவருக்கிருந்த பேரன்பைச் சித்தரிக்கும் நிகழ்ச்சிகள் பல உள்ளன. ஆயினும் அவை

யாவற்றுள்ளும் அவருடைய அந்திம காலத்தில் நிகழ்ந்த பிற்கண்ட நிகழ்ச்சியே மனத்தை மிக உருக்குவதாகும். அவர் தேக வியோகம் அடைவதற்குச் சுமார் 25 நிமிடங்களுக்கு முன்னர், கூடியிருந்த அன்பர்கள் 'அருணாசலஅக்ஷரமணமாலை' யைப் பாராயணம் செய்யத் தொடங்கினார்கள். தம்முடைய ஆருயிர்த் தலைவனாகிய அருணாசலனுடைய நாமத்தைக் கேட்டதும் ஸ்ரீ பகவான் விழிகளைத் திறந்தார். அவை பிரேமையுடன் பிரகாசித்தன; அவை உகுத்த ஆனந்தக் கண்ணீர் கன்னத்தை நனைத்தது.

ஸ்ரீ பகவான் யாருக்கும் மந்திரதீட்சை அளிக்கவோ, மரபுப்படி யாரையும் தம்முடைய சீடனாகவோ ஏற்றுக் கொள்ளவில்லை யாயினும், அன்பர் பலர் **'அருணாசலம்'** என்பதையே அவர் உலகம் முழுமைக்கும் அளித்த நாம மந்திரமாக ஏற்றுக்கொள்கிறார்கள். குரு ஒருவர் விதிப்படி மந்திரோபதேசம் செய்யும் பொழுது, அம் மந்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரம் அல்லது த்வனிக்கும் உட்பொருளை அறிவித்து, அம் மந்திரத்தைத் தியானிப்பதால் அடையப் பெறும் பலனையும் கூறுகிறார். இம்முறைப் படியே ஸ்ரீ பகவான் 'ஸ்ரீ அருணாசல நவமணிமாலை' 2வது பாடலில் 'அருணாசலம்' என்ற நாமத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தின் பொருளையும் விளக்கி, இந் நாமத்தின் நினைப்பே முக்தியை அளிக்கும் என்று அறிவித்திருக்கிறார். அப் பாடல் கீழ்வருமாறு:

சத்திய சிற்சுகம் அன்றிப் பரவுயிர் சார் அயிக்கம்
அர்த்தஅத் தத்வ மசி அரு ணப்பொருள் ஆம்; அசலத்(து)
அர்த்தம் கனம்அது ஆகும்; செவ் ஆடக ஆர் ஒளியாம்
முத்தி நினைக்க அருள்அரு ணாசலம் உன்னிடவே.

சிவந்த பொன் போன்ற ஜோதிமயமானதும், நினைத்தால் முக்தியைத் தருவதுமான அருணாசலத்தின் பொருளை ஆராயுமிடத்து, அந்த 'அது நீயா யிருக்கிறாய்' என்னும் மஹாவாக்கியத்தின் அர்த்தமாகிற சத்து, சித்து, ஆனந்தம், மேலும் பிரம்ம-ஜீவக் கலப்பாகிய ஜீவப்பிரம்ம ஐக்கியம்

என்பதே 'அ-ரு-ண' என்ற சப்தத்தின் பொருளாகும்; 'அசலம்' என்ற பதத்தின் பொருள் மாண்புடையது என்பதாகும்.

'அருணாசலம்' என்ற நாமமந்திரம் ஸ்ரீ பகவான் உலகத்திற்கு அளித்த ஞான பஞ்சாக்ஷரி என்பது இதனால் நமக்குப் புலனாகிறது. மேலும் ஞானி ஒருவர் ஒரு மந்திரத்தை அளித்து அதன் ஒவ்வொரு அக்ஷரத்தின் சிறப்பையும் விளக்கும்போது, அவர் மெய்யாகவே தன்னுடைய அருட்சக்தியை அம் மந்திரத்தில் செலுத்துகிறார் என்பது மரபு. ஆகையால், **ஸ்ரீ பகவானுடைய அன்பர்கள் யாராயினும் ஒரு மந்திரம் பெற விரும்பினால், 'அருணாசலம்' என்ற நாமத்தையே ஸ்ரீ பகவான் எல்லாருக்கும் பொதுவாக அளித்த மந்திரமாகக் கொள்ளலாம்.**

அருணாசல நாமத்தின் ஆற்றல் ஸ்ரீ பகவானால் ஒரு சமயம் நேர்முகமாகவே உறுதிப்படுத்தப்பட்டது. 1948 ஆம் ஆண்டில் மும்பையிலிருந்து வந்த அன்பர் ஒருவர் 'அருணாசல சிவ' என்ற நாமத்தைப் பல்லாயிரக்கணக்கில் தான் எழுதிய ஒரு நோட்டுப் புத்தகத்தைத் தன்னுடன் கொண்டுவந்தார். அப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் ''பகவானே! ஒரு மிருகம் காசியில் இறந்தால், நிச்சயமாக முக்தி யடையும் என்று ஸ்ரீ சாரதாமணி அம்மையார் (ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனைவி) கூறியதாக அவர் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் காசியில் மரிக்கும் வரத்தை எனக்குத் தந்தருள்வீர்'' என்ற பொருள்பட ஒரு வேண்டுகோளை எழுதி அப்புத்தகத்தை ஸ்ரீ பகவானிடம் கொடுத்தார். அந்த நோட்டுப் புத்தகத்தைப் பார்வையிட்ட ஸ்ரீ பகவான் கடைசிப் பக்கம் வந்ததும் அவ்வன்பரின் பிரார்த்தனையை வாய்விட்டுப் படித்தார். உடனே மிகுந்த ஆச்சரியம் அடைந்து ''ஸ்மரணாத் அருணாசலம்!'' என்று வியப்புடன் மொழிந்தார். (காசியில் மரிப்பார்க்கு முக்தி என்று கூறும் வடமொழிப் பாடலில்தான் **'ஸ்மரணாத் அருணாசலம்'**, அதாவது நினைப்பவர்க்கு முக்தியருள்வது அருணாசலம், என்ற கூற்றும் வருகிறது') அதன் பின் ஸ்ரீ பகவான் சுழலும் புத்தக அலமாரியின் பக்கம் திரும்பி 'ஸ்ரீ அருணாசல புராணத்தை'

எடுத்து, கையில் வந்த ஒரு பக்கத்தைப் பிரித்து, அதனின்று ''ஒரு 'அருணாசல' மந்த்ரம் முக்கோடி 'நமசிவாய' பஞ்சாக்ஷரியின் ஆற்றலுக்குச் சமானம்'' என்ற பொருள் கொண்ட வாக்கியத்தைப் படித்துக் காட்டினார். இக் கருத்து 'ஸ்ரீ அருணாசல புராணம்' பாடல் 160ல் காணக் கிடைக்கிறது. அருணாசலத்தின் தன்னிகரில்லா ஆற்றலையும் மகத்துவத்தையும் வலியுறுத்தும் வேறு சில பாகங்களைப் படித்தபின், அப் புத்தகத்தை வைத்து விட்டு ''ஆரூரிற் பிறப்பது ஒருவனின் முன்வினையின் பயனைப் பற்றிய தொன்றாகும். இப்போது எங்காவது பிறந்தவன் ஆரூர் பிறப்பை எப்படி அடைய முடியும்? மேலும் குருடர்களாகிய மக்கள் பலர் எவ்வாறு சிதம்பர தரிசனம் செய்ய முடியும்? இன்னும் காலற்ற நொண்டியும், பிராயணம் செய்ய வியலாப் பிணியாளர்களுமான எளியவர்கள் எப்படிக் காசியில் போய் மரிப்பர்?'' என்று அவ் வன்பருக்கு விளக்கினார்.

அபயம் நல்கும் இவ்வருள் வாக்கின்படி ஸ்ரீ அருணாசலத் தியானம் ஒவ்வொருவர் உள்ளத்தும் உண்டாக வேண்டியதின் அவசியம் பெறப்படுகிறது.

''ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை'' என்ற ஆன்றோர் அனுபவத்தின்படி, ஞானத்தில் உண்மையான இச்சை கொண்டு விழைவார்க்கு அருணாசலம் எப்படியாவது தன்னை அறிவித்துவிடுகிறது.

அருணாசல க்ஷேத்திரத்தின் ஒப்பற்ற புனிதத் தன்மையும் ஆற்றலும் ஒரு சமயம் ஸ்ரீ பகவானின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியால் உறுதிப்படுத்தப்பட்டன. அன்பர் ஒருவர் ஸ்ரீ பகவானிடம் கொண்ட பேரன்பு காரணமாக அவரைத் தன்னுடைய சொந்த ஊரான சிதம்பரத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் நேரிடையாக ஸ்ரீ பகவானை அவ்வாறு கேட்காமல், ஸ்ரீ பகவான் எப்பொழுதாவது தில்லை நடராசப் பெருமானை தரிசித்திருக்கிறாரா என்று வினவத் தொடங்கினார். ஸ்ரீ பகவான் 'இல்லை' என்று பதில் கூறியபோது, அவ் வன்பர் சிதம்பரத்தின் மகிமையை விவரிக்கத் தொடங்கினார். அன்பர்

சொல்லிய எல்லாவற்றையும் பொறுமையாகக் கவனத்துடன் ஸ்ரீ பகவான் கேட்டார் எனினும், சிதம்பரத்தைக் காண ஆவலொன்றும் காட்டவில்லை. இதைக் கண்ட அன்பர் முடிவாக, ''சிதம்பரம் அருணாசலத்தையும்விட உயர்ந்த ஸ்தலம். ஏனெனில், பஞ்சபூத லிங்கங்களுள் சிதம்பரமோ ஆகாசலிங்கம்; ஆனால் அருணாசலமோ அக்கினி லிங்கம்தான். மண், நீர், காற்று, நெருப்பு என்ற நான்கு பூதங்களும் ஆகாசத்தில் அடங்குவதால், ஆகாசமே முதன்மையான பூதம்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட ஸ்ரீ பகவான் புன்முறுவல் பூத்து ''பரமாத்மாவான சிவபிரானுக்கு அன்னியமில்லாத சக்தியானவள் அப் பரம்பொருளின்றும் பிரிந்தாற் போல் தோன்றும்போதுதான், ஐந்து பூதங்களுக்கும் இருப்பு உண்டாகிறது. இதன்படி பஞ்சபூதங்களும் சக்தியின் படைப்பே யாதலால், அவள் அவற்றிற்கெல்லாம் உயர்ந்தவள். ஆகையால், பூதங்கள் ஒடுங்கும் இடத்தைவிட, சக்தியே ஒடுங்கும் இடம் மிக மேலானதாகும். தில்லையில் சக்தி நடனமாடுவதால், சிவபிரானும் அவள்முன் தாண்டவமாடி அவளை அசலையாகச் செய்கின்றார். ஆனால் அருணாசலத்திலோ சிவபெருமான் எப்பொழுதும் அசலனாகவே இருப்பதால், **சக்தி பேரன்பினால் கட்டுண்டு தானாகவே முயற்சியின்றி அவனுள் ஒடுங்குகின்றாள்.** ஆகவே இப் பன்மையான தோற்றத்தை உண்டாக்கிய சக்தியே இறைவனுள் இத் தலத்தில் மிகப்பிரியமுடன் ஒடுங்குவதால், அருணாசலம் தலைசிறந்த, பேராற்றல் வாய்ந்த தலமாக விளங்குகிறது. ஆகையால் **''பொய்த் தோற்றமாகிய துவிதக் காட்சி முற்றும் அழிந்து மெய்க்காட்சி பெற விழையும் பக்குவ சாதகர்களுக்கு அருணாசல க்ஷேத்திரத்தில் தக்க அருளுதவி மிகுதியாகக் கிடைக்கும்''** என்று கூறினார்.

இதன்பின் *24-7-1928*ல் ஸ்ரீ பகவான் இந்த விடையை ஒரு வெண்பாவாகச் சுருக்கி எழுத, அவ்வெண்பா பின்னர் 'ஸ்ரீ அருணாசல நவமணிமாலை'யில் முதற் பாடலாக இடம்

பெற்றது. அவ்வெண்பா பின்வருமாறு:

அசலனே ஆயினும் அச்சவை தன்னில்
அசலையாம் அம்மையெதிர் ஆடும் - அசல
உருவிலச் சத்தி ஒடுங்கிட ஓங்கும்
அருணா சலமென் றறி.

இறைவன் சலனமற்றவனே யானாலும், தில்லை யம்பலத்தில் சக்தி தேவியின் முன்னிலையில் (அவள் தன் ஆட்டம் தோற்று ஓய்ந்து நிற்கும்படி) ஆடுகின்றார். (ஆனால் இந்த க்ஷேத்திரத்திலோ) சலனமற்ற தனது அருணாசல வடிவில் (பரமாத்ம சொரூபத்தில்) அந்த சக்தியானவள் (ஆடாமல், அன்புடன்) ஒடுங்கிவிடுவதால், இவ் வருணாசல க்ஷேத்திரம் சிதம்பரத்தைவிட சிறப்போங்குவதாம் என்று அறிக.

அருணாசலத்தின் குருத்துவம் :

முக்தி அருள வல்லதும், அகந்தையை அழிக்க வல்லதும், 'தேகமே நான்' என்ற பொய் பாவத்தை அகற்ற வல்லதுமான மிகச் சிறந்த ஞானகுருவாக எக்காலும் புகழ்பெற்றது அருணாசலம். பிரம்ம விஷ்ணுக்கள் அகங்காரத்தாலும் கர்வத்தாலும் அறிவழிந்து தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கியபோது, அருணாசல சிவபெருமான் ஜோதிஸ்தம்ப வடிவில் அவர்கள்முன் தோன்றி அவர்களுடைய அகங்காரத்தை அழித்து மெய்ஞ்ஞானத்தை போதித்தார். பார்வதிதேவி, தான் எந்த நிலையை அடைந்தால் தன்னால் தவறிழைக்க முடியாதோ அந் நிலையைத் தனக்கு அருளுமாறு பிரார்த்தித்த போது, சிவபிரான் அவளை அருணாசலத்திற்கு அனுப்ப, இங்கே அவரிடம் அவள் ஒடுங்கி ஐக்கியமானாள். இங்ஙனம் அருணாசலம் பிரம்மவிஷ்ணுக்களுக்கே குருவாகவும், பார்வதிதேவி தன்னுடைய தனி வியக்தித்வத்தை இழந்த இடமாகவும் திகழ்கிறது.

காலங்காலமாக மகான்கள், அகந்தையை வேரறுத்து ஆத்ம ஞானமளிக்கும் அருணாசலத்தின் ஒப்பற்ற ஆற்றலைப் போற்றி, தமிழ், வடமொழி மற்றும் வேறு இந்திய

மொழிகளிலும் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். சைவசமய குரவர்களான ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் அருணாசலத்தைப் புகழ்ந்து பாடியிருக் கிறார்கள். ஸ்ரீ பகவானால் பலமுறை குறிப்பிடப்பெற்ற ஒரு தேவாரத்தில் திருஞானசம்பந்தர் இம் மலையை "**ஞானத் திரளாய் நின்ற பெருமான்**" என்று வர்ணிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருணாசலத்தை நினைந்து "**அண்ணாமலையானே, ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே!**" என்று பாடுகிறார்.

இப் புராணக் கதைகளும், பண்டை ஞானிகளின் பாடல்களும், அருணாசலமே பரம ஞானகுரு என்பதை நிலைநாட்டுகின்றன. இவ் வுண்மையே ஸ்ரீ பகவானால் தனிச்சிறப்புடன் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 'அக்ஷர மணமாலை' 19 ஆம் பாடலில் அருணாசலம் அவருக்கு குரு உருவாய் ஒளிர்வதாக வெளிப்படையாகவே கூறுகின்றார். மேலும் இதே பாடலில் நம்முடைய குற்றங்களையெல்லாம் (முதற் குற்றமாகிய அகந்தை உட்பட) அழிந்து நமக்கு நற்குணங்களை நல்கி நம்மை ஆள்வதுவே உண்மையான குருவின் அருட்பணி என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

தம்முடைய வேறு பல பாடல்களிலும் ஸ்ரீ பகவான், அருணாசலத்தின் அருளுதவி குருவின் அருளுதவியே என்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். உதாரணமாக, 'அருணாசல அக்ஷரமணமாலை'யில் அருணாசலமென அகமே நினைப்பவர் அகத்தை வேரறுப்பது அருணாசலம் என்றும் (பாடல் 1), தெய்வம் என்று அதைச் சார்பவரைச் சேர ஒழிக்கும் அருணாசலம் என்றும் (பாடல் 48), மானங்கொண்டுறுபவர் மானத்தை அழிப்பது அருணாசலம் என்றும் (பாடல் 77) பாடுகின்றார். மேலும் அருணாசலம் சொல்லாது சொல்லும் மௌனத்தின் மூலம் உபதேசம் செய்கிறது என்பதையும் (பாடல் 36), திரும்பி அகந்தனை தினம் காணும் ஆன்ம விசார மார்க்கத்தை உபதேசிக்கிறது என்பதையும் (பாடல் 44) வெளிப்படுத்துகிறார். ஞானமில்லாது ஞானப்பசியால்

வாடுவோரின் தளர்வற ஞானந் (அனன்னிய பாவம்) தெரித்தருளவும் (பாடல் 40), தானே தத்துவம் என்பதைக் காட்டவும் (பாடல் 43), பௌதீக உடலின் பற்று அறவும் (பாடல் 75) அருணாசலத்திடம் வேண்ட நமக்கு வழிகாட்டுகிறார். தம்முடைய அனுபவத்திலிருந்தும் அருணாசலத்தினுடைய குருத்துவத்தின் மேன்மையை தெரிவிக்கிறார். 'ஸ்ரீ அருணாசல நவமணிமாலை' 8வது பாடலில் புன்புலன் சழக்கில் துன்புறும் தவிக்குத் துஞ்சிடும்படிக்கு அருணாசலம் 'தன் பதம்' தனக்குத் தந்ததாகப் பாடுகின்றார்; 9வது பாடலில் ''என் மனம் மன்னி இழுத்து உன் பதத்தில் இருத்தினை'' என்று அருணாசலத்தின் அருட்சித்திரத்தை விவரிக்கின்றார்.

ஸ்ரீ பகவான் அருணாசலத்தின் ஆற்றலைப் பற்றிக் கூறியவை யெல்லாம், அவர் குருவின் ஆற்றலைப் பற்றிக் கூறியவையோடு முற்றிலும் ஒத்திருக்கின்றன. 'குருவாசகக் கோவை' 268வது பாடலில் தன்னைச் சரணடைகின்ற எத்தகைய உயிரையும் தனது இனிய அருளால் ஞானான்ம சொரூபத்திற் சேர்க்கும் பெருவலிமை மிக்கவனே சற்குரு ஆவான் என்று கூறுகிறார். சீடனை ஆன்மசொரூபத்திற் சேர்க்க குரு பலவித முறைகளில் செயலாற்றுகிறார். ''குரு வெளியு முள்ளார்; உள்ளுமுள்ளார். வெளியிலிருந்து மனம் உண்முகமாகும்படித் தள்ளுகிறார். உள்ளிருந்து மனத்தைத் தன்வச மிழுத்து, அதை அமைதியாக வைத்துக்கொள்ள உதவுகிறார். இதுதான் குரு கிருபை'' என்று ஸ்ரீ பகவான் 'ஸ்ரீ மஹர்ஷி வாய்மொழி' பக்கம் 36ல் கூறுகிறார். குரு வெளியிலிருந்து உபதேசங்கள் மூலம் சீடனின் மனத்தை ஆத்மாபிமுகமாக ஆக்குவது மட்டுமின்றி, தம்முடைய உருவத்தின் அணுக்கமாகிய சற்சங்கத்தின் மூலம் உண்முகமாகி ஆன்மாவை நாடத் தேவையான அன்பையும் மனோவலிமையையும் சீடன் பெறச் செய்கிறார். வாய்வழி உபதேசங்களை அளிக்க குரு மனித உருவில் இருப்பது அவசியமாகிறது. ஆனால் சற்சங்கமும் நுட்பமான உள்ளுதவியும் அளிக்க குரு எந்த ரூபத்திலும் இருக்கலாம்.

நமக்குத் தேவையான எல்லா உபதேசங்களையும் அளிக்க ஸ்ரீ பகவான் நரவடிவில் குருவாக வந்து, அருணசலம் கிரி உருவான குரு என்றும், அதனுடன் நாம் எப்பொழுதும் சற்சங்கம் கொள்ளலாம் என்றும் அதனுடன் வெளியிட்டிருக்கிருர். எல்லா மனித உடலைப் போல குருவின் வடிவமும் ஒரு நாள் மறையும்; ஆனல் அருணசல ரூபமோ எப்பொழுதும் இருந்துவரும். இங்ஙனம், ஸ்ரீ பகவான் தம்முடைய மானிட தேகத்தைக் களைந்து விட்டாலும், நமக்குத் தேவையான எல்லா வெளிமுக உதவியையும் நல்கியிருக்கிருர். அதாவது, தம்முடைய உபதேசங்களை என்றும் அழியாதவாறு விட்டுச்சென்றும், நாம் எப்பொழுதும் சற்சங்கம் கொள்வதற்கு ஒரு உருவைக் காட்டியும் அருளியுள்ளார். ஸ்ரீ பகவானுடைய பக்தர்களுக்குத் தேவையான உதவியும் ஞானவழி விளக்கமும் அவர்தம் உபதேசங்கள் மூலமும் அருணசல சற்சங்கம் மூலமும் எப்பொழுதும் கிடைப்பதால், **அவ் வன்பர்கள் வெளியில் வேறு ஒரு குருவைத் தேடத் தேவையே இல்லை.** இவ் வுண்மையைத் தமது சுவானுபவத்திலிருந்து நன்குணர்ந்த ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள்

ரமண திருவடிவம் நம்மையழ விட்டே
இமையும் பிரிந்ததில்லை; என்றும் - ரமண
சரீரம் விரிந்(து) அவர்கொள் சாசுவத விச்வ
சரீரம் அருண சலம்.

என்று 'ஸ்ரீ அருணசல வெண்பா' 29வது பாடலில் அருள்கின்ருர்.

அருணசல சற்சங்கத்தின் ஆற்றலை ஸ்ரீபகவான் பலமுறை உறுதிப்படுத்தி யிருக்கிருர். டாக்டர் T.N. கிருஷ்ணசுவாமி என்ற அன்பரிடம் ஒருமுறை கீழ்க்கண்டவாறு கூறியதாகக் குறிப்பிடுகிருர்: ''இந்த மலை முழுவதுமே தெய்வீகமானது. இது சிவனேதான். நாம் நம் உடலை எப்படி 'நான்' என்று அபிமானிக்கி ருேமோ, அப்படியே சிவபிரான் இம் மலையை 'நான்' என்று அபிமானிக்கிருர். ஞானமே உருக்கொண்டதுதான்

தூலவடிவத் திருமேனியான இவ்வருணாசலம். தன்னைத் தேடிவரும் அடியார்களின் மேல் பெருகும் பெருங் கருணையால்தான் ஊனக் கண்களுக்குப் புலப்படும் இவ் வருணமலையாகச் சிவபிரான் வெளிப்பட்டுள்ளார். **அடியார்கள் இம்மலையின் அருகே வசிப்பதனாலேயே ஆறுதலும் ஞானவழி விளக்கமும் பெறுவர்".**

அருணாசல பிரதக்ஷிணம் :

அருணாசலம் சத்தாகிய மெய்ப்பொருளின் ஸ்தூல வடிவம். ஆதலால் அதனுடன் எந்த விதத்தில்தொடர்பு கொண்டாலும் அது சற்சங்கமே. அருணாசலத்தை ஸ்மரிப்பது சற்சங்கம்; அருணாசலத்தைத் தரிசிப்பது சற்சங்கம்; அதனருகில் வசிப்பது சற்சங்கம். ஆனால் அருணாசலத்தின் சற்சங்கத்தைப் பெற மிகச் சிறந்ததொரு வழி அருணகிரியைப் பிரதக்ஷிணம் செய்வதே; அதாவது, காலணியின்றி வலமாகச் சுற்றி நடப்பதே.ஸ்ரீ பகவான் அருணாசலம் அடைந்தது முதல் இறுதிவரை காலணி அணியவே யில்லை. மற்றும் ஆதிசங்கரர் தன் பாதயாத்திரையின் போது, அருணகிரி லிங்கங்களால் சூழப்பட்டிப்பதைக் கண்டு தூர இருந்தே தரிசித்துச் சென்றனர்.

இம்மலையின் சிறு துளியும் இலிங்கவுரு வெனில் இன்னும்
எம் மகிமை யென் சொல்லி இசைப்போம்இக் கிரிவலத்தால்
இம்மையிலே முக்தியுறல் எளிதாக எய்துமெனில்
அம்ம! இதன் அருண்மகிமை அளவிடற்கு மெளிதாமோ.

சீரப்பன் வாழ்கயிலை சிரமூன்றி சென்றவரும்
காரைக்கா லம்மையெனக் கடவுளரு ணாசலத்தின்
ஊரைக்கால் தீண்டாமல் ஒதுங்கிதுதி சங்கரனின்
பேரைத்தான் பேசிடினும் பிறவிவினை பிடியாதே

சீரருணா சலமெனவே சிந்தைநினைப் பார்பிறவி
வேரறுமென் றுலகருணை வெற்பைவலம் மேற்கொள்வோர்
காரருணை மாமுடியே கண்களிக்கக் கண்டிருப்போர்
யாரடையார் ஆன்மசுகம் யாதுபெறார் காமியமே?

ஆதலினால் அன்புருவண் ணாமலையை அண்டுபவர்
ஏதகைய வினயமுடன் இணைதலவ சியமெனவே
ஓதுவதும் வேண்டுவதோ உலகவலம் ஒருகோடி
பாதவல மிதையொருகால் பண்ணியதற் கிணையாகா.

– ஸ்ரீ ரமணாயனம்

கிரிப் பிரதக்ஷிணத்திற்கு ஸ்ரீ பகவான் அளித்த உன்னத முக்கியத்துவம் அவருடன் வாழ்ந்த எல்லா அன்பர்களுக்கும் நன்கு தெரியும். அவரே எண்ணற்ற முறை கிரிவலம் செய்து, பக்தர்களைத் தம் உதாரணத்தைப் பின்பற்றி நடக்குமாறு தாமாகவே ஊக்குவித்தார். ''பக்தர்கள் கேட்டாலொழிய அறிவுரை ஒன்றும் தாமாகவே எளிதில் கூறாத ஸ்ரீ பகவான் ஆன்ம சாதனையில் முன்னேற கிரிவலம் அனுகூலமாக இருக்கும் என்று சொல்லி பக்தர்கள் கிரிவலம் செய்வதை மனப்பூர்வமாக ஊக்குவித்தார்'' என்று திருமதி லூஸியா ஆஸ்பார்ன் எழுதுகிறார். (The Mountain Path, ஜனவரி 1974, பக்கம் 3) பகவானே கிரிவலத்தின் மாண்பைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டதிலிருந்தும், ஆன்மீக பக்குவ மடைந்தவர்களாகக் கருதப்பட்ட பகவானுடைய நெருங்கிய சீடர்கள் அனைவரும், மற்றும் பல்லாயிரக் கணக்கானவரும் பிரதக்ஷிணம் செய்வதிலிருந்தும் கிரிவலத்தின் முக்கியத்துவம் தமக்குத் தெளிவாகத் தெரிந்ததாக தேவராஜ முதலியார் குறிப்பிடுகிறார்.

கிரிவலத்தின் ஆற்றலைப்பற்றி ஸ்ரீ பகவான் கூறியவற்றில் ஒரு சிறிதளவே குறித்து வைக்கப்பட்டிருப்பினும், அவர் அதை மிகுந்த ஆன்ம லாபமளிக்கும் கிரியையாகக் கருதினார் என்பதில் ஐயமில்லை. ''தியானம் மற்றும் இதர மனமடக்கும் பயிற்சிகளால், பெரும் போராட்டம், முயற்சி இவற்றின் பிறகே அடையப்படும் நன்மைகளெல்லாம் கிரிவலம் செய்பவர்களால் பெருமுயற்சியின்றியே அடையப்பெறும்'' என்று ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். ''தியானம் செய்ய இயலாதவர்கள் அருணாசலத்தைப் கிரிவலம் செய்வதால் தம் முயற்சியில் வெற்றி பெறுவர்'' என்று ஸ்ரீ பகவான் கூறியதாக

சூரிநாகம்மா எழுதுகிறார். ''கிரிவலத்தைவிட மேலானது வேறென்ன இருக்கிறது? அது ஒன்றே போதுமே'' என்று ஸ்ரீ பகவான் ஒருசமயம் தம்மிடம் கூறியதாக குஞ்சு சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

ஆன்ம லாபம் அளிப்பதில் அருணாசல கிரிவலத்திற்குள்ள வல்லமையைப் பற்றிக் கூறும்போது, சில சமயங்களில் ஸ்ரீ பகவான் ஸ்ரீ அருணாசல மாஹாத்மியத்தில் உள்ள வஜ்ராங்கத பாண்டியன் கதையைக் கூறுவது வழக்கம்.

முன் காலத்தில் வஜ்ராங்கத பாண்டியன் என்ற அரசன் இருந்தான். அவன் வேட்டையாட விரும்பி அருணாசலம் வரை எட்டிய ஒரு காட்டில் பிரவேசித்தான். அங்கு ஒரு புனுகுப் பூனையைக் கண்டு, அதை அடைவதற்காக தன் குதிரையிலிருந்து கொண்டு துரத்தினான். துரத்தப்பட்ட பூனை சோணகிரியைச் சுற்றி வலமாய் வேகமாக ஓட, அப்படிப் போகும்போது அரசன் களைத்து கீழே விழுந்தான். தன்னை மறந்தான். தான் சக்தியற்றது ஏன், தன் குதிரை எங்கே என்று சிந்தித்தான். அச்சமயம் ஆகாய வெளியில் வெளிச்சம் தோன்றியது. இவன் எதிரிலேயே பூனையும் குதிரையும் தங்கள் சரீரங்களைப் பூமியில் களைந்துவிட்டு வித்யாதர உருவில் கூறலானார்கள்.'' அரசே, நாங்கள் இதற்கு முன் வித்யாதரர்கள். ஒருசமயம் துர்வாசருடைய தபோவனத்தில் எங்கள் அறிவின்மையால் நந்தவனத்தைப் பாழ் செய்யவே, அவருடைய சாபத்தால் இவ்வாறு புனுகுப் பூனையாகவும், குதிரையாகவும் பிறந்தோம். நாங்கள் அவரைச் சரணமடைந்து, சாப விமோசனம் வேண்ட ''நீங்கள் இருவரும் சோணாத்ரியைப் பிரதக்ஷிணம் செய்து சாபத்தைப் போக்கிக் கொள்வீர்'' என்றார். அதன் பலனே இது. மற்றும் ''நீ வாகனமேறிப் பிரதக்ஷிணம் செய்ததால் உன் கதி இப்படி. நாங்கள் கால் நடையாக சென்றதால் எங்களுக்குப் பூர்வ பதவி கிட்டியது என்றனர்.

வானிடை யேசுக வாழ்வுடை யாரெனு மாமலை வலமாகுங்
கால், நடை யேபுரி வார்;விலக் காவொரு காரண மாகாதே

தான்அடை புண்ணிய மேகெடும் வாகனந் தன் மிசை போவார்க்கே
கால்நடை யேதகுங் கால்நடை யேதகும், வாகன மாகாதே.

வாகன மன்றியு மேவலம் செய்திட வந்தவர் தம் பாதத்
தே,கவ சந்தரித் தேநடை கொள்வது மேசிவ அபராதம்
போகந லத்தொடு மேகவலஞ் செயின் புண்ணிய மழிவாகும்
தேகமி மாமலைத் திவ்விய தூளியைத் தீண்டுதல் தவமாமே.

– ஸ்ரீரமணுயனம்

ஒருவன் காமியங்களின் பூர்த்திக்காகவே பிரதக்ஷிணம் செய்யத்தொடங்கினுலும், மனம் நாளடைவில் பக்குவ மடைந்து, வைராக்கியம், ஸ்வாத்ம பக்தி ஆகியவற்றை அளிக்கும் தெளிவான விவேகத்தைப் அவன் பெறுவான் என்பதை இக் கதை எடுத்துக்காட்டுகிறது.

அருணமா திரமாம்நானே அருளுருக் கணங்களோடும்
அருணமா திரவலத்தை அனுட்டிப்பன் அகிலமெல்லாம்
அருணல மடைமயுமா''றென் றரனுரை யாதலாலே
அருணமா கிரிவ லத்திற் கிணையதொன் றவனியுண்டோ?

'பிர'வெனு மெழுத்து பாபம் பெயர்த்தலாய், 'த'கரம் வேண்டும்
வரமெலா மளித்தலாகி, வாய்ந்ததோர் 'க்ஷி'கரத்தாலே
உரமுள விணையொழித்தும், உயர்முக்தி 'ண'கரமீயும்
தரமதே கிரிவலஞ்செய் தற்குள பொருளுந் தானே.

ஆதலா லருணையீசன் அக்கிரி வலமே செய்யும்
பாதமே பாதம் மேலும் பாபங்கள் இதனுல் தீர்ந்தோர்க்
கேதொரு கணக்குமில்லை இறைவனு மருணசைல
நாதனைத் தொழுதோர் பெற்ற நலஞ்சொலின் விரிவினுமே.

– ஸ்ரீரமணுயனம்

''ஸ்ரீ ரமணுயனம்'' என்னும் பாடற்கொத்து ஸ்ரீ பகவானின் சரிதமும், அருணுசல மாகாத்மியமும் கொண்டது. இது இன்னும் வெளிவராத ஏட்டுப்பிரதியாகவே உள்ளது.

பொதுவாக, காமியங்களின் பூர்த்திக்காகவோ அல்லது ஆன்மஞானம் அடைவதற்காகவோ ஞானிகள் அல்லது சாஸ்திரங்கள் எந்த ஒரு துவித உபாசனையைச் செய்யும்படி விதித்தாலும், அவ்வுபாசனை முழு நம்பிக்கையுடன் செய்யப்பட வேண்டும் என்பதே தாத்பரியம். ஆனால் அருணாசலத்தின் ஆற்றலோ எவ்வாறென்றால், ஒருவன் நம்பிக்கையில்லாமல் பிரதக்ஷிணம் செய்ய நேர்ந்தாலும், அது தனது பலிதத்தில் தவறாது மனதை நிச்சயமாகப் பரிசுத்தப்படுத்தும் என்று ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். ''மலைவலம் செல்வது எல்லோர்க்கும் நல்லதே. கிரிவலத்தில் நம்பிக்கை இருக்கிறதா அல்லது இல்லையா என்பது முக்கியமன்று. நம்பிக்கை உள்ளவரோ அல்லது அற்றவரோ யாவர் ஆயினும், நெருப்பானது எப்படி தன்னைத் தீண்டிய எல்லோரையும் சுடுகின்றதோ, அதுபோன்றே இம் மலையும் தன்னை வலம் வரும் எல்லோர்க்கும் நன்மை பயக்கும்'' என்று ஸ்ரீ பகவான் தன்னிடம் கூறியதாக தேவராஜ முதலியார் குறிப்பிடுகிறார்.

அருணாசலம் கிரியுருவில் திகழும் ஞானாக்கினியாதலால், மலையை வலம் செய்யும்போது மனத்தின் பஹிர்முகப் பிரவிருத்திகள் தானாகவே எரிக்கப்படுகின்றன. நெருப்பினருகில் கொண்டுவரப்பட்ட ஈர விறகானது மெல்ல மெல்லக் காய்ந்து, பின் ஒரு நிலையில் தானே தீப்பற்றி எரிகிறது. அது போலவே, உலக வாசனைகளில் ஊறிய மனமானது பிரதக்ஷிணம் செய்யும் போது, வாசனைகள் மெல்லமெல்ல வற்றி ஒரு நிலையில் மனமானது ஞானத்தீயால் எரிக்கப்படத் தக்க பக்குவத்தை அடைகிறது. ஆதலால்தான் ஸ்ரீ பகவான் குஞ்சு சுவாமியிடம் ''இந்த மலை அனைத்து ஆன்ம சக்தியின் களஞ்சியம் ஆகும். இதனை வலம் வருவதால் எல்லா விதத்திலும் நீ பயனடைகிறாய்'' என்று கூறினார்.

அருணகிரி பிரதக்ஷிணத்தின் மாண்பை ஸ்ரீ சாதுஓம் அவர்கள் ஸ்ரீ ரமண வழி மூன்றும் பாகத்தில் கீழ்க்கண்டவாறு சிறப்பித்துள்ளார்.

சுற்றி வரும்பசுநீள் தும்பு முளையிலே
சுற்றித்தன் நீளம் சுருங்கிவரல் – உற்றறியா(து)
அவ்வா(று) அருணா சலவலத்தால் தான்ஒடுங்கல்
எவ்வா(று)உன் நெஞ்சறியும்? எண்.

மேன்மேலுஞ் சுற்ற விலகமுடி யாதுபசு
தான் முளையி லேயே தகைபடல்போல் – ஆன்மவான்
அண்ணா மலைவலஞ்செய் அன்புமனம் நிச்சலமாய்
உள்நாடி நிற்கும்எலாம் ஒய்ந்து.

அண்ணா மலைவலஞ்செய் அன்பருளம் ஆன்மாபால்
உள்நாடி நிற்க உருசியுறல் – கண்ணாக்
கண்டபேர் உண்மை;பவக் காமங் களைஎரித்து
மண்டும்எரி அண்ணா மலை.

இரும்பணுக்கள் பன்முகமா ஏய்ந்தவற்றைக் காந்தம்
திரும்பவைத்துத் தென்வடலாச் செய்யும் – திரும்புவதால்
தான்காந்த மாவதுபோல் தன்முகமாக் கும்பிரம்ம
வான்காந்தம் அண்ணா மலை.

பாடல் - 456 - 59

ஸ்ரீ பகவானது தலையாய பக்தர்களில் ஒருவரும், சிறந்த ஞானியுமான ஸ்ரீ முருகனார் சுவாமிகள் கிரிப் பிரதக்ஷிணத்தில் தீவிரப் பிரியராகப் பெயர் பெற்றவர். ஸ்ரீ பகவானது வாழ்நாட்களில், ஸ்ரீ முருகனார் தன்னைப் பார்க்க வரும் நண்பர்கள் எவர்க்கும் ''பகவானது ஹாலிலோ அல்லது மலைவலஞ் செல்லும் சாலையிலோ நீர் என்னைக் காணலாம்'' என்று எழுதுவது வழக்கம். ஒருகாலத்தில் அவர் நாள்தோறும் பிரதக்ஷிணம் செய்வது வழக்கம். ஸ்ரீ முருகனார் கிரிப் பிரதக்ஷிணத்தின் மாண்பை முதன்முறையாக எவ்வாறு தெரிந்து கொண்டார் என்பது குஞ்சு சுவாமி அவர்களால் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

''இங்கு வந்து சில காலங் கழித்து, ஸ்ரீ முருகனார் பகவானிடம் கிரிவலத்தின் ஆன்மீகப் பயனைப் பற்றி வினவினார். முதலில் கிரிவலம் செய்துவிட்டு பின்பு தன்னிடம்

வந்து கேட்குமாறு ஸ்ரீ பகவான் அவரிடம் கூறினர். ஸ்ரீ பகவானுடைய அறிவுரையைப் பின்பற்றிய ஸ்ரீ முருகனர் அவரிடம் தன்னுடைய கிரிவல அனுபவத்தைக் கூறும்போது, தான் கிரிவலம் தொடங்கிய சிறிது நேரத்தில் தேகாத்ம புத்தியை இழந்ததாகவும், அடிஅண்ணுமலையை அடைந்த பின்பே திருப்பப் பெற்றதாகவும் கூறினர்; தன்னுடைய அனுபவம் எதிர்பாராததும், இணையற்றதும் ஆகும் என்று ஸ்ரீ பகவானிடம் அறிவித்தார். புன்முறுவல் பூத்த ஸ்ரீ பகவான் 'இப்பொழுது புரிகிறதா உனக்கு?' என்று கூறினர்.''

இந் நிகழ்ச்சி கிரிவலத்தின் ஆற்றலைத் தெள்ளத் தெளிய நிரூபிக்கிறது. கிரிவலம் செய்வதால் பக்குவிகள் தேகாத்ம புத்தியை இழக்கிருர்கள் என்பதையும் காட்டுகிறது. கிரிவலம் செய்யும் போது சஞ்சார சமாதி அனுபவம் ஏற்படும் என்று ஸ்ரீ பகவான் கூறியதன் பொருளையும் இந் நிகழ்ச்சி விளக்குகிறது.

அருணசல சிகரத்தை மையமாகக் கொண்டு பிரதக்ஷிணம் என்னும் ஒரு துவித விருத்தியை ஒருவன் எவ்வளவு செய்தாலும் அவனது பிரயாணம் முழுவதும் அவனை அருணசலத்தை விட்டு வேறெங்கும் போகாதவனுக ஆக்கிவிடுவதால் (மற்ற கர்மங்கள் மையத்தினின்றும் தூர விலக்குவது போலாகமல் அருணசலத்துடனேயே வைத்திருப்பதால்) இதை ''தூர விலகாத துவித விருத்தி'' என்று சிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

இத்தகைய எண்ணமற்ற நிலை கிரிவலம் செய்யும் அன்பர்கள் எல்லோருக்கும் அனுபவம் ஆவதில்லை யாயினும், இதனுல் அவர்களது கிரிவலம் பலனளிக்கவில்லை என்று பொருளாகாது. மனத்தின் மேல் வாசனைகளுக்குள்ள பிடிப்பு மெதுவாக அவிழ்க்கப்படுவதே கிரிவலத்தின் பிரதான பலனுகும். ஆனுல் எப்படி ஒரு குழந்தையானது தன்னுடைய வளர்ச்சியைத் தானே எளிதில் அறிந்துகொள்ள இயலாதோ, அவ்வாறே மனமும் அதனுடைய வாசனைகள் வலிவிழப்பதை எளிதில் உணர இயலாது.

எனினும், கிரிவலத்தின் ஆன்மீக வல்லமையைத் தெளிவாகக் காட்டக்கூடியதும் அன்பர்களால் எளிதில் உணரக் கூடியதுமான ஒரு மிக முக்கியமான அம்சம் அன்பர்களது மனத்தை ஈர்க்கும் அதன் அசாதாரணமான சக்தியே. எந்த ஒரு குறிப்பிடத்தக்க காரணமுமில்லாமல் அருணுசலத்தை மீண்டும் மீண்டும் கிரிவலம் செய்ய மனம் ஈர்க்கப்படுவதை எவரும் உணர்கிருர்கள். ''ஒருமுறை கிரிவலம் செய்து பார்; அது உன்னே ஈர்ப்பதைக் காண்பாய்'' என்று ஸ்ரீ பகவான் தேவராஜ முதலியாரிடம் கூறியுள்ளார் ''ஓரிரு முறை இம் மலேயைச் சுற்றினல், இம் மலேயே அவரை ஈர்த்து மீண்டும் மீண்டும் வலம் வரச் செய்யும் என்று ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். நான் உண்மையாகவே என் அனுபவத்தில் இதைக் கண்டிருக்கிறேன். இப்போது டாக்டர் சையது இவ்வாறே கண்டு வருகிருர்'' என்று தேவராஜ முதலியார் எழுதுகிருர். ''உட்கார்ந்து தியானம் செய்யும் போது நீ அடைய முடியாத தியான நிலே, பிரதக்ஷிணம் செய்யும் போது தாளுகவே சித்திக்கிறது. இந்த இடமும் சூழ்நிலேயும் அத்தகைய விசேஷமானவை. நடக்க சிறிதும் இயலாதவருங்கூட ஒருமுறை வலம் செய்தால், மீண்டும் மீண்டும் போகத் தோன்றும். கிரிவலம் செய்யச்செய்ய மேலும் மேலும் அதில் ஆர்வம் அதிகரிக்கிறது. அது என்றும் குறைவதில்லே. ஒருமுறை ஒருவனுக்கு கிரிவலத்தில் வரும் மகிழ்ச்சி பழக்கமாகி விட்டால், அவனுல் கிரிவலத்தை விடவே முடியாது'' என்று ஸ்ரீ பகவான் கூறியதாக சூரிநாகம்மா தன்னுடைய கடிதத்தில் குறிப்பிடுகிருர். குரு, நிலேயான இன்பத்தை அளிப்பார் என்ற உள்ளுணர்வால் எவ்வாறு மனமானது தானே குருவின்பால் ஈர்க்கப்படுகிறதோ, அவ்வாறே மனமானது தாளுகவே கிரிவலத்தின்பால் ஈர்க்கப்படுகிறது.

அருணுசலரமணன்

அருணுசலத்தின் ஆற்றலேப் புரிந்துகொள்ள, ஸ்ரீ பகவானுக்கும் அருணுசலத்திற்கும் இடையில் இருந்த உறவைப் புரிந்துகொள்வது அவசியம். ஸ்ரீ பகவானுக்கு

அருணாசலமே தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகிய அனைத்துமாம் – அவருடைய ஆன்மாவேயாம்.

ஈசன், குரு, ஆன்மா ஆகிய இம் மூன்றும் ஒன்றே என்று அடிக்கடி கூறும் ஸ்ரீ பகவானுக்கு அருணாசலமே இம் மூன்றுமாம். 'அக்ஷரமணமாலை' 49ஆம் பாடலில் அருணாசலத்தைத் தம்முடைய தெய்வமாகவும், 19ஆம் பாடலில் தம்முடைய குருவாகவும், 'ஆன்ம வித்தைக் கீர்த்தனம்' 5ஆம் பாடலில் 'அண்ணாமலை என் ஆன்மா'* என்றும் குறிப்பிடுகின்றார்.

உண்மையாகவே, அருணாசலமே ஸ்ரீ ரமணர்; ஸ்ரீ ரமணரே அருணாசலம்; இவ்விருவரும் பிரிக்கப்பட முடியாதவர்கள். அருணாசலம் மலை வடிவில் இருக்கும் ஸ்ரீரமணர்; ஸ்ரீ ரமணரோ மனித வடிவில் தோன்றும் அருணாசலம். அருணாசலத்துடன் தாம் உணர்ந்த அபேதத்தை ஸ்ரீ பகவான் தம்முடைய பல பாடல்களில் வெளியிட்டிருக்கிறார். பக்தர் ஒருவர் ஸ்ரீ பகவானுடைய மெய்யியல்பைப் பற்றி வினவியபோது, அவர் **''அரியாதி இதர ஜீவரது அகவாரிச குகையில் அறிவாய் ரமி பரமாத்துமன் அருணாசலரமணன்''** என்று விடையிறுத்தார். தம்மைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்திய

---

*வேறெந்த பொருளையும் நினைக்காமல் 'இருக்கிறேன்' என்ற உணர்வு மாத்திரமாய் உள்ளே தன்னை நோக்கி கவனிக்கின்ற அறிவில் (அகமுகமாக விசாரிக்கும் பக்குவ உள்ளத்தில்), ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களையும் அறிகின்ற கண் முதலிய ஐம்பொறிகளையும் விளக்கப்படுத்தும் அறிவாகின்ற மன அறிவையும் விளக்கப் படுத்துகின்ற மெய்யறிவாய் (ஞான சூரியனாய்), மனாகாசம் இருப்பதற்கும் இடம் தந்து கொண்டிருக்கிற பரமாகாசமாய் ஒப்பற்ற பரம்பொருள் ஒன்று விளங்குவது **அண்ணாமலை எனப்படும் ஆன்மாவே** என்ற உண்மை தெரியவரும். இவ்வனுபவத்திற்கு அவ்வான்மாவின் அருளாகிய ''இருக்கிறேன்'' என்ற விளக்கமே அவசியமாம். அவ் வருளைப் பெறுவதற்கு தன் இருப்பின்மேல் விருப்பமாகிய ஸ்வாத்ம பக்தியைக் கொள்வீர்களாக. அப்போது பேரின்பம் விகசிக்கும். (ஆகையால் ஆன்மவித்தை, ஐயே அதி சுலபம்!)

'அருணாசலரமணன்' என்ற இதே நாமத்தையே, 'அக்ஷர மணமாலை' கடைசிப் பாடலிலும் அருணாசலத்தை விளித்துப் பாடப் பயன் படுத்துகிறார். மேலும் 90வது பாடலில் அருணாசலத்தை 'ரமணன்' என்று அழைக்கிறார். ஸ்ரீ பகவான் 'ஸ்ரீ அருணாசல பஞ்சரத்தினத்'தை வடமொழியில் இயற்றிய போது, பக்தர் ஒருவர் தாம் இயற்றிய முடிவுரைப் பாவில் 'இவ் வைந்து பாடல்களும் ஸ்ரீமத் ரமண மஹரிஷி அருளிய உபநிடத ரத்தினமாகும்' என்று குறிப்பிட்டார். பின்பு இத்துதியை ஸ்ரீ பகவான் தமிழில் மொழிபெயர்த்த போது முடிவுரைப் பாவில் 'ஸ்ரீமத் ரமண மஹரிஷி' என்ற பெயருக்குப் பதிலாக 'அருணகிரி ரமணன்' என்ற நாமத்தை வைத்தருளி, அதனால் அருணகிரியே ரமண ரூபத்தில் இப் பாடல்களைப் பாடிற்று என்பதைத் தெளிவாக்கினார். இவை எல்லாவற்றிலிருந்தும், ஸ்ரீ பகவான் அருணாசலத்திற்கு வேறாக தமக்கென்று தனித்த ஒரு வியக்தித்வத்தையோ அல்லது இருப்பையோ ஒப்ப வில்லை என்பது தெளிவாகிறது.

பகவான் ரமணர் தம்முடைய மானிட ரூபத்தைக் களைந்துவிட்டாலும், அவர் எப்பொழுதும் அருணாசல ரூபத்தில் இங்கு ஒளிர்ந்து தம் அடியார்களுக்கு ஞான விளக்கமும் ஆறுதலும் அளிக்கிறார். ஆகையால், அருணாசலத்தின் ஆற்றல் ஸ்ரீ ரமணரின் ஆற்றலே – அதாவது, சற்குருவின் அருட்சக்தியே. ஆதலால் அருணாசலத்தை நினைந்து அவரருளால் 'நாம் இத் தேகமல்ல' என்ற உண்மையைஉணர்ந்து பிறவித் தளையிலிருந்து விடுபட்டு வாழ்வின் முழுப்பயனும் அடைவோமாக.

ஏது நினைப்பதிலு மெந்தா யுனதருட்சீர்
பாத(ம்) நினைப்பதுவே பாவனமா(ம்) – மீதியெலாம்
வீணினைப்பே! ஓயா வினைக்குவிப்பே யாகலினின்
தாள் நினைப்பே மாறுது தா.

– ஸ்ரீரமண ஸஹஸ்ரம் - 529.

திருவருணை

ஸ்ரீ நடனானந்த சுவாமிகள் அருளிய

சிறப்புப் பாயிரம்

(வெண்பா)

1. குகைநமச்சி வாயர்முதற் கூறுந்தொல் லான்ற
தகைவர்க்குஞ் சார்ந்தனனேம் சாது – அகமாய்
அருணா சலமென்னு மீற்றடியி னூறு
பொருள்சேர்வெண் பாக்கள் புனைந்து.

2. அருணா சலனே யருணா சலமென்
பொருளோடு மந்திரத்தாற் போற்றி – அருணா
சலம்போ லசலநிலை சார்ந்தனனேம் சாது
புலம்போ யுடல்வாழ்வார் போன்று.

3. சோணேசர்க் கந்தாதிச் சொன்மாலை தந்துய்ந்த
மாணார் குகைநமச்சி வாயன்போற் – சோணா
சலனை யருணா சலத்துதியாற் போற்றி
யுலைவகன் றான்சாது ஓம்.

நூற்பயன்

(வெண்பா)

அருணா சலமென்ற வைந்தெழுத்தை யோதி
யருணா சலன்றா ளடையும் – பெருநோக்கிற்
சாதுஓம் போற்றும்பஞ் சாட்சரஞா னத்துதியை
யோதுவோ ருய்வார்மெய் யோர்ந்து

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய



ஸ்ரீஅருணாசல வெண்பா

(மூலமும் - உரையும்)

பாயிரம்

அருணா சலசிவவென் றுண்டரம ணாசா
ெனொருமா வுபதேச மூட்ட – குருவாக்கா
னண்ணியவிந் நாமமே நாமுய்வா னாவினிக்கப்
பண்ணும்அரு ணாசலவெண் பா.

நம்மை ஆட்கொண்ட ரமணாசிரியன் 'அருணாசல சிவ' என்று ஒரு பெரிய மந்திரோபதேசத்தை ஊட்டியதால் சற்குருவின் திருவாக்கால் அடையப்பட்ட இந்த நாமத்தைக் கொண்டே நாம் அனைவரும் உய்வடையும் பொருட்டு நம் நா இனிக்கும்படி இவ்வருணாசல வெண்பா இயற்றப்படுகிறது.

காப்பு

அன்பொழுகு கண்ணிரண்டோ டானை முகமுடனென்
முன்பெழுவோன் சிரமண மூர்த்தியவன் – றன்பூ
தலமே னடந்தவிரு தாளே யருணா
சலவெண்பா காப்புச் சரண்.

கருணை வழியும் இரண்டு கண்களும் யானை முகமும் கொண்டு ஸ்ரீ கணபதியாய் என்முன் எழுந்தருள்வோன் ஸ்ரீ ரமணமூர்த்தியே யாகும். ஆகையால் அப்பெருமான் இப்பூவுலகில் நடந்து வந்த இரு திருவடிகளே இவ்வருணாசல வெண்பா பாடுவதற்குக் காப்பாகவும் சரணாகவும் அமையட்டும்.

நூல்

1. முத்திக்குப் பூதலமே மூவுலகிற் பூதலத்து
முத்தமமோ பாரதமே யுய்வருளுஞ் – சத்தி
பலவா றொளிரும் பதிகளுக் கெல்லாந்
தலைவா மருணா சலம்.

மூவுலகத்திலும் பூவுலகமே முக்திக்கு உகந்தது. இந்த பூதலத்துள்ளும் முக்திக்கு உத்தம மானது பாரதமே. இப் பரத கண்டத்துள் பலவித சக்திகளோடு பிரகாசிக்கும் க்ஷேத்ரங்களுக்கெல்லாம் தலைமையாக உய்வருள (உய்வருளும் சக்தியாக)விளங்குவது அருணாசலமே.

2. ஆரூருங் காசியுட னம்பலமு முத்திதருஞ்
சீரூர் பிறப்பிறப்பு சேவிப்பால் – யாரு(ம்)
நிலமேல் விமுத்தி நினைவா லடையுந்
தலமே யருணா சலம்.

திருவாரூர் பிறப்பாலும், காசி இறப்பாலும், சிதம்பரம் தரிசிப்பதாலும் முக்தி தரக்கூடிய க்ஷேத்ரங்களாகும். ஆனால் உலகில் உள்ள மக்கள் யாரேயாயினும் (அருணாசலத்தை) நினைத்த மாத்திரத்தில் சிரேஷ்டமான முக்தியை தரக்கூடியது இவ்வருணாசலமே.

3. அபேதமுக மாவோங்கு மட்டமுகத் தோடுஞ்
சுபேதமுக மீராய் சுவாமி – யபீத
குசாம்பிகையென் னன்னையிடங் கொண்டருளுந் தெய்வத்
தசாங்கம் அருணா சலம்.

அண்ணாமலையின் எட்டு மலைச்சரிவுகளும் அதனின்றும் வேறாகாத எட்டு முகங்களாகவும், கோவிலில் எழுந்தருளி யுள்ள சுவாமியாகிய ஸ்ரீ அருணாசலேசுவரரோடு இடப் பாகத்தில் எழுந்தருளியுள்ள என் அன்னையாகிய ஸ்ரீ அபீதகுசாம்பிகை என்னும் தூலத்தில் அண்ணாமலைக்கு வேறான இரு முகங்களாகவும் ஆக பத்து தெய்வ முகங்களை யுடையது (தெய்வ தசாங்கம்) இவ்வருணாசலமே.

4. **மேருமந் தாரகிரி விண்ணிமயம் விந்தியமாத்**
தேருஞ் சிவனுறையுஞ் சேத்திரத்துட் – சேரும்
அசலம்போ லன்றீ தவனே வடிவா
மசலம் அருணா சலம்.

மேருமலை, மந்தாரகிரி, மிக உயர்ந்த இமயமாகிய கைலாயகிரி, இவை சிவபிரான் வசிக்கும் இடங்களாகக் கூறப்படுகின்றன. இவ்வாறு சிவன் வசிக்கும் இடங்களாகிய மலைகளைப் போல இல்லாமல், அந்த சிவவடிவு தானேயாகிய மலை இவ்வருணாசலமே.

5. **அப்பருடன் காரைக்கா லம்மையருஞ் சுந்தரருஞ்**
செப்பரிய வாவலொடு சேவித்த – அப்பெருமான்
கைலைமேன் மேவுங்கங் காதரன்று னைசிவ
சைலம் அருணா சலம்.

திருநாவுக்கரசு சுவாமிகளாலும் காரைக்காலம்மையாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் சொல்லமுடியாத பேராவலோடு சேவிக்கப்பட்டவரும் கைலைமலையின் மேல் கங்காதரராக வீற்றிருப்பவருமான அந்தச் சிவபெருமான் தானேயாக எழுந்தருளிய சிவ சைலம் இவ்வருணாசலமே.

6. **யாப்பவனுங் காப்பவனும் யானென் றெழும்புமிறு**
மாப்படையா துட்குவித்து வாழ்வளித்துக் – காப்போன்
பரமான்ம வக்கினியாப் பார்மீ தெழும்பூ
தரமாம் அருணா சலம்.

நானே பெரியவன் என்று எழுந்த படைக்கும் பிரம்மாவும்,

காக்கும் விஷ்ணுவும் தத்தம் இறுமாப்பு நீங்குமாறு அவர்களை அந்தர்முகப்படுத்தி பணிய வைத்து வாழ்வளித்துக் காப்பாற்றியவர் இப்பூவுலகின்மேல் பரமாத்ம அக்னி மலையாக எழுந்த இவ்வருணாசலமே.

7. விடத்திற் கொடிய விடயத்தி னீங்கித்
திடத்தனா தற்கிச் செகத்தோ – ரிடத்தே
நிவசிப் பதற்கு நினைப்பனே லந்தத்
தவசிக் கருணா சலம்.

விஷத்தை விடக் கொடியவையாகிய ஐம்புல விஷயங்களினின்றும் நீங்கிய திடசித்தன் (சகஜ ஞானி) ஆவதற்கு ஒருவன் இவ்வுலகில் ஏதேனும் ஓரிடத்தில் ஸ்திரமாக வசிக்க வேண்டும் என்று கருதுவானாயின் அந்த தவசிக்கு தகுந்த இடம் இவ்வருணாசலமே.

8. ஈசன் முதலுருவா யெண்ணமுத்தி யாயடியார்க்
காசான் ரமண னருளுமுப – தேச
வுரமேவு மந்திரமா யொப்பில்லாப் பஞ்சாட்
சரமே யருணா சலம்.

ஸர்வேசுவரனாகிய சிவபெருமானுக்கு முதன் முதலில் தோன்றிய உருவமாகவும் (லிங்கோத்பவராகவும்), நினைத்தாலே முத்தி தரக்கூடியதாகவும், தன் அடியவர்களுக்கு சற்குரு ரமணர் உபதேசித்தருளிய ஒப்பற்ற சக்தி வாய்ந்த பஞ்சாக்ஷர மந்திரம் இவ்வருணாசலமே.

9. நூலெல்லா மோர்ந்து(ம்)நன் னோன்பெல்லா(ம்) நோற்றுமிவை
யாலொன்றும் காணே னருளையான் – மேலொன்
றிழைப்ப தறியேனென் றேங்குங்கால் வாவென்
றழைப்ப தருணா சலம்.

'எல்லா சாஸ்திரங்களையும் கற்றும் நல்ல பலவித நோன்புகளையெல்லாம் (அனுஷ்டானங்களை) புரிந்துங்கூட இவைகளாலெல்லாம் இறைவன் அருள் யாதொன்றையும்

நான் காணவில்லையே! இனிமேல் வேறு என்னதான் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை' என்று ஒரு நல்ல தபஸ்வி திருவருளுக்காக ஏங்கி நிற்கும் போது, அவனை 'இங்கு வா' என்றழைப்பது இவ்வருணாசலமே.

10. அன்போ டணைவோ ரகம்புக்கு வாதனைசெய்
துன்பவலி யெல்லாந் தொலைத்தருட்பே – ரின்பம்
மிகவே பிடித்து விடாது விழுங்குந்
தகவே யருணா சலம்.

தன்னிடம் அன்போடு வந்து சேரும் அடியார்களது இதயத்திற் புகுந்து, இதுவரை துன்பங்களைச் செய்து கொண்டிருந்த வாசனா பலமனைத்தையும் அழித்து அருள் பேரின்பம் மிகும்படி அவ்வடியார்கள் மனத்தைப் பிடித்த பிறகு என்றென்றும் நழுவி விடாதபடி அதை விழுங்கும் குருத்வ தகுதி வாய்ந்தது இவ்வருணாசலமே.

11. ''நரமென்றே மாறுதுண் ணாட்டமுடன் காண்நான்
பர''மென் றருளாற் பகர்ந்தே – பரமான்ம
வானே வடிவாய் வலிந்தாண்ட சீரமணன்
றானே யருணா சலம்.

''என்னை மனிதனென்று எண்ணி ஏமாந்து போகாதே; தன்னை உள்ளே திரும்பிப் பார்க்கும் தன்னாட்ட திருஷ்டியால் என்னைப் பார்; 'நான்' என்று விளங்குவது பரம்பொருளே யாகும்'' என்று அருளோடு உபதேசித்து பரமாத்மகாசமே தன் வடிவாய் இருந்துகொண்டு நம்மை தானாகவே வலிந்து ஆட்கொண்ட ஸ்ரீரமணன் இவ்வருணாசலமே.

12. ரமணமண மாலையரு ணாசலனுக் கிட்டுச்
சுமண முடித்தபெருஞ் சொந்தம் – அமைவதனா
லோம்பிடுதாய் தந்தை யுடனிருக்கு மென்கணுக்குச்
சாம்ப னருணா சலம்.

அருணாசலனுக்கு ஸ்ரீ ரமணர் அக்ஷர மண மாலை புனைந்து மாலையிட்டு அருணாசலனை வரனாக மண முடித்துக் கொண்ட

உண்மையான பெருஞ் சொந்தம் ஏற்படுத்திக் கொண்டு விட்டதால் பகவான் ரமணர் என்னைக் காப்பாற்றும் தாயாகவும் அருணாசலம் தந்தையாகவும் ஆகி அவர்களுடன் இருக்கும் என்னுடைய கண்களுக்கு சாம்பன் ஆவோன் (அம்பாளோடு கூடிய சிவபிரான்) இவ்வருணாசலமே.

13. தேகமெனிற் செத்தோம், சிவோக மெனுமுணர்வா
லேகமுறக் கூட்டுவதா லேதுஞ்சந் – தேகமில்லை
ஆகா! மரண மகற்றவல்ல வாண்டவனிச்
சாகா வருணா சலம்.

'நான் தேகம்' என்று கொள்வோமாயின் தேகத்தின் மரணத்தோடு நாமும் செத்தோம் என்று ஆகிவிடும். அவ்வாறின்றி 'நாம் அவ்வழிவற்ற சிவமே' என்ற அத்வைத உணர்வால் அருணாசலம் தன்னோடு நம்மை ஏக வஸ்துவாக ஐக்கியப் படுத்திக்கொள்வதால், ஆகா! நம் மரணத்தை மாற்றவல்ல ஆண்டவன் மரணமற்ற இவ்வருணாசலமே என்பதில் துளியும் சந்தேகமேயில்லை.

14. தனியா முளைத்தகந்தை தான்கொண்ட கோடி
யனியாய வேட மனைத்து – மினிமே
லுயாத படியழித்துள் ளோங்கவைக்குந் தெய்வத்
தயாளு வருணா சலம்.

தான் ஒரு வியக்தி என்று முளைத்த அகந்தை அது தான் மேற்கொண்ட ஞாயமற்ற பலகோடி பொய் வேடங்கள் அனைத்தையும் ஒன்றுகூட இனிமேல் மிஞ்சாதபடி அழித்து, நம்மை உள்ளமாகிய ஆன்மாவாகவே ஓங்க வைக்கின்ற தெய்வ தயாளு இவ்வருணாசலமே.

15. தானொன் றிருக்குந் தனிமையாற் றுன்புழக்கு
மூனொன் றுயிர்தன் னுடனிணைத்தே – நானென்
றினிநீ யெனின்வே றிலையென்று தானே
தனிவா ழருணா சலம்.

தேகத்தோடு ஒட்டிக் கொண்ட உயிராகிய ஓர் அகந்தை 'நான்' தனி வியக்தியாக இருந்துகொண்டு 'தேகமே நான்' என்று கட்டுண்ட காரணத்தால் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வந்த ஜீவனை தன்னோடு ஒன்றாய் ஐக்கியப்படுத்திக்கொண்டு இனி "நான்" என்று நீ ஒருவன் எனக்கு வேறாக இல்லவேயில்லை என்று ஆக்கிரமித்து, தான் ஒருவனே தனியாக வாழ்ந்து விளங்குவது இவ்வருணாசலமே.

16. **தூயபர ஞான சுவசொருப மீரெட்டிற்**
றோய வதனாற் சுகவடிவே – யாய
சிவமே யெனநின்ற சீரமண வாழ்வாந்
தவமே யருணா சலம்.

தனது பதினாறாவது வயதிலேயே தனது சுயசொரூபமான பரிசுத்த பரமாத்ம ஞானம் சித்தித்ததால் அதனால் பரமானந்த வடிவான சாக்ஷாத் சிவபிரானே தானேயாகி நின்ற ஸ்ரீரமண பிரானது தவவாழ்வு இவ்வருணாசலமே.

17. **"நான்மிகுந்த துன்ப நர"னென் றடைந்தவர்க்கு**
வான்மிகுந்த வின்பம் வழங்கிபர – மான்ம
வுருவே யுணரவரு ளுங்கற் பகமாந்
தருவே யருணா சலம்.

"நான் மிகுந்த துன்பங்களை அனுபவிக்கும் ஓர் அற்ப மனிதன்" என்ற தீன உணர்வோடு தன்னை வந்தடைந்த அடியார்களுக்கு சுவர்க்கத்தினும் மிகுந்ததான பேரின்பத்தை அளித்து, அவர்கள் தமது பரமான்ம சொரூபத்தை அறியும்படி அருளுகின்ற ஞானக் கற்பகத் தரு இவ்வருணாசலமே.

18. **வாக்கரசு சம்பந்தர் வன்றொண்டர் மாணிக்க**
வாக்குமட்டு மன்றி மணமாலை – யாக்க
ரமணா ரியனருட்செந் நாவினித்த தெய்வத்
தமிழா ரருணா சலம்.

நான்கு சைவ குரவர்களாகிய திருநாவுக்கரசு, திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணி வாசகர் ஆகியோரின்

அருள் வாக்குகளா லியற்றப்பட்ட தேவார, திருவாசகத் துதிகளை மட்டுமின்றி, ஸ்ரீரமணாசாரியனின் திருநாவில் இனித்து உதித்த அக்ஷரமணமாலைத் துதி என்னும் தெய்வத் தமிழ் மாலையையும் சூடிக்கொண்டு விளங்குவது இவ் வருணாசலமே.

19. செய்துவந்தோர் பத்திகவி சித்தியொடு முள்ளுருகிக்
கொய்துவந்து பாமலரிற் கோடிவகை – பெய்துகழல்
பேரார்வ மோடு பிடித்தணைந்து சூட்டுதமிழ்த்
தாரா ரருணா சலம்.

பல பிறவிகளாக சிவபக்தி செய்து வந்துள்ள அடியார்கள் கவி சித்தி பெற்று, உள்ளம் உருகிப் பலகோடி வகை வகையான பாமலர்களைக் கொய்து (இயற்றி)வந்து, தன் திருவடிகளில் அருச்சித்து மிகப்பெரிய ஆவலோடு அத்திருவடிகளைப் பற்றிக் கொண்டு சூட்ட, அத்தமிழ் மாலைகளைத் தாங்கி நிற்பது இவ்வருணாசலமே.

20. ''பண்டைவினைக் காற்றேன் பரம்பொருளே காக்க'' வென்றே
யண்டையுற்ற வன்ப ரகம்புக்கப் – பண்டைவினை
மிஞ்ச விடாதழித்து வீடளிக்கு(ம்) மேலான
தஞ்சம் அருணா சலம்.

''பரம்பொருளே! எனது பண்டை வினைகளான பிராரப்தத்தில் உள்ள கொடிய துன்பங்களை அந்தோ! என்னால் தாங்கி அனுபவிக்க முடியவில்லையே! என்னைக் காப்பாற்றுவாயாக'' என்று அழுது முறையிட்டுத் தன்னடியில் வந்து சேர்ந்த அடியார்களின் உள்ளத்திற் புகுந்து, அவ்வடியார்களின் பூர்வ கர்மங்களில் யாதொன்றும் மிஞ்சி நிற்காதபடி அழித்து மோக்ஷத்தையளிக்கக் கூடிய மிக உயர்ந்த புகலிடம் இவ்வருணாசலமே யாகும்.

21. ஒருசிறிது மாற்றா துலகவெயிற் கஞ்சித்
தருநிழலாத் தஞ்சமென்று சார்ந்தோர் – குருரமண
வேந்தன் றிருமுன் விலகா தனுபவிக்குஞ்
சாந்தி யருணா சலம்.

கர்மபலன்களான உலகத் துன்பங்களாம் வெயிலின் கொடுமைக்கு ஒரு சிறிதும் ஆற்றாமல் பயந்து வந்து தனது திருவடி நிழலே தஞ்சம் என்று அடைந்தவர்கள் சற்குரு ரமண பிரானின் சந்நிதியில் விலகாமல் எப்போதும் அனுபவிக்கும் ஆன்ம சாந்தி இவ் வருணாசலமே.

22. **எழுச்சிதரு நெஞ்சத் திருவா தனைக்கா**
டொழுச்சுசிவ ஞானத்தீ யூட்டி – விழிச்சமுக்
கண்ணார் குருரமணாற் காட்பட்டா ருள்ளமே
தண்ணா ரருணா சலம்.

எழுந்து குதிக்கும் அகந்தையின் சுபாசுப வாசனைகளாகிய காடுமுழுதும் எரிந்து போகும்படி தனது நெற்றிக் கண்ணாகிய அனற் கண்ணை விழித்து ஆன்ம ஞானத்தீ மூட்டி அழிக்கின்ற முக்கண்ணனாகிய சற்குரு ரமணருக்கு ஆட்பட்ட மெய் யடியார்களின் குளிர்ந்த சாந்தி உள்ளம் இவ்வருணாசலமே.

23. **வானபோ கத்தின் வழிகாட்டும் வேதமவை**
யீனமாத் தான்விலக்கு மின்னுயிர்க்கு – ஞானப்
பசிவந்த போது பரிமாறுந் தொம்தத்
தசியிவ் வருணா சலம்.

கர்மகாண்டத்தால் சுவர்க்க போகங்களை அடைய வழிகாட்டி வந்த வேதமானது, அப்போகங்களை அற்பமென வைராக்கியத்தால் ஒதுக்கித் தள்ளித் துறக்கும் பக்குவ ஜீவர்களுக்கு ஞானப் பசி வந்த போது ''தத்வ மசி - அது நீயே'' என்று ஞானோபதேசத்தால் பரிமாறுவது இவ்வருணாசலமே.

24. **உடலுக் குறவா யுயிருக் குதவாச்**
சடமா மனிதர்போற் சாரா – தடுமால்
எமரே விலக்கி யிமைப்பொழுது(ம்) நீங்காத்
தமரே யருணா சலம்.

உடலுக்கு மட்டும் உறவினர்களாகவும், ஆனால் நம் உயிருக்கு (மரண காலத்தில்) உதவ முடியாதவர்களுமா யிருக்கின்ற சாமானிய ஜட மனித உறவினர்களைப்போல் அல்லாமல்,

கொடிய பெரிய எமன்வரும்போது அவனை விலக்கி அழிப்பதோடு ஒரு கணமும் நம்மை விட்டுப் பிரியாத உண்மையான உறவு இவ்வருணாசலமே.

25. எண்ணுமெண்ணங் கோடி யிடையிலரு ணாசலச்சீ
ரெண்ணியவர் வாணா ளிறுதியிலப் – புண்ணியத்தா
லின்னும் பிறவா திறவாது தோன்றுமவர்
தன்முன் னருணா சலம்.

தன் வாணாளில் எண்ணும் கோடிக்கணக்கான எண்ணங்களிடையிலும் ஒரு முறையாவது அருணாசல மகிமையை எண்ணிய ஒருவன் அந்தப் புண்ணியத்தின் பயனாக அவனது மரணத் தருவாயில், இனி பிறப்பிறப்பு அடையாதபடி அவன் கண்முன் வந்து தோன்றி தரிசனமளிப்பது இவ்வருணாசலமே.

26. அகங்களிக்குஞ் சாதனையி லாழமுய லுங்காற்
சுகங்கலைத்து நானெனவுட் டோன்றி – யகங்கரிக்கு
மேமன் விலக விதோவந்தே னென்றருளித்
தாமுந் தருணா சலம்.

ஆன்மாவில் மூழ்கிச் சுகிக்கும் சாதனையான ஆன்மநாட்டத்தில் ஆழ்ந்து மூழ்க முயலும்போது, ''நான் இவ்வுடலே'' என்ற உணர்வாக உள்ளே மீண்டும் எழும்பி, நிட்டைச் சுகத்தைக் கெடுக்கும் அகங்கார வடிவான எமனை (பிரமாதத்தை) உடனே ஓட்டி விரட்டிவிட்டு ''இதோ நான் வந்தேன்'' என்று அருளித் தான் முந்திக் கொள்ளும் ஸ்புரணானுபவம் இவ்வருணாசலமே.

27. ''பற்பலவா யுன்னைநீ பார்ப்பதே பாபமுனி
னிற்பதே தன்ம நெறி''யென்னுஞ் – சற்குருவின்
சொன்மெய் யுணர்ந்தத் துரீய மிழியாதார்
தன்மெய் யருணா சலம்.

''ஏகனாகிய உன்னை மாயையால் நானா ஜீவர்களாகவும் உலகங்களாகவும் காண்பதே அத்வைத சத்தியத்திற்கு விரோதமாகையால் அதுவே பெரிய பாபம் ஆகும். அதனால்

அவ்வாறு மாயையை ஆசிரயிக்காமல் நீயாகிய ஆன்மாவில் ஏகமாய் நிஷ்டையுறுவதே சுவதர்ம நெறியாகும்'' என்று கூறும் சற்குருவின் ஞானோபதேச உண்மையை யுணர்ந்து அவ்வனுபவமாகிய துரீய நிலையினின்றும் நழுவாத அடியார்களின் சத்திய இயல்புநிலை எதுவோ, அது இவ்வருணாசலமே.

28. ***மகவச்ச நீங்க மடிமே லணைக்குந்***
தகவுற்ற தாயும்பின் றங்க – மிகவுச்
சமான கருணையிற் றானே தனக்குச்
சமானம் அருணா சலம்.

பயப்படும் தன் பிள்ளையின் பயம் நீங்குமாறு தன் மடி மீதிலேயே அணைத்து வைத்துக் கொள்ளும் ஓர் பெற்ற தாயையும் விட (தன் பிள்ளையின் பயம் துடைப்பதில் ஒரு தாய்க்கு உள்ள கருணையும் பின்படுமாறு) மிகவும் உயர்ந்த கருணை காட்டுவதில் தானே தனக்குச் சமானமாகிய கருணாமூர்த்தி இவ்வருணாசலமே.

29. ***ரமண திருவடிவ(ம்) நம்மையழ விட்டே***
யிமையும் பிரிந்ததில்லை! யென்றும் – ரமண
சரீரம் விரிந்தவர்கொள் சாசுவத விச்வ
சரீரம் அருணா சலம்.

நம் சற்குருவான ஸ்ரீரமணமூர்த்தியின் திருவுருவம் நம்மை யெல்லாம் அழவிட்டுவிட்டு ஒரு கணம் கூட மறைந்து விடவேயில்லை! ஸ்ரீ ரமண சரீரம் மிகப்பெரிய தூல வடிவமாய் விரிந்து, பிறகு என்றுமே மறையாத விசுவ சரீரமாய் விளங்குவது இவ்வருணாசலமே.

30. ***மனமசல மெய்யசலம் வாக்கசல மாநம்***
முனமிசைய நின்றகுரு மூர்த்தி – கனரமண
னேக்கா லகந்தை நொறுக்குநா னென்ற
தாக்கே யருணா சலம்.

மனம், வாக்கு, காயம் மூன்றுமே தக்கவாறு அசலத் தன்மை

யுடையவராய் நம் கண்முன் எழுந்தருளி நின்ற சற்குரு மூர்த்தியாகிய ரமணப் பிரபு தன் ஞானநோக்காகிய சக்ஷு தீக்ஷையால் அடியார்களின் அகந்தையைப் பொடி செய்ய "நானார்?" என்று அருளிய ஞானாஸ்திரத்தின் தாக்குதல் இவ்வருணாசலமே.

31. புத்தித் திறனாற் புகழாற் புறப்பொருளாற்
சத்திப் பெருக்காற் றவறியித - யத்திற்
சுகியாது வீணிற் சுழன்றலையச் சற்றுஞ்
சகியா தருணா சலம்.

நாம் நமது புத்தி சாமர்த்தியத்தாலும், நாம் அடையும் புகழாலும், சுகம் தரும் பற்பல பாஹியப் பொருள்களின் கவர்ச்சியாலும், பணம், பதவி, சித்திகள் முதலிய சக்திகளை மேலும் பெறுவதாலும், நம் இதயக் குறிக்கோளில் சுகம் அனுபவிப்பதனின்றும் தவறி, நாம் வீணே மாயையிற் சிக்கிச் சுழன்று கெட்டலையக் கொஞ்சமும் சகிக்காத ரக்ஷகன் இவ்வருணாசலமே.

32. பண்ணுந் தவங்களில் "நான் பண்ணுகின்றே" னென்றமுத
லெண்ணமற்ற வின்பநிலை யெய்துவிப்பா - னெண்ணுகின்ற
நானா ரெனத்திருப்பும் ஞான ரமணகுரு
தானார்? அருணா சலம்.

தவங்களைச் செய்யும்போது "நான் செய்கிறேன்" என்ற வடிவில் தோன்றிக் கொண்டிருக்கும் முதலெண்ணமாகிய அகந்தையை யழித்து அதனால் சகல இதர எண்ணங்களும் இல்லாமலற்றுப்போன பேரின்ப நிலையை நமக்கு ஏற்படுத்தி வைப்பதற்காக, "நான் பண்ணுகின்றேன்" என்று நினைக்கிற 'நான்' யார் என்று கவனி" என்று நம் கவன சக்தியை அகமுகமாகத் திருப்பி விடுகின்ற ஞான ரமண சற்குரு யார்? அவர் இவ்வருணாசலமே.

33. கற்றடைந்த மேன்மை கனத்தடைந்த செல்வமெலாம்
புற்றடைந்த நஞ்சிற் பொலாதவற்றைப் - பெற்ற

மனமே யழிந்தமகா மௌனப் பிரயோ
சனமே யருணா சலம்

சகல நூல்களையும் கற்றுப் பெற்ற கல்விப் பெருமை, நிறையப் பெற்ற செல்வம் இவைகளெல்லாம் புற்றில் வாழும் விஷப் பாம்பைவிடக் கொடியவை. எனவே இவற்றைப் பெற்ற மனமே யழிந்து போவதால் ஏற்படும் பரமோனநிலையே மிகப்பெரிய பிரயோஜனம். இது இவ்வருணாசலமே.

34. ***ஞானமே ஞானி நரனன் றெனவிளக்கித்***
தானதுவாம் சீரமண சற்குருசின் – மோன
வவத்தாத் திரய வசங்களு நிற்குஞ்
சமர்த்தே யருணா சலம்.

'ஞானி என்பவன் ஞானசொரூபமே தவிர மானிடனல்ல' என்ற உண்மையை உபதேசித்து, தானே அந்த ப்ரம்மஞானியாய் விளங்கும் ஸ்ரீ ரமண சற்குரு, மூவவஸ்தைகளையும் கடந்து ஞான மோன வடிவாய் எப்போதும் பிரகாசிக்கின்ற அருட்சக்தி விலாசம் இவ்வருணாசலமேயாகும்.

35. ***யுகத்தளவிற் கோடி யுடலனுப வித்து***
மிகுத்ததலாற் குன்று வினையா – லகத்திற்
குவிதாக மோகமயற் கும்பிருளை யோட்டுஞ்
சவிதா வருணா சலம்.

பற்பல யுகங்களாகக் கோடிக்கணக்கான சரீரங்களை எடுத்து உலகபோகங்களை அனுபவித்தாலும் கர்ம விருப்பங்களும் கர்ம பலன்களும் மேன்மேலும் பெருகுவதே தவிர சிறிதும் குறையாத காரணத்தால் உள்ளத்தில் சேர்க்கப்பட்டு குவிந்து கிடக்கும் காமம், மோகம் முதலிய மாயையின் தடித்த இருளை ஓட்டுகின்ற சூரியன் இவ்வருணாசலமேயாகும்.

36. ***புமானடியிற் சிந்தும் பொடியா லடியார்க்***
கமானுஷிய மெய்ச்சகஜ மான – சமாதியிலே
யிச்சித் தடைவதற்கங் கின்னொன் றிலாவின்ப
சச்சித் தருணா சலம்.

சற்குரு மூர்த்தியின் திருவடியினின்று சிந்தும் பாததூளியால் அடியார்கள் பெறுகின்ற அமானுஷிய சத்திய சகஜ சமாதி நிலையில் மேலும் ஆசைப்பட்டு அடையத் தகுந்ததாக யாதொரு பொருளுமில்லாமல் சுயமே விளங்கும் பேரின்பமான சத்சித் சொரூபம் இவ்வருணாசலமே.

37. பன்றியுரு வோடன்னப் பட்சியுரு வானவரு
டன்றெழுந்த பூசலற வக்கினியா – நின்றெழுந்த
தம்பத் துருவெனினுந் தன்னடியார்க் குற்றதெய்வ
சம்பத் தருணா சலம்.

பன்றியுருவெடுத்த மகாவிஷ்ணுவுக்கும் அன்னப்பறவை யுருக்கொண்ட பிரம்மதேவனுக்கும் இடையில் முன்னொரு காலத்தில் ஏற்பட்ட விரோதம் நீங்கும்படி அக்கினி ஸ்தம்பமாய் எழுந்தது இதுதான் என்றாலும், தன்னை அண்டியுள்ள அடியார்களுக்கு எப்போதும் எளிதிற் கிடைத்துள்ள தெய்வீக சம்பத்து இவ்வருணாசலமே.

38. * "இங்குவா மாயைக் கிதுமருந்"தென் றேரமண
சங்கொலித்த வாறே சரணடைந்தோர் – எங்கும்
விலைமேலொன் றில்லா வியன்மணியாக் கொள்வர்
தலைமே லருணா சலம்.

"இங்கு வா, உன்னைப் பிடித்த மாயை நோய்க்கு இதுவே (அருணாசலமே) மருந்து" என்று ஒலித்து முழங்கிய பகவான் ஸ்ரீரமணரது சங்க நாதத்தைக் கேட்டு அதன்படியே ஸ்ரீ ரமணகுருவின் திருவடிகளைச் சரணடைந்த மெய்யடியார்கள் எவ்வுலகிலுங்கிடைத்தற்கரிய, விலைமதிப்பில்லாத அற்புத சிரோரத்தினமாகக் கொள்வது இவ்வருணாசலமே.

39. தகுந்த விசாரமெனுஞ் சாதனைசெய் துள்ளே
புகுந்தறிந்தே" னென்றுரைத்தாற் பொய்யாம் – அகந்தை
யறிவதொன்று மில்லை; யழிவதது! தன்னை
யறிவ தருணா சலம்.

* "அருமருந் தொன்றுண் டவனியி லதுதா னருணமா திரமென வறிவீர்" ஸ்ரீ ரமண பகவானருளிய அருணாசலப்பதிகம் 11-வது பாடலைக் குறிப்பிட்டது.

''தகுந்த பிரம்ம ஞான சாதனையாகிய ஆத்ம விசாரத்தை நான் செய்து இதயத்துள் புகுந்து மூழ்கி ஆன்மாவை அறிந்துவிட்டேன்'' என்று யாரேனும் கூறுவார்களாயின் அது சுத்தப் பொய்யே யாகும். அப்படிக் கூறுவோனாகிய அகந்தை ஆன்ம ஞானம் யாதொன்றையும் அறிய முடியாது. அகந்தை அழிவுக்குரியதே, உண்மையில் தன்னை அறிவது இவ்வருணாசலமே.

40. இல்லா வகந்தை யிலதா யிலக்கியகத்
தெல்லா யெழுந்தருளி யின்னதெனச் – சொல்லாத
மோனசிவ சாயுஜ்ய முக்தியே யஃதீயுந்
தானம் அருணா சலம்.

உண்மையில் இருப்பற்ற அகந்தையை இருப்பற்ற வெறும் பொய்யாகவே காட்டிக் கொடுத்து, இதயத்தில் ஞான சூரியனாய் எழுந்தருளி ''இது இன்னதுதான்'' என்றவாறு சொல்லாற் சொல்லமுடியாத மோனசிவ சாயுஜ்ய முக்தியையே ஓர் தானமாக ஈவது இவ்வருணாசலமே.

41. இட்டதெய்வ மாத்தன் னிணையடியை யெண்ணியெண்ணி
விட்டகல மாட்டா விருப்பமுடன் – கட்டிக்
கிடக்குமடி யார்தமக்குக் கேளா தளிக்கும்
தடக்கை யருணா சலம்.

தன்னையே இஷ்ட தெய்வமாய்க் கொண்டு தன்னைவிட்டு நீங்கவே முடியாத பெருவிருப்பமுடன் தன் திருவடிகளையே கட்டிக்கொண்டு கிடக்கும் உத்தம அடியார்களுக்கு, அவர்கள் தன்னைக் கேட்டுக்கொள்ளுமுன்பே அவர்களுக்கு வேண்டிய யாவற்றையும் அள்ளிவழங்கும் பெரிய வள்ளற் கைகள் இவ்வருணாசலமே.

42. துட்டநெஞ்சர் பீடைச் சுகவெறியர் தோள்வலிவாற்
கெட்டலைவோர் செல்வக் கிறுக்கேறிக் – கெட்ட
எமக்கேடர்க் கல்ல விருப்பிடம்சா துக்கள்
தமக்கே யருணா சலம்.

துஷ்ட மனமுடையோர், பீடைகளான உலகச்சுகங்களில்

வெறிபிடித் தலைவோர், தமது ஜடதேக பராக்கிரமத்தை மதித்துப் பிறரை வருத்தும் கொடிய காரியங்களில் கெட்டலைவோர், தனக்கு நிறைய செல்வம் இருக்கிறது என்ற மமதை வெறி பிடித்துக் கெட்டுப் போன எமனுக்குச் சமானமான கெட்டவர்களுக்கெல்லாம் இவ்வருணாசலம் இருப்பிடமல்ல; சாதுக்களுக்கு மட்டுமே இவ்வருணாசலம் (இருப்பிடமானது).

43. பொருளிற் புகழ்போகப் புன்மையினி னெஞ்சம்
மருளும் புறக்கவர்ச்சி மாற்றி – யருளின்
வலியா லகமிழுத்து வைத்தருளிச் சற்றுஞ்
சலியா தருணா சலம்.

பொருளிலும், புகழிலும், அற்பத் தன்மையுடைய போகங்களிலும் ஒருவன் மனம் மயங்குகின்ற புறமுகக் கவர்ச்சியை எல்லாம் அகற்றி, தனது திருவருட் சக்தியால் அம்மனத்தை ஆன்மாவில் இழுத்து அமிழ்த்தி வைத்தருளி, பிறகு என்றென்றும் அந்நிலையினின்றும் சஞ்சலப்பட்டு கீழிறங்காதபடி செய்வது இவ்வருணாசலமே.

44. விண்ணுக் கரியன் மிகுகருணை யாலுடல்கொண்
டண்ணல் ரமண வருளுருவாய் – மண்மே
லுபய கழலோ டுலவி யளித்த
வபயம் அருணா சலம்.

பிரம்ம விஷ்ணுக்களாகிய தேவர்களுக்கும் அடைய முடியாதபடி நின்ற சிவபிரான் அளவற்ற தனது கருணையால் பகவான் ஸ்ரீரமண அருள் வடிவத்தை எடுத்துக் கொண்டு இம்மண்ணுலகின் மேல் இரு திருவடிகளோடு உலவி நமக்கு அளித்தருளிய அபயவஸ்து இவ்வருணாசலமே.

45. அடிக்கடிவந் துள்ளே யரற்றுமறி யாமை
மிடிக்கயர்ந்து தன்றுணையே வேண்டி – யடிக்கே
புகலாவந் தோரைப் புரப்பதன்றிக் கைவிட்
டகலா வருணா சலம்.

எவ்வளவு கற்றும், எவ்வளவு நோற்றும் அடிக்கடி தம்முள்ளே

உதித்து தம்மைப் பயமுறுத்துகின்ற தேகாத்ம புத்தியாகிய அஞ்ஞானம் என்னும் வறுமையைத் தாங்க முடியாமல் தனது அருட்டுணையை வேண்டிப் பிரார்த்தித்து தனது திருவடியே புகல் என்று வந்தடைந்த தவசிகளைக் காப்பாற்றுவதேயன்றிக் கைவிட்டுப் பிரியாதது இவ்வருணாசலமே.

46. ***என்னடக்க மில்லா விழிநெஞ் சிளக்கியிழுத்***
தின்னடிக்கே வைத்த விறைரமணன் – சந்நிதிக்கே
வாச முறவுடலின் வாணாளெல் லாமளிக்கு
மாசை யருணா சலம்.

அடக்கமில்லாத என் இழிவான மனத்தை உருக்கி இழுத்து வந்து தனது திருவடிகளிலேயே இருத்தி வைத்திருக்கிற பகவான் ஸ்ரீ ரமணரது அருட்சந்நிதியிலேயே இவ்வுடல் வாணாள் முழுவதும் வசிக்கவேண்டும் என்ற தூய பேராசை இவ்வருணாசலமே.

47. ***தூற்றி யிறைவனையுந் தொண்டரையுந் தான்றனையே***
மாற்றியுரம் பேசு மனிதரைப்பல் – லாற்றிற்
பசப்பழித்துத் தன்னைப் பணிவித்துக் கன்னெஞ்
சசைப்ப தருணா சலம்.

இறைவனையும் அவனடியார்களையும் இகழ்ந்து தூற்றி தன் புத்திவலிமையைப் புகழ்ந்து பேசித் திரிவதால் தன்னைத் தானே ஏமாற்றிக் கெட்டுப் போகும் நாத்திக மனிதர்களைப் பலவழிகளில் அவர்களது அகங்காரத்தை அடக்கி, தன்னை வணங்க வைத்து, அவர்களது கல்நெஞ்சங்களை உடைத்தெறிவது இவ்வருணாசலமே.

48. **** இதயமிதென் றேநாம மிட்டரம ணேசன்***
பதமணைந்த பன்னூட்டாற் பற்பன் – மதமிருந்து
மாருமித யத்துறுவ தாலே சருவமத
சாரம் அருணா சலம்.

---

* இதய நாமமாவது :- ''நானென்றிதயம் நடித்திடுவை யாலுன்பேர் தானிதயம் என்றிடுவர் தாம்'' என்று வரும் ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னத்தைக் குறித்தது.

ஸ்ரீரமணேசர் அருணாசலத்தை "இது இதயம்" என்றே பெயரிட்டார். அவரது திருவடிகளை வந்தடைவோர் எந்நாட்டவராய், எம்மதத்தைச் சேர்ந்தவராய், யாராய் இருந்தாலும் இதயத்தையே (ஆன்ம ஞான சாதனத்தால்) முடிவில் வந்தடைவதால் சர்வமத சாரமும் இவ்வருணாசலமே.

49. "இருப்போ"மென்"றுந்தி யெழுவோ"மென்றுள்ளே
விருப்பமிரு பாங்கில் விளைக்கு – நெருப்பாஞ்
சமரொழித்து ஞான சமாதான பூமி
யமரும் அருணா சலம்.

"உள்ளே அடங்கியிருப்போம்" என்று ஒரு சமயத்திலும் "வேண்டாம்; 'நான்' என்று உந்தி எழுவோம்" என்று மற்றொரு சமயத்திலும் மாறுபாடான இருவேறுவித மன விருப்பமாகிய நெருப்பால் நடந்துவரும் உட்போராட்டத்தை ஒழித்து, ஞான சமாதியாகிய பூமியில் ஸ்திரமாக அமர்ந்து கொள்வது இவ்வருணாசலமே.

50. பக்குவமு முன்னூற் பரிந்தூட்டப் பெற்றவரே
பொக்கெனவுட் புக்கிதய பூமியிலே – நிற்கவல்லார்
எம்போன் றெளியார்க் கிரங்கி யருள்கசிவ
சம்போ வருணா சலம்.

சிவ சம்போ, அருணாசலமே! உன் கருணையால் யார் பக்குவம் ஊட்டப் பெற்றுள்ளனரோ அவர்கள் மட்டுமே உள்ளே இதய பூமியில் சட்டெனப் புகுந்து நிலையாக நிஷ்டையடையக் கூடும். ஆனால் என்னைப் போன்ற தீனர்கள் என்செய்வோம்? எளியவர்களாகிய எங்களுக்கும் இரங்கி பக்குவம் அளித்து அருள்வாயாக.

51. "படித்து மகிழாதே பாதியிலே நூறும்
முடித்தபின்னே பா "ரெனச்சொன் மூட்டி – யிடித்தென்னை
மீண்டுமீண் டும்பாட வெண்பாத் தலையளித்துத்
தூண்டும் அருணா சலம்.

"இவ்வருணாசல வெண்பாவை இப்போது பாதியிலேயே

படித்துப் பார்த்து மகிழாதே. நூறு வெண்பாக்களும் எழுதப்பட்ட பிறகு படித்துப்பார்!'' என்று அறிவுறுத்தி என்னை இடித்து இடித்து மீண்டும் மீண்டும் பாடுவதற்கு வெண்பாத் தளைகளாலான சொற்களை உள்ளிருந்து மூட்டிக் கொடுத்துப் பாடத் தூண்டுவது இவ்வருணசலமே.

52. தானேசொல் லிக்கொடுத்துத் தன்பெயரைச் சொன்மதலை
யானே மகிழன்னை யைப்போலத் – தானேயென்
வாய்ப்பாட செஞ்சொல் வழங்கி வலிந்தூட்டுந்
தாய்ப்பா லருண சலம்.

தாயொருத்தி தன் குழந்தைக்குத் தன்பெயரைத் தானே சொல்லிக் கொடுத்துச் சொல்லச் சொல்லி அதைக் கேட்டுத தானே மகிழ்வது போல, நான் வாயாற் பாடச் செஞ்சொற்களைச் சேர்த்துக் கொடுத்து இவ்வருணசல வெண்பாவை வலிந்து ஊட்டிப் பாடவைக்கும் தாய்ப்பால் இவ்வருணசலமே யாகும்.

53. நினைக்கமுத்தி யீயு நிகரில் லருளா
லனைத்துயிருந் தன்னையெண் ணற்காப் – புனித்த
ரமண னுறைவிடமாய் *நாடவைத்த நாளிச்
சமயம் அருண சலம்.

தன்னை நினைப்பவர்க்கெல்லாம் முக்தியருள்வது என்ற தனது இணையற்ற கருணைக் கொள்கைக்கு ஏற்ப, உலகில் உள்ள எல்லா உயிர்களும் தன்னை நினைத்து உய்ய ஓர்வழி செய்வதாய், உலக மகா குருவான பகவான் ஸ்ரீ ரமணரைத் தன்னகத்தே இழுத்து வந்து அமர்த்தி வைத்துக்கொண்டு, அதனுல் எந்நாட்டவரும் நினைக்கும்படித் தற்காலம் கருணைப் பிரவாகம் செய்துள்ளது இவ்வருணசலமே.

---

* நாடவைத்த நாள் :- மேல்நாட்டார் கீழ்நாட்டாராய் வெகு தொலைவிலுள்ள ஜீவர்களும் ஸ்ரீ ரமண பிரானை நினைக்குங் காரணத்தால் அருணசல ஸ்மரணை பெறும்படி நேர்ந்த காலம் தற்காலம் என்றவாறு.

54. "பாரன்றி யான்ம பரங்காணே" னென்பவர்தான்
யாரென் றுணர்வித் ததுவரையிற் – சேரும்
விசன மறுத்து வெளிப்படக் காணுந்
தசம னருணா சலம்.

"உலகத்தைப் பார்க்கிறேனே தவிர ஆன்மா – பரம் – கடவுள் ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே!" என்று விசனப்படும் சாதகர்களை இப்படிச் சொல்லும் தாம் யார்? என்று விசாரிக்கச் சொல்லி அவ்வான்ம விசாரத்தால் அவர்களது (ஆன்ம) மெய்ச் சொரூபத்தை உணர்வித்து அதுவரையிலும் அவர்களுக்கு இருந்து வந்த விசனமானது தசமன் கதையில் தசமனைக் காணாமையால் இருந்த விசனம் போன்று வெறும் பிராந்தியே என்று அவர்கள் அறிந்து மகிழும்படித் தன்னை (பரமான்மாவை) அவர்கள் பிரத்யக்ஷமாய்க் காணும்படி எழுந்தருள்வது இவ்வருணாசலமே.

55. சித்திகளைப் பெற்றூற் செகம்புகழு மென்றலையு
மத்தர்தவங் கோடி வருடங்க – ணத்திப்
புரியினுந் தன்னைப் புலப்படுத்தா தன்னோர்க்
கரிய தருணா சலம்.

" நாம் தவம் செய்து சித்திகளைப் பெற்றால் நம்மைப் பெரிய மகாத்மா என்று உலகத்தார் புகழ்வார்" என்று அலைகின்ற பைத்தியக்காரர்களாகிய அவிவேகிகள் எத்தனை கோடி வருடங்கள் கடினமான தவத்தை விரும்பிச் செய்து கொண்டிருந்தாலும், இவ்வருணாசலம் தன்னை அவர்களுக்கு விளங்க வைக்காது. அவர்களுக்கு அடையமுடியாதது இவ்வருணாசலமே.

56. மூலத்தி னின்று முளைக்குமிருள் வாதனையை
மூலத்தி னோடகற்றி மூலமெனு – மாலகந்தை
மாளும் படியிதயம் வந்துகுடி கொண்டுநமை
யாளும் அருணா சலம்.

காணப்படும் சகலத்திற்கும் மூல காரணமான அகந்தை

யினின்றும் எண்ணங்களாக முளைத்துக் கிளம்பும் அஞ்ஞான வாசனைகளையெல்லாம் அவற்றின் மூல நிலையமாகிய அகந்தையோடே அழியும்படி நம் இதயத்தில் வந்து குடிகொண்டு நம்மை அருளாட்சி செய்வது இவ்வருணாசலமே.

57. "நானழிந்தான் மிஞ்சு நலமே" தென் பாரறியார்;
வானழிந் தாலுமென்ன மற்றென்றைத் – தானடைய
ஏன்மிஞ்ச வேண்டு "மிருக்கின்றே" னென்னுமின்ப
வான்மா வருணா சலம்.

"ஆன்ம விசாரத்தால் மூலமாகிய நான் என்னும் அகந்தையே அழிந்து போகுமானால், அந்தோ, பிறகு அதனால் நமக்கென்ன பயன்?" என்று கேட்போர் அறியாமை மிக்க மூடர்களேயாவர். சுவர்க்கம் முதலிய சகல போக லோகங்களும் (திருசியப் பொருள்களும்) அழிந்து போனாலும் தான் என்ன நஷ்டம்? திருசியமாய் ஒன்றைப் பெற்று அதனால் தான் சுக மடைவதற்காக ஓர் 'அகந்தை நான்' எதற்காக அழியாமல் மிஞ்சியிருக்கவேண்டும்? அகந்தை அழிவுக்குப் பின்னும் பரமானந்த வடிவமான ஆன்மா "இருக்கின்றேன்" என்று சன்மாத்திரமாக (சதா) விளங்கிக் கொண்டிருக்கிற தன்றோ? அது இவ்வருணாசலமே.

58. நித்தியவான் மாவி னிழிந்து தனைப்பிரம
ஹத்திசெய்து கொண்ட கதியாற்சீ – வித்திருந்தும்
மாண்ட வரை யெழுப்பி மாளாத வாழ்வளிப்ப
தாண்ட வருணா சலம்.

என்றும் விளங்கும் நித்தியவஸ்துவாகிய பிரம்மநிலை யினின்றும் மாயையால் நழுவுற்று தன்னை ஓர் ஜீவனாகக் கருதிக்கொள்வது பிரம்மத்தைக் கொலை செய்த காரியத்துக்கு சமானமாவதால் பிரம்மஹத்தி தோஷமாகிறது. இப்படிப்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தால் ஜீவர்கள் தாம் ஜீவித்திருந்தாலும் மாண்டுபோனவர்களே யாவர். இவ்வாறு ஜீவனாகி மாண்டவர்களை ஆன்மாவாக எழுப்பி இறவாத நித்திய வாழ்வளிப்பது நம்மையாட் கொண்ட இவ்வருணாசலமே.

59. ஊன்மனத்தைக் காக்கு முலகக் கலைகளினு
மேன்மைதந்து ஞானத்தால் வீடேற்று – மான்மக்
கலையருளுங் காரணத்தாற் காக்குமிறை யார்க்குந்
தலைவ னருணா சலம்.

உடலையும் மனத்தையும் மட்டுமே ரக்ஷிக்கக்கூடிய அபர வித்தைகளாம் உலகக் கலைகளைவிட மேலானதாக, ஞானத்தால் நமக்கு மோக்ஷமளிக்கக் கூடியதான ஆன்மக் கலையை இவ்வருணாசலம் அளிப்பதால் ஸ்திதி கர்த்தாக்களாகிய விஷ்ணு முதலியோர் யாவரினும் சிறந்த காக்குந் தெய்வம் இவ்வருணாசலமே.

60. "மற்றொன்றி னின்றும் வராது சுகமிதய
முற்றொன் றுக" வென் றுளேயிழுத்துச் – சிற்றின்
பமோக விருளழிக்கும் பானுவாம் ஞான
வமோகம் அருணா சலம்.

"மற்ற எந்த அந்நியப் பொருளினின்றும் சுகம் வராது (இதயத்தில் - ஆன்மாவில் - இருந்தே சுகம் வரும்); ஆகையால் இதயமே சேர்வாய்" என்று அறிவுறுத்தி நம்மை இதயத் துள்ளே இழுத்துச் சென்று, சிற்றின்பங்களாகிய ஐம்புலச் சுகவெறியாகிய இருளை நீக்கி மோகமற்ற ஞானவொளியைத் தருவது ஞான சூரியனான இவ்வருணாசலமே.

61. அஞ்சவித்த ஞானி யபார சுகத்தினின்று
மெஞ்சியுமிழ் கின்ற விகபரத்தின் – கொஞ்சசுக
காமியத்துக் கன்றிசிவ காமியத்தை யீயவந்த
சாமி யருணா சலம்.

ஐம்புல ஆசைத்தீயை அவித்தொழித்த ஞானி ஒருவன் அனுபவிக்கும் அளவற்ற அகண்ட பேரின்பத்தினின்றும் உமிழப்பட்டு எஞ்சிச் சிதறிக் கிடப்பவையே இங்கு பிரம்ம லோகத்திலிருந்து பூலோகம் வரை உள்ளவர்களால் அனுபவிக்கப்படும் சுகங்களாகும். இத்தகைய அற்பசுகப் பேற்றைத் தருவதற்கல்ல இவ்வருணாசலம். சிவகாமியமாகிய

ஞானியின் மோக்ஷ சுகத்தையே நமக்குத் தருவதற்காக எழுந்தருளியிருக்கும் சுவாமியே இவ்வருணாசலம்.

62. **குருவே சரணெனக்கொண் டேரமண பாதம்**
வருவோர் மனமழியு மட்டும் – புரியுந்
தவறா யிரம்பொறுத்துந் தண்ணருளாற் காக்கத்
தவறா தருணா சலம்.

சற்குருவே நமது புகலிடம் என்று கொண்டு ஸ்ரீ ரமண பகவானது திருவடிகளை வந்தடைந்தோர் தமக்கு மனோநாசம் ஏற்படும் வரையிலும் மனோ பலஹீனத்தாற் புரியும் ஆயிரக்கணக்கான பிழைகளையும் பொறுத்துக் கொள்வதோடு தனது இனிய திருவருளால் அவர்களைக் காப்பாற்றி மோக்ஷமளிக்கவும் தவறாதது இவ்வருணாசலமே.

63. **செகவழக்கச் சித்தமலந் தீர்த்துட் டிருப்பு**
மகவழக்கத் தாலிதய வாழி – மிகவழுந்தி
யார்ந்த வுளத்தா லனுபவிப்ப வர்க்ககமாச்
சார்ந்த தருணா சலம்.

உலகவின்பங்களை நோக்கியோடும் அசுத்தமனத்தின் வாசனைகளையெல்லாம் அழித்து, அதை உண்முகமாகத் திரும்ப வைத்து தன்னை நாடும் பழக்கத்தால் இதயாகாசத்தில் மிகவும் மூழ்கி நிஷ்டையில் நிலைபெற்ற உள்ளத்தால் அனுபவிப்பவர்களுக்கு 'நான் - நான்' என்று விளங்குவது இவ்வருணாசலமே.

64. **வான்கான் முதலா மகிலந்தன் மாயையாற்**
றன்காணா தல்லா ததுதனையே – தான்காணுங்
காட்சியன்றி யுண்மையா காததாற் றானேதனக்குச்
சாட்சி யருணா சலம்.

ஆகாயம், காற்று முதலிய பஞ்ச பூதங்களாலான இப்பிரபஞ்சம் முழுவதும் தன் மாயைத் தானே ஆசிரயித்து தான் தன்னையே காணுகின்ற பொய்க் காட்சியே தவிர சற்றும் இவை உண்மைப் பொருள்களல்ல; தான் இவ்வாறு மாயா சக்தியால் தன்னை

இப் பிரபஞ்சமாகக் காணாமல் இருப்பதே இது இல்லாததாகும்; ஆகையால் 'பிரபஞ்சத்துக்குச் சாட்சி' என்று கூறினால் இவ்வருணாசலம் தானே தனக்குச் சாட்சியாவதேயாகும்.

65. கோணற் பிறைசூடிக் கொண்டசிவக் கோலமுடன்
காணவலம் வந்தடியர் காதலித்தாற் – காண
நிசிசேரும் போதருண நீண்முடிமேல் வந்து
சசிசே ரருணா சலம்.

அருணாசலத்தை வலம்வரும் அடியவர்கள் சிவபிரானை கோணலான பிறைச்சந்திரனைச் சூடிக் கொண்டிருப்பவராக (சந்திரசேகரராக) காண மிகவும் விரும்புவார்களாயின், அவ்வடியர்கள் கண்காண, இரவு நெருங்கும் சமயத்தில் பிறைச்சந்திரன் வந்து தனது உயர்ந்த சிகரவுச்சியில் சேரும்படி அருளிச் செய்வது இவ்வருணாசலமே.

66. ஈசனரு ளுண்டுன் னியல்வடிவ மெய்தியென்று
நாசமில னாவாய்நீ நன்னெஞ்சே – வாசனைக
ளற்றொழிந்த சாந்திதனக் காசைப்பட் டேநினைவாய்
சற்றே யருணா சலம்.

ஏ நன்னெஞ்சமே! உனக்கு அருணாசலேசனது திருவருள் நிச்சயமாக உண்டு. அதனால் நீ உன் நிஜ இயல்பு வடிவான ஆன்மாவை அடைந்து என்றும் அழியாத் தன்மை பெறுவாய். (அதற்கு நீ ஒன்றுமட்டும் செய்ய வேண்டும். அது யாதெனின்) சுபாசுப வாசனைகள் முற்றும் ஒழிந்து சும்மா விருக்கும் பரம சாந்திக்கு ஆசைப்பட்டவனாய் சற்று இவ்வருணாசலத்தை நினைப்பாயாக.

67. உழைத்துழைத்து வீண்பிறவி யுற்றழியா தென்னை
யழைத்தணைத்துக் கொண்டிங் கமர்த்திப் – பிழைப்பருள
வந்த தருணா சலமான்ம வாழ்வெனக்குத்
தந்த தருணா சலம்.

(பற்பல கோடி ஜன்மங்களாக) கர்ம வழிகளில் உழைத்து உழைத்து அதனால் மேலும் பற்பல வீணான பிறவிகளையே

யடைந்து அழியாதபடி என்னை இப்பிறப்பில் கூவியழைத்து, விடாப்பிடியாக என்னைப் பிடித்தணைத்துக் கொண்டு வந்து இங்கு இருக்க வைத்து, மரணமற்றுப் பிழைத்திருக்கும் பெருவாழ்வை அருளவந்தது இவ்வருணாசலமே. ஆன்ம வாழ்வை எனக்குத் தந்ததும் இவ்வருணாசலமே.

68. தயாசித்த ராவோர் தலைவனுண் டோவென்
றியாசித் தவர்வேண் டிடுமவ் – வியாஜ
கருணைக் கருணா சலமாங் கடவு
ளருணைக் கருணா சலம்.

(நான் எவ்வளவு பிழை புரிந்த பாவியாயினும் என்னை மன்னித்து ஏற்கக் கூடிய) தயை நிறைந்த உள்ளத்தவனாக யாராவது ஒரு கடவுள் உண்டோ என்று கெஞ்சி வந்த அடியார்கள் விருப்பத்திற் கேற்ற அவ்வியாஜ கருணாமூர்த்தி இவ்வருணாசலமே யாகும். இவ்வருணை நகருக்குத் தெய்வமாவதும் இவ்வருணாசலமே.

69. அழலிற் புழுவாப்பல் லாசையுட் பட்டே
யுழலு முயர்க்கிரங்கி யுள்ள - நிழலில்
விடுப்ப தருணா சலம்வினைக ளெல்லாந்
தடுப்ப தருணா சலம்.

பலவித ஆசைகளின் வசப்பட்டு, அனலிற் போடப்பட்ட புழுப்போலத் துடித்துத் துன்பவாழ்வை யனுபவிக்கும் உயிர்களுக்காக இரக்கப்பட்டு அவர்களை இதயமாகிய குளிர்ந்த நிழலிற் கோண்டுவந்து சேர்ப்பது இவ்வருணாசலமே. அவர்களது தீவினைகளையெல்லாம் தடுப்பதும் இவ்வருணாசலமே.

70. கேடுமிகுத் தேவெளியிற் கெட்டலையு நெஞ்சமக(ம்)
நாடுவதற் கேயிழுக்கு நல்லடியா - ரோடு
பிணைப்ப தருணா சலம்பிரியா தென்னை
யணைப்ப தருணா சலம்.

கேடுகள் மிகுந்து பஹிர்முகத்திலேயே கெட்டழிகின்ற

உயிர்களின் மனத்தை, ஆன்மாவை நாடுவதற்காகவே தூண்டியிழுக்கும் சற்சங்கமாகிய அடியார் கூட்டத்தோடு பிணைத்து வைப்பது இவ்வருணாசலமே. என்னைப் பிரிந்துபோக விடாது அருளால் அணைத்து வைத்துள்ளது இவ்வருணாசலமே.

71. நாம மருணா சலசிவமே நாவினிக்கப்
பாமலராற் பாடியிருப் பார்யோக - க்ஷேமம்
வகிப்ப தருணா சலம்மரண பாசந்
தகிப்ப தருணா சலம்.

'அருணாசல சிவ' என்ற திருநாமத்தையே நாவினிக்கப் பாமலர்களால் பாடி வாழ்ந்து வரும் தம் அடியார்களது யோக க்ஷேமங்களையெல்லாம் வகிப்பது இவ்வருணாசலமே. இயமனது மரண பாசக் கயிற்றை எரிப்பது இவ்வருணாசலமே.

72. கைவலியங் கைந்நெலியாக் கண்டுகொளக் காதலிப்போர்
தெய்வநிலந் தேடித் திரவாசஞ் - செய்ய
விழைவ தருணா சலம்ஞான மேலோர்
தழைவ தருணா சலம்.

யாரொருவர் கைவல்யானுபவத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் பெற விரும்புவரோ, அவர்கள் நல்ல தெய்வப் பதியொன்று தேடி விருப்பத்தோடு ஸ்திரமாக வசித்திருக்கத் தக்க இடம் இவ்வருணாசலமே. மேலோர்களாகிய ஞானிகள் தழைத்து ஓங்கியிருப்பதும் இவ்வருணாசலமே.

73. * மான வகந்தை வறுமைநோய்க் காளான
தீன மொழிக்குந் திரவியமாம் - ஞான
தனமும் அருணா சலமஃ தருள்சா
தனமும் அருணா சலம்.

தேகாபிமானமாகிய அகந்தை என்னும் வறுமை நோய்க்கு ஆளான தீனத்தன்மையை மாற்றும் ஐசுவரியமாகிய ஞான நிதி

---

* தேகத்தை நானென அபிமானிக்கும் அகந்தையெனும் வறுமை நோய்.

இவ்வருணாசலமே. இது நமக்கு அருளும் ஞான சாதனமான ஆத்ம விசாரமும் இவ்வருணாசலமே.

74. மிக்கழிக்குந் துன்ப வெளிநோக் கொழித்தகத்திற்
சிக்கவைக்கு மன்புத் திருநோக்காற் – பக்குவஞ்செய்
மாதா வருணா சலம்ஞான வாழ்வளிக்குந்
தாதா வருணா சலம்.

மிகுந்த துன்பத்தைத் தருகின்ற பகிர்முக நோக்கத்தை ஒழித்து ஆன்மாவில் மனத்தைப் பிடித்து வைக்கின்ற அன்புப் பார்வையால் அடியவர்களைப் பக்குவப்படுத்தும் (சமைக்கும்) மாதா இவ்வருணாசலமே. அவர்களுக்கு ஞான வாழ்வைத் தரும் தந்தையும் இவ்வருணாசலமே யாகும்.

75. மேய்ப்பா னிலாதலையு மேடமா காதெனக்கு
வாய்ப்பான சற்குருவாய் வந்திருந்து – காப்பான
நாமம் அருணா சலம்ரமண ஞானபரந்
தாமம் அருணா சலம்.

மேய்க்கும் எஜமானனில்லாமல் கால்போன இடமெலாம் ஓடித்திரியும் ஆடுகளில் நான் ஒன்றாக ஆகாதபடி, என் வாழ்வை நெறிப்படுத்தும் சற்குருவாய் எழுந்தருளி வந்து என் உடனேயே இருந்து எனக்குப் பெரும் பாதுகாப்பான திருநாமம் இவ்வருணாசலமே. ஸ்ரீ ரமணன் என்னும் எனது ஞான பரந்தாமமும் (ஞான ஸ்தானமும்) இவ்வருணாசலமே.

76. வருசகல முன்வினையின் வாதனைவெந் தோயப்
பொருவலியா யுள்ளெழுந்த போதன் – குருரமண
நம்ப னருணா சலம்ஞான வந்நிசிவத்
தம்பம் அருணா சலம்.

முன்வினைகள் யாவற்றாலும் பெருகி வருகின்ற வாசனைகள் எல்லாம் எரித்தழிந்து தீர, அவற்றை எதிர்த்தழிக்கும் உளத்தெழும் ஞானப் பேராற்றல் கொண்ட குருரமண வேந்தன் இவ்வருணாசலமே. ஞானக்னி வடிவான சிவஸ்தம்பம் இவ்வருணாசலமே.

77. செகவின்ப வாதனையைத் தீய்த்தான்ம ஞான
மிகவின்பந் தன்னடியர் மேவ – வகமாய்ப்
புரிப்ப தருணா சலம்பார மெல்லாந்
தரிப்ப தருணா சலம்.

உலக சுகங்களை நுகரத் தூண்டும் வாசனைகளைத் தன் அடியவர்களிடமிருந்து நீக்கி எரித்து ஆன்ம ஞான சுகத்தை அவர்கள் அடைய அவர்களுள் 'நான் நான்' என்று ஸ்புரிப்பது இவ்வருணாசலமே. அவர்களது வாழ்வுச் சுமை முழுவதும் தாங்குவதும் இவ்வருணாசலமே யாகும்.

78. தீர்ப்பியமன் செய்முன் றிருவருளா லன்பருக்கா
யார்ப்பரித்துப் போய்த்தன் னருட்கணக்கிற் – சேர்த்துக்
கணிப்ப தருணா சலங்கன்ம வேகந்
தணிப்ப தருணா சலம்.

உயிர்களுக்கு அவரவர் செய்த பாப புண்ணியங்களுக்கு ஏற்ப நரகமோ, சுவர்க்கமோ எது கொடுக்க வேண்டும் என்று இயமன் தீர்ப்பு கூறுவதற்குள், அவ்வுயிர்கள் தன் அடியவர்களாயின் அவர்களுக்காகத் திருவட்கருணை மேலிட்டு பெரிய ஆரவாரம் செய்து கொண்டுபோய்க் குறுக்கிட்டு, அவ்வடியவர்களைத் தனது அருளுக்குப் பாத்திரமானவர்களின் கணக்கிற் சேர்த்துக் கொண்டு கணக்கிட்டுக் காப்பாற்றி யெடுப்பது இவ்வருணாசலமே. அவர்கள் செய்திருந்தவை மிகவேகமாகப் பலன்தரக்கூடிய கர்மங்களாக இருந்த போதிலும், அந்தக் கர்மவேகத்தைத் தணித்து விடுவது இவ்வருணாசலமே.

79. " கூற்றமுறு முன்னங் கொடிய மனவழுக்கை
மாற்றவலி யில்லேனீ வாராயோ? - ஆற்றகில்லே
னப்பா வருணா சல" மென்று லாட்கொள்ளத்
தப்பா தருணா சலம்.

"சாவு வருவதற்குள் என் கொடிய மன அசுத்தங்களை எல்லாம் நீக்கிக் கொள்ள எனக்குச் சக்தியில்லையே, நீ வந்து உதவ

மாட்டாயா? என்றால் தாங்க முடியவில்லையே! அப்பா அருணாசலமே'' என்று அடியார்கள் முறையிட்டால் அவர்களுக்கு உதவிக் காப்பாற்றுவதில் தவறவே தவறாதது இவ்வருணாசலமே.

80. சமனாவீ ரேழு சகத்துறைவோர் யாரு
மமையா வருட்குருவா யாண்ட – ரமண
வ(ண்)ணலே யருணா சலமான்ம ஞானத்
தணலே யருணா சலம்.

ஈரேழுலகத்திலுள்ள மகான்கள் யாரொருவரும் தனக்குச் சமமான அருட்குருவாக இருக்கமுடியாதபடி சற்குருவாக வந்து என்னை யாண்டுகொண்ட ரமண பகவானே இவ்வருணாசலம். ஆன்ம ஞானாக்கினி இவ்வருணாசலமே யாகும்.

81. அயன்பறந்து தேடி யபிமுகமா மீண்டு
மயர்ந்தடங்கு மட்டு மவர்முன் – னுயர்ந்து
மிகுவ தருணா சலம் அடியர் மேவத்
தகுவ தருணா சலம்.

பிரம்மா அன்னப் பறவையாகி பறந்து மேலே சென்று தன் முடியைத் தேட, முடிவில் களைத்துப் போய் உண்முகமாகத் தலைகுனிந்து அடங்கும்வரையில் தான் அவருக்கு முன் மேன்மேலும் உயர்ந்து உயர்ந்து வளர்ந்து கொண்டே போனது இவ்வருணாசலம். மெய்யடியார்கள் அடையத்தகுந்தது இவ்வருணாசலமே.

82. உண்டுபொரு ளென்ற வுறுதியுட னம்பிக்கைக்
கொண்டவர்தங் கண்முன் குருவடிவாய்க் – கண்டு
களிப்ப தருணா சலமவர்க்குத் தஞ்ச
மளிப்ப தருணா சலம்.

''பரம்பொருள் ஒன்று சத்தியமாகவே இருக்கிறது'' என்ற (ஆஸ்திக புத்தியில்) திட நம்பிக்கை கொண்டிருக்கும் நல்லோர் தமது கண்முன் சற்குரு வடிவாய் அப்பரம் பொருளைக் கண்டு களிக்கத் தோன்றுவது இவ்வருணாசலமே. அவர்களுக்குத் தஞ்சம் அளிப்பதும் இவ்வருணாசலமே.

83. **புல்லத் தகாவகந்தை போக்காமற் புன்புலத்தை**
வெல்லற்கா மேற்கொள்ளும் வீண்கரும – மெல்லாங்
கழிப்ப தருணா சலங்கர்த்து ருத்வ
மழிப்ப தருணா சலம்.

சேரத்தகாத தீமையாகிய அகந்தையை முதலில் அழிக்க (ஆத்ம விசாரத்தால்) முயலாமல், அற்ப ஐம்புலன்களை எதிர்த்துப் போரிடும் சாதகர்களது முயற்சியாகிய வீண் கருமங்களை யெல்லாம் நீக்கித் தருவது இவ்வருணாசலமே. அகந்தையாகிய கர்த்ருவத்தை முதலில் அழித்து உதவுவதும் இவ்வருணாசலமே.

84. **பூட்டி யகப்பொறிகள் போதவுணர் வோடுநமுண்**
மூட்டுகின்ற சீரமணன் மோனத்தாற் – காட்டும்
பொருளே யருணா சலம்பொழியு மன்னோ
னருளே யருணா சலம்.

ஸ்ரீ ரமண சற்குரு நம் அந்தக்கரணங்களைச் சிறையிட்டு ''இருக்கிறேன்'' என்ற அறிவுணர்வோடு மட்டும் விளங்கும் பரமோனத்தால் நம்முள் காட்டித்தரும் பொருள் எதுவோ அது இவ்வருணாசலமே. அந்த ரமண சற்குரு நம்மேல் பொழியும் திருவருள் இவ்வருணாசலமே.

85. **காம தகனக் கருத்தோ டடியவர்க்குச்**
சேம ரமண திருவாக்கா(ம்) – நாம
முரசம் அருணா சலமூ விறைவர்க்
கரச னருணா சலம்.

ஸ்ரீ ரமண சற்குரு தன் அடியவர்களது உள்ளத்திலுள்ள அனாத்மக் காமங்கள் (உலக ஆசைகள்) அனைத்தும் எரியட்டும்; க்ஷேமம் உண்டாகட்டும் என்ற சங்கற்பத்தோடு தமது திருவாக்கால் முரசடித்து உபதேசித்த திருநாம மந்திரம் ''**அருணாசலம்**'' என்பதாகும். திரிமூர்த்திகளான கடவுளர்கட்கும் அரசன் இவ்வருணாசலமே.

86. **நன்றூற்ற சிந்தைமெய் நாவானு னெங்கெவ்வா**
றென்றூற்ற வேண்டுமதெல் லாந்தானே – நின்றூற்றி
வைப்ப னருணா சலனென்மேல் வாஞ்சையா
லப்ப னருணா சலம்.

நான் மனோவாக்கு காயங்களால் எங்கெங்கு, எவ்வெவ்வாறு என்றென்று நன்றாகச் செயலாற்ற வேண்டுமோ அவைகளை எல்லாம் ஆங்காங்கும் அவ்வவ்வாறும் அருணாசலன் தானே நின்று நடத்தி வைத்தருள்வான். ஏனெனில் என்மேல் உள்ள வாஞ்சையால் அப்படிச் செய்தருளும் என் தந்தை அருணாசலம்.

87. **புலர்ந்த சதோதயமெய்ப் போதரம ணேச**
னலர்ந்த முகத்தா மரைவாய் – மலர்ந்த
வசனம் அருணா சலம்பரம ஞான
வசலம் அருணா சலம்.

நூறு உதயசூரியப் பிரகாசமாய் விளங்கும் மெய்ஞ் ஞானியாகிய ஸ்ரீ ரமணேசனது மலர்ந்த தாமரை முகத்தினின்றும் வெளி வந்த மந்திர வசனம் இவ்வருணாசலமே. பரம ஞானமலை இவ்வருணாசலமே யாகும்.

88. **தவவீரங் குன்றுங்காற் ''றத்துவ''மென் றென்பா**
னவவீர மீந்த ரமண – சிவவீர
சிங்கம் அருணா சலமெனக்குத் தேடி வைத்த
தங்கம் அருணா சலம்.

தமோ வலிவான பிரமாதத்தால் என்னுள் தவவீரம் குறையும்போது, ''அடே, நீ அந்த பிரம்மமே'' என்று என்னிடம் ஒருவித புது வீரத்தை மூட்டி விடுகின்ற என் சற்குருவான ரமண சிவவீர சிங்கம் இவ்வருணாசலமே. அவர் எனக்கு என்றென்றும் அழியாச் செல்வமாய்த் தேடி வைத்த தங்கம் இவ்வருணாசலமே.

89. ***உளங்கா தலித்த லுசாவற் கணத்தில்**
விளங்கா விடிலது விந்தை – விளங்கா
†மருமம் அருணா சலமென் சுயமாந்
தருமம் அருணா சலம்.

---

* உளங்காதலித்தல், உசாவல் - ஸ்வாத்ம பக்தி. ஆத்ம விசாரம்.

† ஸ்வாத்ம நாட்டமே ஸ்வதர்மம் என்றுணராமல், உடல் வாழ்வைக் கொண்டு நிர்ணயிக்கப்படும் வர்ணாசிரம தர்மங்களை ஸ்வதர்மமாகக் கொள்ளும் மயக்கமே '' விளங்கா மருமம்'' என்று குறிப்பாக உணர்த்தப்பட்டது.

ஸ்வாத்ம பக்தி, ஆத்ம விசாரம் இவை என்ன என்பது ஒருவர்க்கு விளங்காவிட்டால் அது பெரியஆச்சரியமே. எடுத்த எடுப்பில் இவை விளங்கவில்லை என்றால் அதைப் பெரிய மர்ம (மாயை)மாக வைத்திருப்பது இவ்வருணாசலமே. என் ஸ்வதர்மமே இவ்வருணாசலம்தான்.

90. **தொழுதற் கருணா சலமன்பு தோன்றி**
யழுதற் கருணா சலமவ் – வழுங்கண்ணீர்
சித்தங் கழுவிச் சிவமாக்கும் பத்திநெறித்
தத்வம் அருணா சலம்.

நான் தொழுவதற்கென்றே எழுந்தது இவ்வருணாசலம். அன்பு மூண்டு நான் அழுவதற்குக் குறிப்பொருள் இவ்வருணாசலமே. அவ்வாறு அழுங்கண்ணீரால் கழுவி என் சித்தத்தை சுத்தீகரித்து சிவமாக்கும் பக்தி நெறியின் தத்துவம் இவ்வருணாசலமே.

91. **காண வருணா சலங்கண்ணுன் மெய்க்காதற்**
பூண வருணா சலம்புலன்க – ணணைவைக்கும்
விந்தை யருணா சலமெனக்கு வேட்கைசேர்
தந்தை யருணா சலம்.

என் கண்கள் காணக் கிடைத்தது இவ்வருணாசலம். உண்மையான பக்திபூணக் கிடைத்தது இவ்வருணாசலம். அத்தகைய மெய்க்காதல் தன்னிடம் எனக்கு உண்டாக்கித் தருவதால் கவர்ச்சியை உண்டாக்கும் ஐம்புலன்களின் சக்தியையும் வெட்கமடையச் செய்யும் ஆச்சரியமான கவர்ச்சிப் பொருள் இவ்வருணாசலமே. எனக்கு ஆசை மிகுந்த தந்தையும் இவ்வருணாசலமே.

92. **கண்ட தருணா சலமென் குருவடிவு**
கொண்ட தருணா சலங்கொடியேன் – பண்டு
நினைத்த தருணா சலமிந் நிகழ்ச்சி
யனைத்தும் அருணா சலம்.

நான் கண்ட கடவுள் அருணாசலமே. என் சற்குருவான ரமண வடிவங் கொண்டதும் இவ்வருணாசலமே. நான் மிகக்

கொடியவனாயினும் எப்படியோ முதன் முதலாக முன்பே நினைத்தது இவ்வருணாசலமே. இந்நிகழ்ச்சிகளெல்லாம் அவனருளே யாதலால் அவை யாவும் இவ்வருணாசலமே.

93. **எண்ணற் கருணா சலமுளத்து ளின்னமுதா**
யுண்ணற் கருணா சலமுண்பார்க் – கெண்ணமற
வாயும் அருணா சலமாராய் வார்க்கருளூந்
தாயும் அருணா சலம்.

நான் நினைப்பதற்கு இனிப்பது இவ்வருணாசலம். உள்ளத்தில் இனிய அமுதமாய் நான் உண்பது இவ்வருணாசலம். உள்ளத்தில் இவ்வாறு அருணாசல ஸ்மரணையையே உட்கொள்வோர்க்கு எண்ணமற்ற நிலை தந்து ஆன்ம ஆராய்ச்சியைத் தூண்டுவது இவ்வருணாசலம். ஆன்ம விசாரத்தி லீடுபட்டோர்க்கு ஆன்ம ஞானத்தை ஊட்டும் தாயும் இவ்வருணாசலமே.

94. **துதிப்ப தருணா சலநாமஞ் சொல்லத்**
தித்திப்ப தருணா சலமெய்ந் – நிதித்திரளா(ம்)
முத்தி யருணா சலம்ரமண மௌனமகா
சத்தி யருணா சலம்.

நான் துதிப்பது இவ்வருணாசலத்தையே. ''அருணாசலா'' என்ற திருநாமத்தைச் சொல்லும்போது எனக்குள் இனிப்பது இவ்வருணாசலமே. உண்மையான ஞானநிதியின் பொக்கிஷமாகிய முக்தி இவ்வருணாசலமே. ஸ்ரீ ரமணபிரானிடம் மிளிர்ந்த மௌன மகாசக்தி இவ்வருணாசலமே.

95. **தெரிவ தருணா சலமெய் திளைக்கப்**
புரிவ தருணா சலமென் – றிரிகரணக்
காவ லருணா சலமெனக்குக் கட்டடங்கா
ஆவ லருணா சலம்.

என் கண்முன் விளங்குவது அருணாசலம். மெய்ப்பொருளில் என்னைத் திளைக்க வைப்பது அருணாசலம். என் திரிகரணங்களையும் (தவறான வழி செல்லாது) காவல் காப்பது அருணாசலம். எனக்குக் கட்டுக்கடங்காத ஆவற் பொருள் இவ்வருணாசலமே.

96. இகமும் அருணா சலமெனக்கிங் கெல்லாச்
சுகமும் அருணா சலமென் – பகவன்
முகமும் அருணா சலமகந்தை மூளா
வகமும் அருணா சலம்.

எனக்கு இவ்வுலகவாழ்வு என்பது அருணாசலம். இங்கே எனக்கு எல்லாச் சுகங்களும் அருணாசலமே. என் சற்குரு ரமண பகவனது திருமுகமும் அருணாசலமே. அகங்காரம் உதிக்காத அடியார்களின் உள்ள முழுதும் அருணாசலமே.

97. ஆதி யருணா சலமுள் ளகமகமாஞ்
சோதி யருணா சலமுணர – வாதியற்றிப்
போதி லயனும் புரந்தரனுங் காணாவந்
தாதி யருணா சலம்.

ஆதிப் பொருள் அருணாசலம். உள்ளத்தில் 'நான் நான்' என்று விளங்கும் ஆத்மஜோதி இவ்வருணாசலம். தன்னைக் கண்டுபிடிக்க வெண்ணி மலர்மேலிருந்த பிரம்மாவும் விஷ்ணுவும் வாது செய்து காணமுடியாத அந்தாதி (முடியடி) இவ்வருணாசலமே.

98. உருவம் அருணா சலமுலக மொன்று
மருவம் அருணா சலமெய்க் – குருவாய்
வருவ தருணா சலம்ஞானம் வந்தாற்
சருவம் அருணா சலம்.

பரம்பொருளின் சகுண வடிவம் அருணாசலம். பிரளய முடிவில் எல்லா வுலகங்களும் அடங்கி மறையும் அருவ நிலை இவ்வருணாசலமே. **நமக்கு சத்திய ஞான ரமண குருவாய் வந்துள்ளது அருணாசலமே.** ஆன்மஞானம் வந்தவர்கட்கு எல்லாமும் அருணாசலமே.

99. முற்றுணர்ந்த ஞானபர மோனத்தாற் பேரருளாற்
கற்றடங்கேன் சொன்மனமெய்க் கன்மநவை – முற்றும்
பொறுப்ப தருணா சலமகந்தை வேரை
யறுப்ப தருணா சலம்.

உண்மையை முழுதும் அறிந்து ஞானநிலையான பரமோனத்தாலும், குருவின் பேரருளாலும் கற்றடங்கி நிற்காத கடையேனுகிய என் மனேவாக்குக் காயங்களில் ஏற்படும் குற்றங்களெல்லாம் பொறுத்துக் கொள்வது இவ்வருணாசலம். என் அகந்தை வேரை அறுத்தெரிவது இவ்வருணாசலமே.

100. போற்றி யருணா சலஞானப் பொன்வடிவம்
போற்றி ரமணப் புமான் கழல்கள் – போற்றி
யருணா சலரமணற் காட்பட்டார் போற்றி
யருணா சலசிவநா மம்.

ஞான சொரூபமான இவ்வருணாசலப் பொன்வடிவம் போற்றி. ஸ்ரீரமண பகவானது திருவடிகள் போற்றி. அருணாசல ரமண குருவுக்கு ஆட்பட்டவர்கள் போற்றி. "**அருணாசல சிவ**" என்ற திருநாமம் போற்றி.

அருணாசலப் பிரதக்ஷிண மாண்பு

1. ஆன்ம நிட்டை யன்புநெறி யட்டாங்க யோகமுறத்
தான்மலைக்கு(ம்) நெஞ்சுந்தன் சஞ்சலத்தால் – மேன்முயல
நற்றவமா யொன்றெளிதா நாடுமே லிம்மலையைச்
சுற்றி வரட்டுந் தொடர்ந்து.

ஒருவன் தன் சஞ்சல சுபாவமுள்ள மனத்தால் ஆன்ம விசாரம் செய்யவோ, பக்தி நெறியிற் பயிலவோ, அஷ்டாங்க யோகத்தைப் பின்பற்றவோ முடியாமல் மலைப்பானாயின், அவனுக்கு மேற்கொண்டு முயல்வதற்கு ஏதாவது ஒரு நல்ல எளிதான தவமுறை வேண்டும் என்று கருதுவானாயின். இவ்வருணாசலத்தைத் தொடர்ந்து பிரதக்ஷிணம் செய்து வருவானாக.

2. மித்தையுல கக்கவர்ச்சி மீளவலி வில்லாத
பத்தியெனும் பணிவு பூண்டவனாய்ச் – சத்தினர்பால்
மிக்கணுகிச் செல்லுமள விற்குனுளந் தானாகப்
பக்குவமா யாக்கப் படும்.

நீ இப்பொய்யான உலகப் பொருள்களின் (புலநுகர்ச்சிகளின்) கவர்ச்சிகளிலிருந்து உன்னை மீட்டுக்கொள்ளத் தகுந்த புத்திவலிவு (விவேக வைராக்கியம்) இல்லாதவனாய் இருந்தாலும், சத்துக்களாகிய மகான்களிடம் பணிவு பூண்டவனாய் எவ்வளவுக்கெவ்வளவு நெருங்கிப் பழகுகிறாயோ அந்த அளவிற்கு உன்மனம் அவர்களால் தானாகவே பக்குவமாக்கப்படும்.

3. எவ்வா றெனிற்காட் டெரியைச் சமீபித்த
செவ்வாழை யுங்காய்ந்துத் தீப்பிடிக்கும்; – அவ்வாறே
சேர்வோர்தஞ் சித்த மவர்க்குந் தெரியாம
லார்வமுறச் செய்யு மகத்து.

எவ்வாறென்றால் பெரிய காட்டுத் தீயிற் போடப்பட்டால் வாழை மரமுங்கூட, தன் நீர்ச் சத்து வற்றிக் காய்ந்து போய்த் தீப்பிடித்து எரியும். அவ்வாறே. மகான்களாகிய சத்துக்களிடம்

சேர்ந்து பழகுவோருடைய சித்தமும் தமக்குந் தெரியாமல் ஆன்ம நாட்டத்தின் மிகுந்த ஆர்வங் கொள்ளும்படி அந்த சற்சங்கம் செய்து வைக்கும்.

4. **சத்தினரே சாதுக்கள்; சச்சிதா னந்தசொரூ**
பத்திற் பிறிதன்றப் பாவனர்கள்; – சத்துக்கோர்
தூல வடிவமிங்கு தோன்றுமரு ணாசலமென்
றேலவறிந் திங்கே யிரு.

சத்தில் நிலைத்தவர்களே சாதுக்கள். அந்தப் பரிசுத்த மகான்கள் சச்சிதானந்தப் பிரம்ம ஸ்வரூபத்திற்கு வேறல்லர். பிரம்ம ஸ்வரூபமாகிய அந்த சத் பொருளுக்கு ஒரு ஸ்தூல வடிவம் வேண்டுமானால் (எல்லா மகான்களிலும் சிறந்ததாய்) இங்கு உற்பவித்திருக்கும் ''இவ்வருணாசலமே அது'' வென்ற உண்மையை யறிந்து கொண்டு, அப்பர வஸ்துவுடன் சத் சங்கத்திற்காக இங்கேயே வசிப்பாயாக.

குறிப்பு : அருணாசலத்தில் வசிப்பதையும் அருணாசலத்தைப் பிரதக்ஷிணம் செய்வதையும் விடச் சிறந்த சற்சங்கம் யாதொன்றுமில்லை எனப்பட்டது.

5. **துவித விருத்தியினாற் றூர வகற்றும்**
விவிதகரு மங்களினும் வேறாய் – சவிதாவைத்
தூரவில காத துவித விருத்தி வலஞ்
சேர வருவதிதைச் செய்.

விதவிதமான எந்தக் கர்மமும் மனத்தின் ஒரு துவித விருத்தியே. அதனால் எந்தக் கருமம் செய்தாலும் அது ஒருவனை ஆன்ம மத்தியினின்றும் மேலும் மேலும் தூரத்திலேயே அகற்றி வைக்கும். ஆனால் இதற்கு விதிவிலக்காக ஒன்றுண்டு. அதாவது ஞான சூரியனாகிய அருணாசலத்தை விட்டுத் தூர விலகிச் செல்லாதபடி வேண்டுமானால், அது இவ்வருணாசலத்தைப் பிரதக்ஷிணம் செய்வதேயாகும்.

குறிப்பு: அருணாசல சிகரத்தை மையமாகக் கொண்டு பிரதக்ஷிணம் என்னும் ஒரு துவித விருத்தியை ஒருவன் எவ்வளவு செய்தாலும்

அவனது பிரயாணம் முழுவதும் அவனை அருணாசலத்தை விட்டு வேறெங்கும் போகாதவனாக ஆக்கிவிடுவதால் (மற்ற கர்மங்கள் அவனை மையத்தினின்றும் தூர விலக்குவது போலாகாமல் அருணாசலத்துடனேயே வைத்திருப்பதால்) இதை ''தூர விலகாத துவித விருத்தி'' என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

6. சுற்றி வரும்பசுநீள் தும்பு முளையிலே
சுற்றித்தன் நீளஞ் சுருங்கிவர – லுற்றறியா
தவ்வா றருணா சலவலத்தாற் றனொடுங்க
லெவ்வாறுன் னெஞ்சறியு மெண்.

தரையி லடிக்கப்பட்ட ஒரு முளையில் சுருக்கிட்ட ஒரு நீளமான கயிற்றின் நுனியிற் கட்டப்பட்ட ஒரு பசு அம் முளையைச் சுற்றிச் சுற்றி மேய்ந்து வருமானால், அக்கயிறு மேலும் மேலும் முளையிலே சுற்றிக் கொள்வதால், அதன் நீளம் குறைந்து வருவதை அந்தப் பசு அறிவதில்லை. அவ்வாறே அருணாசலத்தைப் பிரதக்ஷிணமாகச் சுற்றிக் கொண்டே யிருப்பதால் மனத்தின் விரிவு (விருத்திகள்) கொஞ்சங் கொஞ்சமாக ஒடுங்கிக் கொண்டே வருவதை எவ்வாறு ஒருவனுடைய மனமே அறிந்து கொள்ள முடியும்?

7. மேன்மேலுஞ் சுற்ற, விலகமுடி யாதுபசு
தான்முளையி லேயே தகைபடல்போல் – ஆன்மவான்
அண்ணா மலைவலஞ்செய் யன்புமன(ம்) நிச்சலமா
யுண்ணாடி நிற்குமெலா மோய்ந்து.

அந்தப் பசு மேலும் மேலும் முளையைச் சுற்றிவர கடைசியில் (கயிற்றின் நீளம் முழுவதும் குறைந்த பிறகு) அது அந்த முளையிலேயே மேலும் விலக முடியாதபடிக் கட்டுப்பட்டு நின்று விடுவது போல், பரமாத்மாவாகிய, வானளாவிய அண்ணாமலையை அன்போடு வலம் செய்யும் அடியவர்களின் மனம் வாசனை களெல்லாம் ஓய்ந்து அசைவற்று ஆன்மாவை நாடி உண்முகப்பட்டு நிற்கும்.

8. **அண்ணு மலேவலஞ்செய் யன்பருள மான்மாபா
லுண்ணுடி நிற்க வுருசியுறல் - கண்ணூரக்
கண்டபே ருண்மை; பவக் காமங் களேயெரித்து
மண்டுமெரி யண்ணு மலே.**

அண்ணுமலேயைப் பிரதக்ஷிணம் செய்யும் அன்பர்களது உள்ளமானது அந்தர் முகப்பட்டு, ஆன்மாவை நாடியறிந்து நிற்க (ஸ்வாத்ம பக்தியில்) மிகவும் விருப்பம் கொண்டு விடுவது நாம் பலரிடமும் கண்ணூரக் கண்ட பெரிய உண்மையாகும். மறுபிறவிக்கு ஹேதுவாகிய ஆசைகளே யெல்லாம் எரித்துவிட்டு, மேன்மேலும் ஞானமயமாக மண்டி எரியும் ஞானத் தீயே அண்ணுமலே என்றறிக.

9. **இரும்பணுக்கள் பன்முகமா வேய்ந்தவற்றைக் காந்தத்
திரும்பவைத்துத் தென்வடலாச் செய்யந் – திரும்புவதாற்
ருன்காந்த மாவதுபோற் றன்முகமாக் கும்பிரம்ம
வான்காந்த மண்ணு மலே.**

பல திசைகளில் முகந் திரும்பிச் சிதறிக் கிடக்கும் இரும்பணுக்களே, தான் அவற்றுடன் உராய்வதால் காந்தமானது அவ்வணுக்களே யெல்லாம் தெற்கு – வடக்காக முகங்கொண்டு திரும்பி நிற்கச் செய்கிறது. இவ்வாறு இரும்பு அணுக்களின் முகத்தை ஒழுங்காகத் திருப்பி நிறுத்துவதால் அந்த இரும்பும் காந்தமாகி, மனத்தை ஆத்மாபி முகமாகத் திரும்பி நிற்கும்படி இந்த பிரம்மாகாசக் காந்தமாகிய அண்ணுமலே செய்து விடுகிறது!

10. **ஆரம்பங் காமியமா யண்ணு மலேவலத்தை
தீரவச்சி ராங்கன்முன் செய்தாலும் – ஈரம்போ
யுள்ளப் பரிசுத்த முற்றிறுதி யின் முத்தி
கொள்ளல்சான் ருயிதற்குக் கூறு.**

தீரஞகிய வஜ்ஜிராங்கத பாண்டியன் ஆரம்பத்தில் அருணுசலப் பிரதக்ஷிணத்தை, ஒரு காமியத்தை முன்னிட்டே (தனது பூர்வ இந்திரப் பதவியை மீண்டும் பெறுவதற்காகவே) செய்ய

ஆரம்பித்தாலும், பிரதக்ஷிணம் செய்யச் செய்ய பற்றுக்களெல்லாம் அகன்று (காமியக் கோரிக்கைகள் தாமாகவே நீங்கி) மனம் பரிசுத்தம் அடைந்து முடிவில் ஜீவன் முக்தி பெற்ற கதையை இதற்குப் பிரமாணமாகக் கூறலாம்.

ஸ்ரீ

அருணாசல மாஹாத்மியம்

(கிரிவல முறை)

1. மகமா யிரமே புரிமா பயனிம் மலையோர் வலம் வந்தால்
இகமே லடைவார் சிறுபுண் ணியருக் கிதுகிட் டிடுமோ? வேள்
தகனம் படுவான் மவுனத் தருணா சலமே வலமேக
சுகசா தனமா தவமீ வலமே சுலபத் தருளாகும்.

2. வலமே புரிவோ ரடிமே லடியாய் வழியின் மெதுவாய்ச்சென்
றுலவும் படியே செலவேண் டுமெலா வுலகின்வதிமேலோர்
பலரும் தினமும் பரமேச் வரனை வலங்கொள் பவராகிச்
செலவுந் திரளாய் உலகோர் விழியில் தெரியா ததனாலே.

3. குருமா ரமணன் கிரியின் வலமே கொளுநா ளொருகாலே
பெருமா வொளியா முருவாய்ப் பலபேர் பிரத க்ஷிணமாகித்
திரமே னியைபூ மியின்மே லுயரம் சிறிதே உளதாக்கி
அருகா மைவளைந் ததுகண் டனரற் புதமென் னதனாலே.

4. நிறைகர்ப் பிணிபோல் நிலமே லதிரா நெறியோ டடியார்கள்
மறைவற் றிடுமா மலையே வழியால் மனதால் மறவாமல்
பறையுந் துதியோ, பரநா மமெதோ பலவும் புரிவாராய்
இறைவன் றனையே குறியாய் வலங்கொண் டிடலே முறையாமே.

5. வானிடை யேசுக வாழ்வுடை யாரெனு மாமலை வலமாகுங்
கால், நடையேபுரி வார்விலக் காவொரு காரண மாகாதே
தானடை புண்ணிய மேகெடும் வாகனந் தன்மிசை போவார்க்கே
கால்நடை யேதகுங் கால்நடை யேதகும் வாகன மாகாதே.

6. வாகன மன்றியு மேவலம் செய்திட வந்தவர் தம்பாதத்
*தேகவ சந்தரித் தேநடை கொள்வது மேசிவ அபராதம்
போகந லத்தோடு மேகவ லஞ்செயின் புண்ணிய மழிவாகும்
தேகமிம் மாமலைத் திவ்விய தூளியைத் தீண்டுதல் தவமாமே.

---

* தேகவசந் தரித்தே நடை - பாதத்தை காலணியுடன் அலங்கரித்த நடை.

7. பொங்கொளி மாமலை பூரண அன்பு பொருந்திய புகழ்சான்றோர்
அங்கமுருண்டு வலம்பட வேயருணாசல னருளாலே
இங்கிவர் தேக மிருந்திடு நாள்வரை இந்திரன் படையாலும்
பங்கமு றாவலி வாகி யுடற்பிணி என்பது பற்றாதே.

8. ஆதலா லருணை யீசன் அக்கிரி வலமே செய்யும்
பாதமே பாதம் மேலும் பாபங்கள் இதனால் தீர்ந்தோர்க்
கேதொரு கணக்கு மில்லை இறைவனா மருணை சைல
நாதனைத் தொழுதோர் பெற்ற நலஞ்சொலின் விரிவி னாமே.

– ஸ்ரீரமணாயனம்

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணாசலரமணாய



ஸ்ரீ
அருணாசல அக்ஷரமணமாலையின்
விரிவுப் பாமாலை

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ ரமணேசா
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ ரமணேசா

1. அருணா சலனடி யருணா டியேதிரு
வருணா சலம்வந்த வருளாளா
அருணா டகத்திரு வரசே யடியவர்
அறியா மையகல வருள்வோனே
அருணா சலனவ னருளா லவனென
வழகார்ந் தருள்தருங் குருநாதா
அருணா சலமென அகமே நினைப்பவர்
அகத்தைவே றறுப்பாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அருணாசலனது திருவடி யருளையே நாடி அருணாசலத்தை வந்தடைந்த அருளாளனே, திருவருள் திருத்தாண்டவ மாடும் அரசனே, உன் அடியவர்களது அறியாமை நீங்கும்படி அருள்புரிவோனே, அருணாசலனது அருளால் அவ்வருணாசலன் தானேயாகச் சமைந்த அழகனே, எங்களுக்கு அருள் தரும் குருநாதனே, '**அருணாசலம்**' என்று உள்ளத்தில் தியானிப்பவர்களது அகந்தையை வேரோடு அறுத்தருள்வாயாக.

2. பழகப் பழகப் பாலாய்ப் புளித்திடும்
பயனொன்று மில்லா வுலகாசைச்
சுழலுழன் றிளைக்கத் துணிந்திடா துன்பாற்
றுணையென வந்தேன் சுதனென்னைக்
கழலரு ளுண்ணக் கருணைநீ புரிவாய்
கங்குலும் பகலுமே காணாதே
அழகுசுந் தரம்போ லகமும் நீயுமுற்
றபின்னமா யிருப்போம் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ''பழகப் பழகப் பாலும் புளிக்கும்'' என்பர். அதுபோலவே அனுபவிக்க அனுபவிக்க மேலொரு நற்பயனுமின்றி துன்பத்தையே தருகின்ற உலக ஆசைகளின் சுழலில் அகப்பட்டு இளைத்துப் போக விரும்பாமல் உன்னைத் துணையென்று நம்பி வந்துள்ளேன். உன் பிள்ளையாகிய நான் உன் திருவடித் திருவருளை யுண்ணும்படி நீ கருணை புரிவாயாக. அதனால் இரவு பகல் தெரியாமல் அழகும் சுந்தரமும் போல் நானும் நீயும் ஏகமாய்ப் பொருந்தி இரண்டற் றிருப்போம்.

3. சுகவழி தெரியாச் சுணங்கனை யுலகச்
சுழல்வழி வேண்டா வகைசெய்தாய்
இகபர மெல்லா மினியுனக் கென்றும்
இறைவனா னெனவே யறிவித்தாய்
மகனென வென்னை மனைவிடுத் தகற்றி
வாழ்வித் திடவே மகிழ்வாயென்
அகம்புகுந் தீர்த்துன் அககுகை சிறையா
யமர்வித்த தென்கொல் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உண்மையான பேரின்பத்தை அடையும் வழி எதுவென்று அறியாத நாயேனை இவ்வுலகாயத வழியை மேற்கொள்ளாதபடி செய்து வைத்தாய். ''உனக்கு இகத்திலும் பரத்திலும் சுகங்கள் அனைத்தையும் தருபவன் இப்பொழுதும் எப்பொழுதும் உன் இறைவனாகிய நான் ஒருவனே'' என்று எனக்கு அறிவித்தாய். உன் பிள்ளையாகவே என்னை வளர்ப்பதற்காக என்னை வீட்டிலிருந்து வெளியேற்றி,

அன்போடு என் உள்ளம் புகுந்து இழுத்து வந்து உன் இருப்பிடமான அருணாசலப் பதியாகிய குகையில் அமர்வித்துக் கொண்டாயே! ஆ, நின் கருணை இருந்தவாறென்னே!

4. ஊருக் காவிலை யுடைமைக் கிலையுயர்
உண்டிக் கிலைபெண் டிர்க்கில்லை
பேருக் காவிலை பேயே னுன்னடி
பேசிய வார்த்தை யிதுகாறும்
பாருக் குட்பெரும் பாவிக் குன்னருள்
பாலித் தழைத்தோ யுனக்கன்றி
ஆருக் காவெனை யாண்டனை யகற்றிடில்
அகிலம் பழித்திடும் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இதுநாள் வரை பேயனாகிய நான் உன்னிடம் தொழுது வேண்டி நின்றதெல்லாம் ஊரார் புகழ்வதற்காக அல்ல; உடைமைகளாக எப்பொருள்களையும் பெறுவதற்காகவு மல்ல; நல்ல உணவு வேண்டியுமல்ல. பெண்டிரை அடைய வேண்டியுமல்ல. நற்பெயரான மேன்மையைப் பெறுவதற்காகவுமல்ல. இவ்வுலகத்திலுள்ள ஜீவர்கள் அனைவரிலும் பெரிய பாவியாகிய எனக்கும் இரங்கி அருள்பாலித்தாயே, அத்தகைய உன்னை அடைவதற்குத் தானே பாடிப் பணிந்தேன்! நீயும் என்னை உனக்காகத்தானே ஆட்கொண்டாய்! இனி நீ என்னை விலக்கினால் இவ்வுலகம் உன்னைப் பழிக்குமே!

5. சொற்பழி யொன்றுந் தொடராப் பீடுயர்
துணைவா யார்க்குஞ் சொல்லாமல்
எப்படி யுன்ற னடிக்கே யடிமை
யெடுத்தா யென்னை யினிமேலும்
தப்பித மில்லா மெய்ப்பய னீயத்
தடைதான் சொல்லி விடுவாயோ
இப்பழி தப்புனை யேனினைப் பித்தாய்
இனியார் விடுவார் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பழிச்சொல் யாதொன்றும் இதுவரை ஏற்படாத அத்தகைய அருட்பெருமை பெற்ற துணைவனே! நீ எப்படியோ யாருக்கும் சொல்லாமல் என்னை உன் திருவடிக்கே அடிமையாக எடுத்துக் கொண்டு வந்து விட்டாயே! இனியும் பழுதற்ற மெய்ப்புருஷார்த்தப் பயனை எனக்குத் தராமல் ஏதாவது தடை சொல்லி விடுவாயோ? அந்தோ, இந்தப்பழி உனக்கு வந்து சேராமல் தப்பித்துக்கொள். (அதாவது எனக்கு அப்பயனைத் தந்து பழியினின்று தப்பித்துக் கொள்க) ஏனென்றால், நீ ஏன் உன்னை நான் நினைக்கும்படி செய்தாய்? எனவே இனி நீயோ நானோ யார் இப்பிணைப்பை விடமுடியும்?

6. ஊன்றிய வுள்ளத் துடனுன் னடிக்கீழ்
ஒருநா ளேனும் பிரியாத
சான்றவர் போலத் தடையிலா பத்திச்
சாதன மறியேன் தடுமாறித்
தோன்றிய வண்ணந் துதித்தழ வின்னுந்
துணையருள் செய்யத் துணியாயோ?
ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரிவோய்
இதுவோ வுனதருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன் திருவடியினின்றும் ஒருநாளும் விலகாதபடி தம் மனத்தை ஸ்திரமாக நிலைநிறுத்தியுள்ள உனது மேலான அடியார்களைப் போலத் தடையற்ற பரபக்தி சாதனத்தை நான் பெற்றறியேன். தடுமாறி எனக்குத் தோன்றியபடி யெல்லாம் உன்னைத் துதித்து அழுகின்றேன். எனினும், நீ எனக்கு உன் அருட்டுணையை அளிக்கமாட்டாயா? பெற்ற தாயினும் பெரிதும் இரக்கமுடன் அருள் செய்பவனே, என்னை இப்படித் துடித்து அழவிடுவதுதான் உனது திருவருளோ?

7. அன்னையாய் தந்தையா யருமனை மகவாய்
ஆசையி லலையவே முன்செய்த
வினையை மாற்றியுள் விடுதலை தரவே
வேகத் துடனன் றுள்ளூறி

எனையே மாற்றி நின்னருட் கடிமை
யெடுத்தா யினியெனு மென்னெஞ்சம்
உனையே மாற்றி யோடா துளத்தின்மேல்
உறுதியா யிருப்பாய் ரமணேசா.

தாயென்றுந் தந்தையென்றும், மனைவி என்றும் பிள்ளைகள் என்றும் உள்ளத்தில்எழும் ஆசாபாசங்களிலேயே அலையத் தக்கவாறு நான் பூர்வ ஜன்மங்களில் கர்மங்களைப் புரிந்திருந்துங்கூட, அந்த வினைப் பயன்களை மாற்றி உள்ளத்தில் விடுதலையை எனக்குத் தருவதற்காகவே, ஸ்ரீ ரமணேசா, நீ இந்த எனது ஜன்மத்தில் மிக வேகமாக முன்பொரு நாள் என் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகி, என்னை அடியோடு மாற்றி, (என் கன்ம பலன்களையும் ஏமாற்றி), உன் அருள் திருவடிகட்கு அடிமையாகும்படிச் செய்து என்னை நீயே எடுத்துக் கொண்டு விட்டாய். இனிமேல் என் மனம் உன்னை ஏமாற்றிவிட்டு உலகியலில் ஓடிச்சென்று விடாதபடி அதன்மேல் உறுதியாக அமர்ந்து கொள்வாயாக.

8. ***ஊர்சுற் றிலுமலைந் துலகப் பொருள்விடுத்***
துயர்வைத் தருங்குரு தனைநாடிப்
போர்சுற் றிடுமுளப் புலையே னேங்கிவீண்
பொழுதுங் கழித்திடும் பொழுதேநீ
தார்சுற் றிடும்பதத் தாய்நின் னருள்எனைத்
தான்சுற் றிடமுனந் தானேற்றாய்
ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட்டு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உள்ளே மருளாசைகளுக்கும் அருளாசைக்கும் பெரும் போர் மூளப்பட்ட உள்ளத்தையுடைய நான் ஊர் சுற்றி யலைந்து உலகப் பொருள்களைத் தேடாமல் என் உயிருக்கு உயர்வைத் தரக்கூடிய சற்குருவைத் தேடி, ஆனால் நீ கிடைக்காததால் ஏங்கி வீண்பொழுது கழித்துக் கொண்டிருந்தபோது, அடியார்களது பாமாலைகளும் பூமாலைகளும் எப்போதும் சூடிக் கிடக்கும் பாதத்தை

யுடையவனே, உன் திருவருளே என்னை யணைந்து கொள்ளும்படி வந்து அன்றொருநாள் ஏற்றுக்கொண்டாய். இனிமேல், என் மனம் உலக ஆசைகளுக்காகச் சுற்றித் திரியாமல் உன்னையே இடைவிடாமற் கண்டுகொண்டு அடங்கி நிற்க உன் திருவருளழகைக் காட்டியருள்வாயாக.

9. *முனையழித் திடும்பாற் கடல்விட முண்டாய்*
முகமகிழ் வாக, முனிந்தேமன்
றனையழித் தாயுன் றன்னடி யவரைத்
தாங்கிட, இன்றோ அடியேனின்
வினையழித் தென்னை விருப்புட னுண்ட
விறலுடை வீரன் நீயன்றோ
எனையழித் திப்போ தெனைக்கல வாவிடி
லிதுவோ வாண்மை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, முன்பொரு காலத்தில் உலகங்களை யெல்லாம் அழிக்கக் கூடியதாய்ப் பாற்கடலினின்றும் எழுந்த ஆலஹால விடத்தை சந்தோஷமாக உண்டு உலகைக் காப்பாற்றினாய். உன் அன்பிற்குரிய அடியவராகிய மார்க்கண்டேயரைக் காப்பதற்காக எமனை உதைத்து அழித்தாய். இன்றோ, அடியேனின் நல்–தீ வினைக் கூட்டத்தை யழித்து மகிழ்வோடு என்னை ஆட்கொண்டாய். இத்தகைய வலிமை மிக்க வீரன் நீ யல்லவா? ஆகையால், இனி நீ 'நான் இவ்வுடலே' என்று வாழும் அகந்தையாகிய என்னை அழித்து, இப்போதே என்னை இரண்டறக் கலந்து கொள்ளாவிட்டால் இது உன் ஆண்மைக்குத் தகுமோ?

10. *ஈனந் தவிர்த்துள் ளினித்திடு முன்றன்*
இறையரு ளூட்டி யெளியேனை
ஞானந் தெரித்தே நாசமில் லாதவ
னுக்கிட நினைந்தே நவைநீக்கி
ஆனந்த வாழ்வுன் னடிக்கடி மையென
வாக்கிய குருவே அறியார்போல்
ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அடியார்களின் குற்றங்களை யெல்லாம் நீக்கி அவர்களுள்ளே இனிக்கின்ற உனது இறையருளை எளியவனுன எனக்கும் ஊட்டி, ஞானநிலையை அனுபவப்படுத்தி, மரணமற்ற ஆன்ம சொரூபமாக்கத் திருவுளங் கொண்டு, எனது குற்றங்களையும் நீக்கி, உன் திருவடிக்கு அடிமையாவதொன்றே பேரானந்த வாழ்வு என எனக்குத் தீர்ப்பளித்த சற்குருவே, நீயே இப்போது, என்னை உலகமாயமாகிய பிறர் இழுத்துச் செல்ல, அஃதொன்றும் தெரியாதவனைப் போல, ஏன் இவ்வாறு உறங்குபவன் போல இருக்கின்றாய்? இது என்னை ஆட்கொண்ட உனக்கு அழகாகுமா?

11. **தம்புல முழுதே தளைகளைக் களைந்தே**
தகுமுர மிட்டுத் தண்ணீரும்
செம்பல முடனே சேர்த்தருட் பயிரைச்
செய்தவ னன்றே நீயன்றோ
அம்பல(ம்) நிறைய வகப்பழம் பழுக்கா
தன்னிய ரழிப்பதைப் பொறுப்பாயோ
ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினி யிலையோ ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, (நான் உன்னுடைமையே யாதலால்) ஆதியிலிருந்தே நீ உன் வயலாகிய என் புத்தியை நன்றாக உழுது, ஆன்மப்பயிர் வளர்வதற்கு ஒவ்வாதனவான களைகளை யெல்லாம் (தீக்குணங்களை யெல்லாம்) களைந்து நீக்கி, தக்க உரமிட்டு, மிகுபாடுபட்டுத் தண்ணீரும் ஊற்றி, அருளாகிய பயிரை விளையச் செய்த நிலக்கிழவன் (நிலச் சொந்தக்காரன்) நீயல்லவா? இதயாகாசத் திருச்சிற்றம்பலம் முழுவதும் நிறைந்து வழியும்படிக் குவிக்கும் அளவிற்கு ஞானப்பழங்கள் பழுக்கவேண்டிய இப்போது, அவைகளை அன்னியர்களான உலக ஆசைப் பேய்கள் கைப்பற்றி அழித்தொழிப்பதை நீ பொறுத்துக் கொண்டிருக்கலாமோ? ஐம்புல விடயங்களாகிய கள்வர்கள் இவ்வாறு நீ பயிர்செய்த என்னைக் கொள்ளையிட உள்ளத்திற் புகும்போது, உள்ளத்தில் நீ இல்லாமலா போய்விட்டாய்?

12. தருவப னீயே தந்தவ னீயே
தடைதவிர்ப் போனீ சற்குருவாம்
உருவுள னீயே யுய்ப்பவ னீயே
ஒவ்வொரு விளைவு முன்னாலே
வெருவுள மடங்கா விகற்பமுன் னாற்றான்
விளைவதன் றோதனின் வேறில்லா
ஒருவனு முன்னை யொளித்தெவர் வருவார்
உன்சூ தேயிது ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இத்தனைக் காலமும் எனக்கு வேண்டியவற்றை யெல்லாம் தந்தவனும், இன்னும் தந்துகொண்டிருப்பவனும் நீயே. என் முன்னேற்றத்திற்கு வரும் தடைகளை நீக்குபவனும் நீயே. எனக்கு ஞானசற்குருவாக உருவெடுத்து வந்தவனும் நீயே. என் வாழ்வில் நடந்துவரும் ஒவ்வொரு காரியமும் விளைவும் உன்னாலேயே நடக்கின்றன. எனவே, வெருண்டு அலையும் மனம் அடங்கி யழியாத குற்றமும் உன் அருளின்மையால் விளைவதேயன்றோ? தன்னைத் தவிர வேறொரு பொருளுமில்லாத அத்வைத ஒரே பொருளாகிய உனக்குத் தெரியாமல் என் உள்ளத்தினுள் புகுந்து என் மனத்தை அடங்காமல் அலைத்துக் கொண்டிருக்க எவரால் இயலும்? இது உன் மாயையின் சூதேயாகும். (ஆகையால் உன் மாயையை விலக்கி, என் மனத்தை அடக்கியருள்வாயாக!)

13. ஏங்கா துலகில்நா னெதன் பொருட்டேனும்
இதுவரை யிலுமுன தருட்காக
ஏங்கா நின்றிட வியற்றினை யப்பா
இனியெனு முனதருளீ வாயோ
நீங்கா தணுவிலு(ம்) மகத்திலு மெங்கும்
நிறைவோய் நிமலா நேரில்லாய்
ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோய்
உனையா ரறிவார் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அப்பா, நான் இதுவரையில் உலகப் பொருள்கள் எதற்காகவும் ஏங்கி ஆசைப்படாதவாறும், உன்

திருவருளுக்காவே ஏங்கி நிற்கும்படியும் செய்து வந்துள்ளாய். இனியாவது உன் திருவருளை எனக்கு அளிப்பாயா? அணுவுக் கணுவாகவும் மிகப்பெரியவை எதையும் விட மிகப்பெரியவனுகவும், எங்கும், எல்லாவற்றுள்ளும், நீங்காது நிறைந்துள்ள நிர்மலமான நிகரற்ற பரம்பொருளே, ஓங்கார ஓசையின் உட்பொருளாகிய பரமே, உனக்குச் சமமாகவோ அதிகமாகவோ யாருமில்லாதவனே, உன்னை இன்னதென யாரால் சுட்டியறிய முடியும்?

14. **செவ்விய லாயுன் றிருவடி தரிசனம்**
சேர்ந்திடக் கருணை செய்தவனே
இவ்வகை ஏழையிச் சிறுவனை யடிமை
யெடுத்தனை யெனக்கினி யுலகத்தார்
ஒவ்வில ருறவென வுற்றவர் தானென
வொருபொழு துமெனைப் பிரியாதே
ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தென்னை
ஆளுவ துன்கடன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மிகச் சிறந்தவனே, உனது திருவடிகளை நானும் முன்பு காணும்படியும், புகலாக வந்தடையும்படியும் கருணை செய்தவனே! இவ்வாறு ஏழையாகிய இச்சிறுவனை உனது அடிமையாக முன்பே ஆட்கொண்டாயே. இனிமேல் இவ்வுலகில் யாரும் எனக்கு உறவினர் என்றோ, உற்றவரென்றோ ஒருவருமில்லை. ஆகையால், நீ இனி என்னை ஒருபொழுதும் பிரியாமல் தாய் போல் உன் அருளை எனக்குத் தந்து எப்போதும் உடனிருந்து என்னை நடத்துவது உனது கடமையாகும்.

15. **மண்ணுக்குள் விண்ணும் மலையுறை வோயுன்**
வாஞ்சையாற் பற்பல வருடங்கள்
எண்ணிக் குழைந்தவ ரெட்டுணை யகந்தையு
மில்லா தழிந்தபின் னினிப்பாலே
நண்ணிக் கிடைத்திடக் கண்டவ ரிலராய்
நட்டமாம் போதே ''நான்''என்று
கண்ணுக்குக் கண்ணய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பார் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பூலோகத்தில் உள்ள தேவலோகமாக விளங்கும் அண்ணாமலையில் எழுந்தருளியுள்ள பெருமானே! உன்னிடம் பக்தி பூண்டு பல வருடங்களாக உருகி உருகி வழிபாடு செய்வோர் முடிவில் எள்ளளவு அகங்காரம் கூட இல்லாதபடி உன்னைச் சரணடைந்த பிறகு, பேரானந்தத்தோடு உன்னை அபரோக்ஷமாக அடைந்தனுபவிக்கவும், அப்போது ''கண்டேன்'' என்று கூறும் கர்த்ருத்வ புத்தி கழன்று போகவே, நீயே ''நான்'' என்ற தன்மை ஒருமை அறிவுணர்வாக - பிறவற்றைக் காணும் இவ்வூனக் கண்ணையும் காணும் மனமாகிய கண்ணும் இல்லாத நிலையில் ''நான் இருக்கிறேன்'' என்று தன்னைத் தானே கண்டு நிற்கும் ஏகனாகிய உன்னை எதிரிட்டுச் சுட்டுப் பொருளாக யார் காணமுடியும்? முடியாது. ஆதலின் (நான் உன் அருளால் உன்னைக் காணும் படியாக) என்னைக் கருணை கூர்ந்து பார்த்தருள்வாயாக.

16. ***மாந்தர ளித்திடு வோரென வெண்ணி***
மதியிலா நாயாய் மகிழ்வாய்க்கை
ஏந்திப்பெ றும்பய னேதுமி லேனவை
யெவ்வகை யினுநிலை யிலதாலே
சாந்தம லைப்பதஞ் சார்ந்தவ னேயுனைச்
சார்ந்தே னென்றும் பிடிகொண்டே
காந்தமி ரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பாய் ரமணேசா.

''உலகத்தில் உள்ள செல்வர்கள்தான் கொடுத்துதவக் கூடியவர்கள்'' என்று நினைத்து புத்தி கெட்ட ஒரு நாயைப் போல் நான் போய்க் கையேந்தி நின்றுப் பெறும் லாபம் எதுவுமே எனக்கு வேண்டாம். ஏனெனில் அத்தகைய லாபங்கள் எதுவும் நிலையற்றவையே. சாந்த பருவதமாகிய அருணாசலன் திருவடியையே சார்ந்து நிற்கும் சற்குரு ரமணேசா, உன்னை மட்டுமே நான் வந்து சார்ந்து நிற்கின்றேன். காந்தம் இரும்பைக் கவர்ந்து பிடித்துக்கொள்வதைப்போல நீ என்னை விடாமற் பிடித்தணைத்துக் கொண்டு என்னுடன் ஏகமாய் எப்போதும் கலந்திருப்பாயாக.

17. விரிவுறு மிதயத் துடனினே வேண்டும்
மேலவ ரன்பை விழைகின்றேன்
தெரிவுறு முண்மை தெரிகிலா வென்னேத்
தெரிந்துனக் கெடுத்த திறலோனே
அரியுரு வோன்முன் னயனுரு வோனுனே
யளவிட வொண்ணு வறிவழலாங்
கிரியுரு வாகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந் தருளுவாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பரந்த மனப்பான்மையோடு உன்னைப் போற்றும் பெரியோர்களது மெய்யான அன்பை நான் விரும்புகிறேன். அறிந்து கொள்ள வேண்டிய ஆன்ம உண்மையை அறியாத மூடன் நான் என்பது தெரிந்திருந்தும், உனக்கு என்னை அடிமையாகத் தேர்ந்தெடுத்த அருட்சக்தியாளனே! முன்பொரு காலத்தில் விஷ்ணுவும் பிரம்மாவும் அளந்தறிய முடியாத அடிமுடிகளைக் கொண்ட ஞானக்கினிமலை வடிவுகொண்ட கருணைக் கடலே! நீ அருள் கூர்ந்து எனக்கு அருள்வாயாக.

18. ஊழ்மே லுறுத்திட வொருவினே யேனு
முனக்கா வியற்றிட வுதவாதப்
பாழ்மே லேனேப் பரிவுட னடிமைப்
படுத்திய பரனே பாழின்றி
யேழ்மே லேறிய வெந்தைநின் னருளே
யென்னேயுங் காக்கு மெனவுள்ளேன்
கீழ்மே லெங்குங் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உனது திருத்தொண்டாக யாதொரு காரியமும் நான் செய்ய விடாத வீண் பிராரப்தத்தை யுடையவனும், பாழான மக்களுக்குள் மேலானவனுமான என்னை இரக்கத்தோடு உனக்கு அடிமையாக்கிக் கொண்ட பரமனே, ''இன்மை – பாழ்'' என்பதே இல்லாதபடி ஏழுநிலைகளுக்கும் மேலேறி நிற்கும் என் தந்தையாகிய உனது திருவருளே என்னையுங் காப்பாற்றும் என்று நம்பியிருக்கின்றேன். மேலோங்கிய நிலையில்

மட்டுமன்றி, கீழ்மை யென்னும் நிலையிலும் கூட எங்கும் பரவி ''நான் இருக்கிறேன்'' என்ற அறிவு வடிவில் விளங்கிக் கொண்டிருக்கும் ஞான மணியே! என் கீழ்மைத்தனத்தைப் பாழாக்கி யருள்க.

19. பற்றினைப் பறியாப் பாவமும் பலநாட்
பலவுயிர்க் கிழைத்த பாவமுமே(ல்)
நற்றவர் வருந்த நவின்றபுன் மொழியு(ம்)
நாயினு மிழிவுள நவையாவும்
மற்றினு மடியேன் வாழ்வினிற் புரிந்த
மலிதரு பிழையின் மலைபோன்ற
குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளிர் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பற்றுக்களை அகற்றிக் கொள்ளாத பாவமும் பற்பலவுயிர்கட்கு பலதடவையும் நான் இழைத்த கொடுமைகளும், மேலான நல்ல தவசிகள் வருந்தும்படி நான் அவர்களை புன்மொழிகளால் ஏசிய பாவமும், இன்னும் நாயைவிட இழிவாக நடந்துகொண்ட குற்றங்களும், மேலும் இன்னும் என் வாழ்வில் நான் செய்த அளவற்ற தீமைகளினால் மலைபோற் குவிக்கப்பட்ட குற்றங்கள் எல்லாவற்றையும் (வேரோடு) நீ நீக்கி, என்னை நற்குணமுடையவனாகச் செய்தருள்க. ஏனெனில், நீ என் சற்குருவடிவாக எழுந்தருளி வந்துள்ளாயல்லவா? அதனால்.

20. போர்வாய்க் கூட்டும் புயலழித் தன்பர்
புறமகம் பொங்கும் பூரணனே!
யார்வாக் கருளோ வருமருந் துன்னை
யண்டினே னருணா சலரமணப்
பேர்வாய் விட்டே பிதற்றிட லன்றிப்
பிறிதொரு நெறியும் பிடியேனான்
கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உள்ளத்தில் அமைதியின்றி சதாகாலமும் போரிட்டுக் கொண்டிருக்கும் ஆசைப்புயலை யழித்து,

அடியார்களின் உள்ளும் புறமும் சாந்தி மயமாய்ப் பொங்கும் பரிபூரணப்பொருளே, எந்த பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலோ கிடைத்தற்கரிய ஞானமருந்தாகிய உன் திருவடிகளை இப்பிறப்பில் வந்தடைந்தேன். ''அருணாசலரமணா'' என்னும் திருநாமத்தை வாய்விட்டுக் கூவி பித்தன்போல் பிதற்றிக் கொண்டிருப்பது ஒன்றைத் தவிர வேறொரு சாதனையும் நான் செய்கிறேனில்லை. அத்தகைய என்னை கூரிய வாளைப் போலக் கொடுமை செய்யும் (பசப்புக்) கண்களையுடைய மாதரின் ஆசை வலையில் நான் அகப்பட்டுவிடாதபடி நீ என்மேல் அருள்கூர்ந்து என்னைச் சேர்ந்து நின்று அருள்செய்வாயாக.

21. **விஞ்சுவ துன்றன் விறலருட் குலகில்**
வேறிலை யெனவே மிகவேண்டித்
தஞ்சமுன் பதமே தஞ்சமென் றடைந்தேன்
றரணியின் றளைக்குத் தானஞ்சி
யஞ்சலிக் கைய ஞயினே னுன்பால்
''அப்பா ரமணப் பா'வென்றே
கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமு மிரங்கிலை
யஞ்சலென் றேயருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இவ்வுலகில் உன் அருட் சக்தியை விஞ்சியது எதுவுமில்லை என்னும் காரணத்தால், ''உன் பாதமே தஞ்சம், தஞ்சம் (அடைக்கலம்)'' என்று உன்னை வந்தடைந்து மிக வேண்டி நின்றேன். உலக பந்தங்களுக்கு அஞ்சி, தலைமேற் கை கூப்பிக்கொண்டு உன்னை, ''அப்பா ஸ்ரீரமணப்பா அடைக்கலம்'' என்று நான் கூவிக் கெஞ்சியழுதும் ஓர் வஞ்சகனைப் போல் நீ கொஞ்சங்கூட இரக்கப்படவில்லையே, ''அஞ்சாதே'' என்று எனக்கு அபயம் கொடுத்தருள்க.

22. **ஆளா வுனதடிக் கானதிவ் வறிவிலே**
னுற்றலி னுலோ வலநீயே
யாளா வெடுத்தனை யருள்வலி யாலே
யாரது வென்றன் செயலென்பார்?

மீளா வகையெனை மீண்டொரு முறையும்
விதியென வேண்டன் மிகையன்றோ!
கேளா தளிக்குமுன் கேடில் புகழைக்
கேடுசெய் யாதருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உனக்கு நான் அடிமையானது என் வல்லமையினாலா ஆனேன்? அல்ல. நீயே உன் அருட் சக்தியாலே என்னை ஆட்கொண்டாய். இது என் செயல் என்று நானோ, பிறர் எவருமோ எப்படிச் சொல்ல முடியும்? ''இவ்வா றுன்னால் ஆட்கொள்ளப்பட்ட நான் மீண்டும் உலகியலுக்குப் போய்விடாதபடி என்னைச் செய்தருள்'' என்று உன்னை நான் மறுபடியும் வேண்டுவது அவசியமில்லையல்லவா? அடியார்கள் கேட்பதற்கு முன்பே கொடுத் தருள்வது என்பது உனது நீங்காத புகழல்லவா? அத்தகைய உன் அருட் கொடைப் புகழுக்குக் கேடு உண்டாகாதபடி அருள் செய்வாயாக!

23. **பொய்யினுக் கேநாட் போக்கிவீ ணாகப்**
பூமியிற் பற்பல புனர்ஜன்மப்
பையினுட் புகுந்தே பார்நிலை பயின்றே
பாழ்க்கிறைத் தயர்ந்த பதரேனும்
ஐயமி லாவோ ரழிவுமி லாஞா
னனந்த வாழ்வா முனைக்கூடிக்
கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ
கைவெறி கொளவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, (ஒவ்வொரு பிறவியிலும்) வாணாளை யெல்லாம் பொய்ப் பொருள்களைத் தேடுவதிலேயே வீணாகக் கழித்து, (மரணமடைந்த பின்) மீண்டும் இவ்வுலகில் பிறக்கக் கருப்பைப் பையிலிலேயே புகுந்து பிறந்து, உலகாயதமே கற்று, பாழுக்கு நீர் இறைத்து இளைத்து வீணாகிய அடியேன் அழிவற்ற, சந்தேகமற்ற ஞானான்ம வாழ்வாம் உன்னைக் கூடி கையிற் கிடைத்த திராட்சைக் கனியுமாகிய உன் சத்தியப் பிரம்மானந்த ரசத்தைப் பருகிப் பேரின்ப வெறி கொள்ளும்படி அருள்வாயாக.

24. அடியற் றுற்றி னழிகரை மரமா
யவனியில் வாழச் சகியாமல்
''அடியிற் புகலா யார்தமை யடைந்தா
லருள்வா'' ரெனவேங் கிடுங்காலைப்
பொடியிட் டிழுத்துப் புந்தியை மயக்கிப்
பூங்கழற் கடிமைப் பொருளாக்கிக்
கொடியிட் டடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டெங்ஙன் வாழ்வேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பெருக்கெடுத்தோடும் ஓர் ஆற்றங்கரையில் வேரெல்லாம் பறிக்கப்பட்டு விழுந்து அழிவதற்காகவே நிற்கும் ஓர் மாமரத்தைப்போல நான் இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்கச் சகியாமல் ''யாரைப் புகலாயடைந்தால் காப்பாற்றுவர்?'' என்று நான் ஏங்கியிருந்த போது, நீ உன் திருவருள் வசியப் பொடியை என் மீது தூவி என் புத்தியை மயக்கி, உன் வசமாக்கி இழுத்து வந்து உன் மலரடிகட்கு ஓர் அடியவனுக்கினுயே. அருள்வலைக் கொடிகளாற் பின்னி அடியார்களைக் கொல்லுகின்ற உன்னை நானே வந்து கட்டிக் கொண்ட பின் இனி 'நான்' என்னும் ஜீவபோதம் எப்படி வாழமுடியும்? (நான் உனக்கு ஊனுவேனுக).

25. சோபமுந் துயருந் தொலைத்துன தடியார்
சுகம்பெறக் கொடுக்குந் தொழிலோனே
கூபம்விட் டெடுத்தாய் கோடிகோ டியரைக்
குழைதிருப் பார்வைக் குறிப்பாலே
பாபமென் மட்டிற் படர்ந்ததோ வடிமைப்
பதரனை யருள்விழி பாராயோ
கோபமில் குணத்தோய் குறியா யெனைக்கொள
குறையென் செய்தேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, வருத்தமும் துன்பமும் நீக்கி உனது அடியவர்கள் சுகம் பெறும்படிச் செய்வதிற் கைதேர்ந்தவனே! கோடிக்கணக்கான அடியவர்களை உன் கனிவான அருட் பார்வை மாத்திரத்தாலேயே பிறவிப்பெருங் கிணற்றிலிருந்து

கரையேற்றினாயே. என் விஷயத்தில் மட்டும் என்ன பாபம் என்னைச் சூழ்ந்து கொண்டதோ? அந்தோ! இந்த அடிமைக் கிழேனையும் அருள்விழியாற் பார்க்க மாட்டாயோ? கோபமே யில்லாத சாந்த குணத்தவனான ஸ்ரீ ரமணேசா! என்னை மட்டும் அருளுக்கு ஆளாக்காமல் விலக்கி வைக்கப்பட வேண்டியவனாக நீ கொள்வதற்கு நான் என்ன பாபம் செய்தேன்?

26. **ஏதும் விளங்கா தெங்கோ கிடந்த**
விழிபுழு வேனை யெவ்வாறோ
"போதுக ழிந்துவீண் போகிற" தென்றே
போதித் தெழுப்பிப் புகலாவுன்
பாதம டைந்துப ணிந்திடத் தந்தாய்
பகவா னேவெற் புருவாகக்
கௌதமர் போற்றுங் கருணைமா மலையே
கடைக்கணித் தாள்வாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பகவானே, ஞானம் ஒன்றுந் தெரியாமல் தெளிவில்லாமல் இழிந்த புழுவாக இப்பூமியில் எங்கோ ஒரு மூலையிற் கிடந்த என்னை, நீ எவ்வாறோ அருள்கூர்ந்து "உன் வாணாள் வீணாகக் கழிந்து போகின்றது" என்று உணர்த்தி, எழுப்பி, உன் பாதங்களையே புகலிடமாக வந்து பணிந்து நிற்கச் செய்தாயே. மலை வடிவில் உன்னை கௌதம மஹரிஷி போற்றி வணங்கும் கருணைக் கடலான அருணாசலமே, என்னையும் கடைக்கணித்து ஆள்வாயாக.

27. **தகவுள பொருளுந் தகவிலாப் பொருளுந்**
தகித்திடு மக்கினி; சமுத்திரமும்
மிகவிலைப் பொருளும் வேண்டாப் பொருளும்
விழுங்கிடும்; கதிர்கால் நலர்தீயர்
இகலற வீசும்; இருநிலந் தாங்கும்;
இவையினு மிக்கோ வென்புன்மை
சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன
சலசம லர்த்திடு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அக்கினியானது தன்பால் போடப்படுபவை தகுதியுள்ளவையோ, தகுதியில்லாதவையோ எவையாயினும் எரிப்பதில் பாரபட்சம் காட்டுவதில்லை. சமுத்திரமும் அவ்வாறே விலைமிகுந்த முத்து முதலிய பொருள்களையும், மதிப்பற்ற கழிவுப் பொருள்களையும் வேற்றுமை பாராமல் விழுங்கி விடுகிறது. சூரியனும், காற்றும் நல்லவர், தீயவர் என்ற பேதமின்றி எல்லோர் மேலும் வீசுகின்றது. பெரிய இப்பூமியும் அவ்வாறே நல்லோர் தீயோர் அனைவரையும் தாங்குகின்றது. நீயோ இவை யாவினும் சிறந்த பரம் பொருளல்லவா? ஆகவே என் கீழ்க்குணங்களாகிய சகல குறைகளையும் நீ விழுங்கியழித்து அருளும் ஞானக்கதிர்களையுடைய சூரியனே, மலராத மொட்டு போன்ற என் மனத்தாமரையை மலர்த்தியருள்க.

28. **யாப்பா யெழுந்துக னுப்போ லவசவி**
டாப்பே யகந்தையின் பிடிநின்றே
காப்பா ரொருவரைக் காண்போ மாவெனக்
கற்பங்கள் கோடி கவலையினுற்
றீப்போ லெரியுமென் றிருவருட் பசியுந்
தீரும் படியே சிவஞானச்
சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, கனவு எழுவதுபோலப் பொய்யாக எழுந்தாலும் பெரும் பந்தத்தை உண்டாக்கி புத்தியை என் வசமிழந்து விடும்படி, விடாதபேய் போலப் பிடித்து ஆட்டுகிற அகந்தைப் பெரும்பேயின் பிடியினின்று என்னைக் காப்பாற்றக் கூடிய கடவுள் ஒருவரைக் காணமுடியுமா என்று பல கற்பகாலம் பிறவிகள் தோறும் கவலைப்பட்டு அக்கவலை மிகுதியால் நெருப்புப்போல எரிந்துகொண்டிருக்கும் எனது திருவருட்பசி தீரும்படி சிவஞானச் சாப்பாடாகிய உன்னை நான் வந்து அடைந்தேன். உனது ஞானமுதம் உண்டால் சாந்தமாகி விடுவேன். அருள்க.

29. செத்தும்பி றந்துமுல கத்துறு துயரவ
வத்தைய கலவழி தெரியாமற்
புத்தம்பு தியபல யத்தனங் கண்மனித
புத்திபு ரிந்துந்துயர் போமாறோ?
நித்தங்க தறியுட்கொ தித்துரு கிநலியு
மித்தமி யனையரு ணிலவாலே
சித்தங்கு ளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா
யைத்திற வருண்மதி ரமணேசா.

அருட்சந்திரனான ஸ்ரீரமணேசா, உலகத்தில் வந்து பிறந்தும் பிறகு செத்தும் படும் துன்ப அவஸ்தைகள் தீர்வதற்கு வழி தெரியாமல் (ஒவ்வொரு பிறவியிலும்) புதுப்புதியவையான பல முயற்சிகளை மனித புத்தியால் மேற்கொண்டாலும் துன்பம் அகலுமோ? இதற்காகவே தினமும் உன்னிடம் கதறி அழுதும், உள்ளே மனம் கொதித்தும், உருகியும் வருந்தும் உன் பிள்ளையாகிய என்னை உன் குளிர்ந்த நிலவொளியாகிய உன் அருட்கையை என் மனங் குளிரும்படி என் சிரத்தில் வைத்து உன் பேரின்ப அமுத வாயிலைத் திறந்து விடுவாயாக!

30. பேரள வாகும் பேதைமைக் கல்வியும்
பேணும் பொன்மனைப் பெருக்கோடே
தாரணி வித்துல கோர்புக ழப்பல
சம்பத் தெல்லாஞ் சார்வதனால்
ஆரவா ரித்தலை கின்றதை மேலென
வாசிர யிக்கும கங்காரச்
சீரைய ழித்துநிர் வாணமாச் செய்தருட்
சீரைய ளித்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அளவு கடந்த அறியாமையை ஊட்டும் உலகக் கல்வியும், காப்பாற்றுகிறதாகக் கருதப்படும் பொன்னும் (பணமும்) மனைவி, வீடு முதலிய பொருள்களின் பெருக்கமும் பெற்று, உலகோர் மாலை சூட்டிப் புகழும்படியான புகழ்மிக்க வாழ்வும் இன்னும் பலவித பாக்கியங்களும் இவ்வுலகில் பெறப்பெற அதனால் ஆரவாரித்து அலைகின்ற பெருமையே

மேலானது என்று இவற்றையே பற்றிக்கிடக்கும் அகங்காரமாகிய போர்வையை (உடையை) அகற்றி இவை யாவுமற்ற கேவல சுத்த பரநிர்வாண பதத்தில் என்னை வைத்து, உன் திருவருட் பெருமையாகிய உடையை எனக்கு அணிவித்து அருள்வாயாக.

31. ***இகத்தினை யெண்ணியி ராப்பக லெல்லா***
மிழியுமென் மனதை யிதமாயுண்
முகப்படச் செய்தே மோனமாங் கல்யம்
முடிப்பா யாங்கே முனைப்பின்றி
அகத்தினுட் புகுந்துன் னருட்பிரசாத
வணைப்பால் யானற வருண்ஞானச்
சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இப்போது உலகத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள உடல் வாழ்க்கையையே இரவு பகலாக முக்கியமாக எண்ணி கீழ்மையடையும் என் மனத்தை நீ ஹிதமாக வசப்படுத்தி உண்முகப்படும்படிச் செய்து அங்கே எனக்கு மோட்சமாகிய மாங்கல்யத்தைச் சூட்டியருள்வாய். அந்நிலையில், அகந்தை எழுச்சியே இல்லாமல் உள்ளத்தில் அடங்கி அங்கு உன் அருட்பிரசாதமாக அமையும் உன் திருவருள் அணைப்பால் நானற்ற அருள்ஞானச் சுகக்கடல் பொங்கி மேலெழவும், வாக்கு மனமும் அடங்கி மோனமுற்று நிற்கவும் நீ என்னோடு மோனத்தாற் சேர்ந்தருள்க.

32. ***தீதுநி றைந்தம னத்தே னென்பதுந்***
தெரிந்தே யாட்கொண் டுன்னருளின்
பாதுகாப் பின்றேற் பயனிலை யென்றுன்
பதநிழ லளித்த பகவானே
ஏதுசெய் தாலு முன்னரு ளன்றி
யியலே னதனு லெள்ளளவுஞ்
சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதியுருக் காட்டு ரமணேசா.

நான் தீமை நிறைந்த மனமுடையவன் என்பதை நீ நன்ருய்த் தெரிந்திருந்தும், என்னைப் பொறுத்து ஆட்கொண்டு, உனது திருவருளின் பாதுகாப்பு இல்லாவிட்டால் என் வாழ்வு வீணாகிவிடும் என்று கருணையாற் கருதி, உன் திருவடி நிழலுக்கே நான் வந்து வாழும்படிச் செய்த ஸ்ரீரமணேச பகவானே, நீ இனி எனக்கு (நன்மையோ, தீமையோ) எது செய்தாலும் உன் திருவருளைத்தவிர வேறொன்றும் என்னால் செய்ய இயலாது. ஆகையால் நீ எள்ளத்தனைக் கூட என்னிடம் உன் மாயா சக்தியால் சூதுசெய்து மயக்கிச் சோதிக்காமல் இனி உனது அருட்ஜோதி வடிவத்தைக் காட்டியருள்க.

33. கைப்பிடி மண்ணைக் கனகமா யாக்கிக்
காலனற் புனலைக் கைவசங்கொண்
டிப்புவி யன்றியு மெப்புவி யுஞ்சென்
றெதுநினைத் தாலு மிமைப்போதில்
அப்படி யாற்று மணிமா மகிமா
வாயவ மானுட வலிவஷ்ட
செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட்டு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, கையால் ஒருபிடி மண்ணை எடுத்து அதை உடனே தங்கமாக ஆக்கியும், காற்று, நெருப்பு, தண்ணீர் ஆதிய பஞ்சபூதங்களை வசப்படுத்தியும், இந்த உலகில் மட்டுமின்றி எந்த உலகத்திலும் சென்று சஞ்சரிக்கும் சக்தி பெற்றும், எதைச் செய்ய நினைத்தாலும் ஒரே நொடியில் நினைத்ததை நினைத்தவாறு ஆற்றக்கூடிய அணிமா, மகிமா முதலிய அமானுஷிய அஷ்ட சித்திகளாகிய ஜால வித்தைகளைக் கற்றுக்கொண்டும், அதனால் இவ்வுலகத்தாரை மயக்கும் வீண் காரியத்தையெல்லாம் விட்டுவிட்டு, உன் உண்மை சொரூபமான ஆன்மவித்தையை நான் பெற எனக்குக் காட்டித் தருவாயாக.

34. ஓரா துன்னரு ளுலகைநி னைந்தே
யோயா தலையுமென் னுளத்துள்ள
தீராப் பகையாந் திரள்வா தனையறத்
தீர்த்தினி யேனுஞ் சிதறுதுள்

ளாரா நின்றிட வாற்றி யருட்கர
வணைப்பா லேயிரண் டறவென்னைச்
சேரா யெனின்மெய்ந் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன்னருளை தியானிக்காமல் உலகத்தையே இடைவிடாமல் நினைந்து அலைகின்ற என் மனத்தில், அதனுற் குவிந்துள்ள, எனது தீராத பகையாகிய வாசனைக் கூட்டங்கள் நாசமாகும்படிச் செய்து இனிமேலாவது மனம் பலவாகச் சிதறிப் போகாமல் உள்ளே ஒன்றி நின்றிடுமாறு செய்து உன் அருட்கைப்பிடி யணைப்பால் என்னையிரண்டறச் சேராவிட்டால் என் உடல் முழுதும் நீராக உருகி, அழுதுப் பெருகுங் கண்ணீராற்றில் நான் மூழ்கிப் போவேன்.

35. ஐவழி பாயு மவமனத் தேனை
யனைவரும் வெறுப்பா ரறிவில்லாப்
பையலென் றேஎன் பழவினை கழியப்
படுமா றேதினி பரமார்த்த
மெய்வழி யானுற வேதித் தருளான்
மீட்பாய் நீயும் வெறுத்தென்னைச்
சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஐம்புல வழியே வெளியுலகிலேயே பாய்கின்ற கெட்ட மனத்தினனுன என்னை அனைவரும் "அறிவில்லாப் பையல்" என்று வெறுப்பர். எனின் என் பழைய வினைகளினின்றும் விடுபடுவது இனி எப்படி? பரமார்த்த மெய்வழியில் நானும் வந்துசேர என்னைப் பரிசுத்தனுக்கி யருள்க. அவ்வாறின்றி நீயும் என்னை வெறுத்துச் "சை" என்று ஒதுக்கித் தள்ளிவிட்டால் நான் செய்த முன்வினைகளும், இப்போதும், இனியும் செய்யப் போகும் வினைகளும் தம்தம் பயனுல் என்னைச் சுட்டுப் பொசுக்குவனவே தவிர, நான் உய்யும் வழி ஏது? சொல்க.

36. **நல்லோர்தம் முளத்தினி னானெனத் தானே**
நடமிட் டுணர்த்துமுன் சந்நிதியிற்
பல்லோர்தம் மையப் பாட்டினை வினவிப்
பதிலுரை பெறுங்கால், பன்னூலுங்
கல்லாத வெனையருட் கண்ணெதிர் கிடத்தியுன்
கருதரு மோனக் கருத்தாலே
சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா விருந்தாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நல்ல பக்குவமும் பரிசுத்தமும் உள்ள நல்லவர்கள் உன் சந்நிதியில் சும்மா அமர்ந்திருக்கும் போதே அவர்கள் உள்ளத்தில் தானாகவே நீ ''நான் நான்'' என்று ஸ்புரித்து நடமிட்டு பரம்பொருளறிவை உணர்த்தி வந்தாய். அத்தகைய உன் சந்நிதியில் மற்றும் பலர் தத்தம் சந்தேகங்களை வினவி உன்னிடம் தக்க விடைகளைப் பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், பல சாஸ்திரங்களில் யாதொன்றுங் கல்லாதவனாகிய என்னை உன் சந்நிதியில் உன் கண்ணுக் கெதிரிற் கிடக்கும்படிச் செய்து வாயுரையின்றி, நினைத்தற் கருமையான மோன உபதேசத்தால் ''நீ பேச்சற்று சும்மாவிரு'' என்று சொல்லாமற் சொல்லி, நீயும் அவ்வாறே பிரம்ம சொரூபமாகச் சும்மாவிருந்து காட்டினை.

37. **தேம்பியா னழுதுன் றிருவருள் வேண்டியுஞ்**
சிறிதெனு மயலே தீராமற்
கூம்பிய மலராய்க் கும்பிட்டுக் காத்துக்
கொண்டினு மிருப்பதைக் குறியாமற்
சாம்பனிவ் வருணா சலசிவ னளித்த
சகஜநிர் விகற்பந் தனிலேநீ
சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன் திருவருள் வேண்டுமென்று அழுதழுதுத்தேம்பி நின்று நான் பிரார்த்தித்தும், கொஞ்சங்கூட மாயையின் மயக்கு தீராதவனாய், உன் திருவடியிலேயே கும்பிட்டு, மூடிப் போன இதழ்களையுடைய ஒரு மலரைப்

போலக் காத்துக் கிடக்கின்றேன். ஆனால் நீயோ இதைக் கவனியாமல், சாம்ப சிவனாகிய அருணாசலன் உனக்களித்த சகஜ நிர்விகற்ப சமாதியில் மனோ வாக்குக் காயங்கள் மூன்றிலும் யாதொரு செயலுமில்லாது சோம்பியாகி அந்த சமாதி சுகத்தில் சும்மா சொக்கிப் போய்த் தூங்கிக் கொண்டிருந்தால் என் கதி வேறென்ன ஆவது?

38. **ஒவ்விலாத் தீக்குண மென்பா லிலாமல்**
ஒழித்தபின் னன்றோ வோய் வுடனீ
இவ்வித மிருக்கலா மேழையே னைம்புல
வெதிரிக ளாலே யிடருறுங்கால்
எவ்விதம் வாளா விருந்தனை யவர்களை
யெரித்திட வருள்விழி திறந்தென்று
சௌரியங் காட்டினை? சழக்கற்ற தென்றோ?
சலியா திருந்தாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, யாரும் ஒத்துக்கொள்ளமுடியாத தீயகுணங்கள் எல்லாம் என்னிடம் ஒன்றுகூட இல்லாமல் நீ ஒழித்தருளிய பிறகல்லவா நீ இவ்விதம் ஓய்வுடனிருக்கலாம். ஏழையாகிய நான் ஐம்புலவாசைகளாகிய எதிரிகளால் துன்பப்படும்போது நீ எப்படி சும்மா இருக்கின்றாய்? நீ என் பகைவர்களை எரித்து நாசமாக்குவதற்காக உன் அருள்ஞான விழியை என்றைக்குத் திறந்து உன் வீரத்தைக் காட்டினாய்? என் குற்றங்களெல்லாம் என்றைக்கு தீர்ந்தன? ஒன்றுமில்லையே? ஆகையால் நீ இப்படி அருட்போர் செய்யாமல் இருக்கின்றாயே!

39. **யமநிய மாதி யுளபெரி யோர்களா**
லாகுமே யன்றி யவையில்லாச்
சுமையுட லேனா லியலுமோ வற்பச்
சுணங்கனுங் கூடத் தொடர்ந்தேபோய்த்
தமதெச மானன் றனையுறு மந்தத்
தகுதியு மில்லே னதனாலே
னுமலியிற் கேடா(ம்) நானென் னுறுதியா
னுடிநின் னுறுவேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இயமம், நியமம் முதலிய அஷ்டாங்க யோக சாதனைகளையுடைய பெரியோர்களால் தான் உன்னை வந்தடைய முடியுமே தவிர, அச்சாதனைகள் ஒன்றுமியற்றாதவனும், இந்த பொதியுடலே நான் எனத் திரிபவனுமான என்னால் முடியுமோ? அற்பமான நாய்கூட மோப்பம் பிடித்துக் கொண்டே போய் தனது எஜமானன் இருக்குமிடத்தையடைந்து விடுவதுண்டு. ஆனால் அந்த நாயின் தகுதி கூட இல்லாதவன் நான். ஆகையால் நாயினுங் கேடாகிய நான் என்ன பலத்தால் உன்னை நாடி வந்தடைய முடியும்?

40. தீனம னப்பழி தீரவ ருட்பெருந்
தேவநின் றிருவடிச் சேர்க்கைக்கே
யானபே ராசை யடைந்துனை யடையா
தயர்ந்தே னீயோ வறிவான
மோனமா யென்னுள மொளிர்வதை யுணர
முடியா மையினு லத்துவித
ஞானமி லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, எனது கீழான பழிமனக் குற்றங்களெல்லாம் தீருவதற்காக அருட்பெருந் தேவனான உனது திருவடிகளைச் சேரவேண்டும் என்று பேராசை யுற்றுள்ளேன். ஆயினும் உன்னை நான் அடைய முடியாமல் உன் ஆசையால் மனந் தளர்வுற் றிருக்கின்றேன்; ஆனால் நீயோ மோனஞானமாக என் உள்ளத்தில் எப்போதும் விளங்குவதை நான் அறியமுடியாதவனாயுள்ளேன். இந்த அத்வைத ஞானம் (நீ எப்போதும் என்னால் அறியப் பட்டவனே என்ற அறிவு) இல்லாத காரணத்தால், ஆனால் உன்னை அடைய வேண்டும் என்று மட்டும் ஆசை மிகுந்துள்ளதால், தளர்வுற்றிருக் கிறேனாகையால் அந்த அத்வைத (நித்திய சித்த) ஞானத்தை எனக்கு உண்டாக்கி என் தளர்வை நீக்கியருள்க.

41. **கமழ்மலர் மலர்த்தக் கதிரவன் வரவைக்**
காத்திடும் மதுகரந் தன்ஞலே
இமியெனு மலர்த்த வியலா தாஞ
வென்னித யப்பூ விதழ் விரிய
அமையுமோர் ஞான வருட்கதி ரவனீ
யன்றோ வருளா லலர்த்தாமல்
ஞமிறுபோ னீயு "மலர்ந்திலை" யென்றே
நேர்நின் றனையென்? ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, வாசனை பொருந்திய மலரை மலர்த்துவதற்காக சூரியனது வரவை எதிர்பார்த்துக் கொண்டு தேனருந்தக் காத்துக்கொண்டிருக்கும் தேன்வண்டு. ஏனெனில் அந்த வண்டால் மலரைசிறிதும் மலர்த்த முடியாது. ஆனுல் என் இதய மலரானது இதழ்விரிய மலர்த்தக் கூடிய அருள்ஞான சூரியன் நீயேயல்லவா? ஆகையால் நீயே உன் அருளால் என் இதயத்தை மலர்த்தாமல், ஒரு வண்டு சூரியன் வரவுக்காக மலரின் எதிரில் ரீங்காரம் செய்துகொண்டு காத்திருப்பதைப்போல் 'நீ இன்னும் மலர (பக்குவப்பட) வில்லையே' என்று சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டு என்முன் சும்மா நிற்கின்ருயே! இது தகுமா?

42. **மெத்தவோ ரேழையின் மீதிரங் கியரசன்**
விரைந்தரு கழைத்தமர் விப்பதுபோல்
எத்தகைத் தகுதியு மில்லா வெளியனை
யிழுத்துன் சந்நிதிக் கேற்றனையே
உத்தமர்க் கன்றியு முனதரு ளினையொவ்
வாதவர்க் குஞ்செய லுன்மரபோ!
தத்துவந் தெரியா தத்தனை யுற்ருய்!
தத்துவ மிதுவென் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மிக ஏழையான ஒருவன்மேல் அரசனெருவன் பரிவும் இரக்கமுங்கொண்டு, அவ்வேழையை அருகிலே அழைத்து அமர்த்தி வைத்துக்கொள்வது போல, எவ்வித

தகுதியுமில்லாத எளியனாகிய என்னையும் உன் கருணையினாலேயே, நீயே, வலிந்து இழுத்துக் கொண்டு வந்து உன் சந்நிதியில் அடியார்களுள் ஒருவனாய்ச் சேர்ப்பித்தாயே! 'உத்தமமானவர்களுக்குத் தான் அருள்செய்வது' என்ற நியதியில்லாமல், தகுதியற்றவர்கட்கும் உன் அருளைத் தருவது உன் அவ்வியாஜ கருணை மரபு போலும்! அதனால்தான் யாதொரு தத்துவ ஞானமுமில்லாத அற்பனான என்னையும் ஏற்று அருள் செய்கின்றாய்! ஆஹா, இது என்ன அருட்பெருங்கருணைத் தத்துவம்?

43. ***வானே முதலோ? வான்முதற் பூத***
வகையெலாங் கண்டிடு வதனாற்கண்
தானே முதலோ? சட்சுவா திகளின்
றன்மையை யறிமனந் தான்முதலோ?
நானே மனதை நன்கறி வதனால்
நான்நா னெனு(ம்)நடு நாயகனீ
தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இப்பூதாகாசம்தான் முதலான தத்துவமா? அல்லது வான் முதலிய ஏனைய சதுர் பூதபௌதிகங்களை யெல்லாம் காண்கின்ற கண்தான் முதல் தத்துவமா? அல்லது கண் முதலிய பஞ்சேந்திரியங்களின் தன்மையையும் அறிகின்ற மனம் தான் முதல் தத்துவமா? அந்த மனத்தையும் நானே அறிவதால் 'நான் நானே' என்று இதயத்தில் நடமிடும் நடுநாயகனும் நீ தானே மெய்த்தத்துவம்? இந்த சொரூபானுபவத்தை நீயே எனக்கு அனுபவத்திற் காட்டியருள்வாயாக.

44. ***அகம்பெரும் பொருளிவ் வகமக வுணர்வென்***
றனுபவ முறவே யடியேனும்
விரும்புவ தறியா யோவென வுன்னை
வேண்டிடு மென்னை விளித்தேநீ

''இரும்பினைக் காந்த மிழுப்பது போலுன்
னிதயத் திருந்துள் ளிழுக்கின்றேன்
திரும்பி யகந்தனைத் தினமகக் கண்காண்
டெரியு''மென் றனையென் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ''இந்த 'நான் நானே' என்னும் அரும்பெரும் பொருளான ஆன்மானுபவத்தைப் பெறுவதற்கே அடியேனும் ஆசைப்படுவதை நீயறியவில்லையா?'' என்று உன்னைத் துதித்து நிற்கும் என்னை நீ அழைத்து, ''இரும்பைக் காந்தம் இழுப்பதைப் போல உன்னை நான் இதயத்துள்ளிருந்து கொண்டு இழுக்கின்றேன்; நீ தினமும் உள்ளே திரும்பி என்னைத் தன்னுட்டத்தால் பார்; அப்போது தெரியும் என்று உபதேசித்தாய்.

45. சேரநா னுன்னைநீ செப்பிய படியே
செய்திட முயற்சித் திடுங்காலை
பாரமோ டழுந்தி மூழ்கிக் கடலினுட்
பதிந்தமுத் தினைக்கைப் பற்றுவர்போல்
வாரமோ டிதயத் தாழ்ந்துனைத் தேடும்
வலிமையின் வடிவாம் வைராக்யத்
தீரமி லகத்திற் றேடியுந் தனையான்
றிரும்பவுற் றேனருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நீ உபதேசித்தவாறே விசாரம் செய்து உன்னைச்சேர நான் முயற்சி செய்யும்போது, முத்தெடுப்போன் பாரமான கல்லைக்கட்டிகொண்டு ஆழமுழுகி கடலடியில் கிடக்கும் முத்தை எடுப்பதுபோல், உன்னிடம் கொள்ளும் பக்தியோடும், வலிமையின் வடிவான வைராக்யத்தோடும் இதயத்தில் உன்னைத்தேடி ஆழ்ந்து முழுகும் வைராக்கியத் தீரம் இல்லாததால், மேலெழுந்தவாரியாக உன்னைத் தேடிவிட்டு, மேலும் முடியாதவனாய்த் திரும்பவும் பகிர்முகப்பட்டு விடுகிறேன். அந்தோ, அருள்க.

46. இப்படிப் பலகா லிதயமு ழுமல்
இடர்தரு பகிர்முக மிழுக்கின்ற
தப்பித வாசனை தானழி வித்தே
தடுத்தெனை யகத்துட் டந்திரமா

யெப்படி யேனு மிழுத்தணை யாயோ
விவ்வா றுகினீ யெனக்கீந் த
துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னெப்பிட வாயேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இவ்வாறு பலமுறையும் முயன்று முயன்றும் நான் இதயத்தைப் போய்ச் சேராதபடி தொல்லை கொடுத்து என்னைப் பகிர்முகத்தில் இழுத்து வந்து விடுகின்ற பழைய வாசனைகள் யாவற்றையும் நீ அழியச்செய்து, என்னைப் பகிர்முகப்படாமல் தடுத்து நிறுத்தி, உன் அருள் தந்திரத்தால் எப்படியாவது பிடித்து இதயத்தினுள் என்னை இழுத்துச் சென்று உன்னோடு அணைத்துக்கொள்ள மாட்டாயா? இப்படியே நீ என்னைக் கைவிட்டிருந்தால் நீ இப்போது எனக்குக் கொடுத்திருக்கும் நல்லறிவில்லாத இந்தப் பிறவியால் என்ன பிரயோஜனம்? எனது இப்பிறவி உன் பாதங்களையடைந்து விட்டதால் ஒப்பத்தகுந்த நற்பிறவியாகி விடுமாறு வந்து அருள்செய்க.

47. **தாய்மகற் காற்றுந் தயவினு நீசெய்**
தயவாற் றகுதித னைப்பெற்றே
தீமையி னுருவாஞ் செல்வம் புகழ்மனை
தேடிய லைந்திடுஞ் செகமாயப்
பேய்மன வடிவைப் பிரம்மாக் கினியிற்
பெய்தருட் பிரசா தம்பெற்றத்
தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் ரமணேசா.

எனது ஸ்ரீ ரமணேசனே, உன் மெய்யன்பர்கள், பெற்றதாய் தன் குழந்தைக்கு காட்டும் கருணையைவிட அதிகமாய் நீ உன் அடியார்க்குக் காட்டுங் கருணையால் பக்குவமடைந்து, அதன் விளைவாகப் பொருள், புகழ், மனை இவற்றையே தேடியலைந்து கொண்டிருக்கும் தீய உலகமாயையாகிய பேய் போன்ற மனத்தை பிரம்மாக்கினியில் ஆகுதியாகப் பெய்து, அதனின்றுங் கிடைத்த அவிர்ப்பாகமாகிய உன் அருளைப் பிரசாதமாகப்

பெற்றுக் கொண்டு விளங்குகின்றனர். அப்படிப்பட்ட தூயமனமும் சொல்லும் உடைய பெரியோர்கள் ஊறிக்கிடக்கும் உன் சத்திய ஆன்ம சொரூபத்தில் நானும் தோயும்படி அருள்செய்வாயாக.

48. **செய்பல கன்மத் திறமையி ஞற்ருன்**
சித்தித் திடுஞ்சுக மெனநம்பி
நைவகை விடாது நாளு விதத்தவம்
நாடிட வேனு(ம்) நாளெருவன்
உய்வது நலமென் றுன்னிமற் றிதற்கே
யுதவிடத் தக்க உறுதுணையாந்
தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேரவொ ழித்தாய் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, திறமையோடு கூடிய பலவிதமான தவங்களான கர்மங்களைப் புரிவதால்தான் சுகானுபவங் கிட்டும் என்று நம்பிக்கொண்டு, அந்த நாலுவித கர்மங்களையெல்லாம் தவருமல் நடத்தி முடிப்பதற்காகவாவது 'நான்' என்று ஒருவியக்தி நசிக்காமல் இருக்கவேண்டும் என்றும் (அதனுல் 'என்னைக் காப்பாற்று' என்று வேண்டிக்கொண்டு) என்னை அப்படிக் காப்பாற்றத்தக்க உற்ற துணையான ஓர் தெய்வம் நீயே என்றும் நம்பிக் கொண்டு நான் உன்னை நாடி வந்தடைந்தேன். ஆனுல் அதற்கு மாருக நீ என்னை (என்தனிவியக்தி இருப்பை) அடியோடு அழித்து விட்டாயே! அந்தோ!

49. **காடா யினுமலைக் கடுங்குளி ரேனுங்**
கனல்புன லேனுங் கருதாமற்
பாடா யிரம்பட் டெனுமுனைத் தேடும்
பரவை ராக்கியம் படைந்தோருக்
கீடா வேளு வெனினுமுன் னருளா
லிளமையி லேயே யென்கண்முன்
தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, காட்டிலும், மனையிலும், கடுங்குளிருள்ள பனிமலைகளிலும், நீரிலும் நெருப்பிடையிலும் நின்று கஷ்டத்தைப் பொருட் படுத்தாமல் ஆயிரம் பாடுபட்டும் உன்னைத் தேடும் சிறந்த வைராக்ய சீலர்களுக்கு நான் சமானமாவேனு! (ஆகமுடியாது) எனினும் எப்படியோ என் இளமையிலேயே என் கண் முன்னே (நீ) நான் பாடுபட்டுத் தேடாமலேயே, வந்து காணக்கிடைத்த திருவருட் செல்வமல்லவா நீ! இப்போது என் உள்ளத்திகைப்பைத் தீர்த்தருள்வாயாக.

50. மெய்நிய மங்கொள விரும்புகின் றோரையும்
வீழ்த்திடும் பற்பல விதமாயச்
சௌரிய மிகுந்து தந்திர நிறைந்த
சாகச முடையஷ டூர்மிகளாம்
வைரியைக் கொல்லும் வலிமையு ளோனீ
வளர்க்கின் றுயெனை யிதை நம்பித்
தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இயமநியமங்களை மெய்யாகவே கடைப்பிடிக்க விரும்பி முயல்கின்ற யோகாப் பியாசிகளைங்கூட, வீரம் மிகுந்து தந்திரங்கள் நிறைந்து, பற்பல மாயச் சாகசங்களைப்புரிந்து வீழ்ச்சியடையச் செய்கின்ற காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சரியம் என்னும் ஆறுவித எதிரிகளையுங் கொல்லக் கூடிய ஞானசக்தியுடையவனுன நீ என்னைக் காப்பாற்றி வளர்த்து வருகின்றுய் என்னும் உண்மையை நம்பியே தைரியத்தோடு உன் சத்திய சொரூபத்தை நான் நாடி நிற்பதால் யாதொரு தட்டுப்பாடும் கஷ்டமும் இல்லாதவனுனேன். இது உன் திருவருளே யாகும்.

51. அட்டவ கைச்செல் வாதிமு யன்றே
யடையே னெனினஃ தளவில்லா
நட்டமென் றுலகோர் நகைத்திட வனைத்து(ம்)
நானிழந் தாலென்ன நவை? ஆனுல்

விட்டிவை களெல்லாம் விலக்கிவைத் தென்னை
வேட்டவ னேநாள் வீணின்றித்
தொட்டருட் கைமெய் கட்டிடா யெனில்யா
னட்டமா வேனருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, "அஷ்டவகைச் செல்வங்களையும் நான் முயன்று அடையாவிட்டால் அது அளவற்றதோர் நட்டமான வாழ்க்கை" என்று உலகத்தவர் கூறி சிரிக்கலாம். அவற்றையெல்லாம் நான் இழந்துவிட்டாலும்தான் என்ன நஷ்டம்? இவைகளையெல்லாம் நான் ஆசைப்படாமல் இவைகளை விட்டு என்னை விலக்கிவைத்து என்னை உன்னடிக்கு ஆசைப்படுத்திவனே! இனி வாணாள் வீணாகாதபடி நீ என்னை உன் அருட்கரங்களால் அணைத்து உன் சத்திய சொரூபத்தில் கட்டிக்கொள்ள மாட்டாயெனில் அப்போது தான் நான் நஷ்டமடைந்தவனாவேன். அதனால் அருள்க.

52. **ஆடக மே(ல்)நக ரளகா புரியர**
சஷ்டமா சித்திக ளார்ந்திடினுந்
தோடமி குந்துய ரங்கண்ம லிந்தபுன்
சுகங்களே யவையோர் சொப்பனத்தில்
நாடக மேயத னாலரு ளாலக
நாடக(ம்) நானா னெனவாடுந்
தோடமி னியகத் தோடொன்றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பொன்னுலகமான சுவர்க்கம், குபேரனுடைய அளகாபுரியின் அரசாட்சி, அஷ்டமகா சித்திகள் இவைகளெல்லாம் அடையப்பட்டாலும் அவையெல்லாம் தோஷம் நிறைந்த அற்ப சுகங்களைத் தருவனவேயாகும். மேலும் அவைகளின் அடைவானது ஒரு சொப்பனத்தில் காணும் நாடகம் போல் அநித்தியமே. அதனால் அருளால் உள்ளத்தில் 'நான் நான்' என்று ஸ்புரித்து ஆடுகின்ற தோஷமற்ற நீ, என்னோடு இணைந்து என்றென்றும் குறையாத பேரின்பம் எனக்கு உண்டாகும்படி அருள்வாயாக.

53. ***தகைப்புறு மற்பச ரீரப் புலையைத்***
தானென வோருந் தன்மையினாற்
சிகைக்கிட(ம்) நீங்கியு ரோமஞ் சிறுமை
சேர்ந்ததை யனையேன், சிவமேயாம்
மிகைச்சம னில்லா மேன்மையோ னுன்னை
வேட்பது கண்டுநீ வியப்போடே
நகைக்கிட மிலைநின் னுடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பந்தப்படுத்துகின்ற, அற்ப மாமிச உடம்பையே 'நான்' என உணரும் கீழ்மைத்தனத்தால், தலையினின்று நீங்கிய உரோமம் சிறுமையடைவதைப் போலச் (சிவத்துவத்தினின்று) இவ்வுடலபிமானத்தால் சீவனாகச் சிறுமையடைந்துவிட்டநான், தான் ஒப்புயர்வில்லா சாக்ஷாத் சிவமேயாக விளங்கும் உன்னையடைய விரும்புவதைக் கண்டு நீ ஏளனங் கலந்த ஆச்சரியத்தோடு சிரிக்கிறாயே! அப்படிப் பரிகசிக்க வேண்டியதேயில்லை. ஏனெனில் உன்னையே கதியாக வந்தடைந்த என்னை உன் அருள் புன்சிரிப்பாகிய ஆசீர்வாதத்தை அளித்துப் பிறகு பார். 'நான்' அப்போது உனக்குத் தகுதியானவனாகி விடுவேன்.

54. ***ஊணிலாள் பூணிலா ளுடையுறை யுள்ளிலா***
ளுயர்குலங் குணமிலா ளூரரசன்
பூணுவன் மணமெனப் போந்தது போன்றுநான்
போந்துளேன் பிறர்நகை புரிந்தாலும்
பேணிலே னுன்றன் பெருமைக் கிழுக்கென்றும்
பெருமா னுன்பே ராசையினால்
நாணிலை நாடிட நானு யொன்றிநீ
தாணுவா நின்றனை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஓர் பெண்–அவளுக்குச் சாப்பாட்டுக்கோ வழியில்லை; ஒரு நகை (ஆபரணம்) கூடக் கிடையாது; நல்ல உடை ஒன்றுமில்லாதவள்; குடி இருக்க வீடொன்றுமில்லாதவள்; உயர்ந்த குலத்தில் பிறந்தவளுமல்ல; நற்குணச்

சிறப்புமற்றவள். இப்படிப்பட்ட ஓர் பெண் ''இந்த ஊர் அரசன் என்னை மணந்து கொள்வான்'' என்று எண்ணி அரசனிடம் வந்தது போல, நான் உன்னிடம் வந்து நிற்கின்றேன்! இப்படி நான் உன்னை அணுகுவது உன் பெருமைக்கே குறைவான ஒரு செயல் என்று நல்லவர்களான உன் அடியார்கள் சிரிப்பதையும் நான் பொருட்படுத்தவில்லை. பெருமானே, உன்மேலுண்டான ஆசையினால் உன்னிடம் வர எனக்கு என்னைப் பற்றி வெட்கமே ஏற்படவில்லை. ஆனால் பெருங்கருணையாளனான நீயோ என் உள்ளத்தில் 'நான்' என்னும் மெய்ப்பொருளாகவே சேர்ந்து நிற்கிறாயே! (இது என்ன விந்தை?)

55. **என்னருு கதையே யின்மையை நீகண்**
டெள்ளிவெ றுத்தா லென்செய்வேன்
பன்னெடு நாட்கண் பார்த்திலை யோயென்
பரிதா பநிலை பார்த்தோய்நீ
இன்னுமி ரங்கா விடிலெனு ளுன்றன்
இச்சையின் வடிவா யெழுந்தோங்கும்
நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
னின்னருள் மழைபொழி ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, என் பக்குவமற்ற - தகுதியற்ற நிலையைப் பார்த்து நீ பரிகசித்து வெறுத்தால் நான் என்ன செய்வேன்? நீ பல நெடு நாட்களாக என் பரிதாபகரமான நிலையைப் பார்த்து வருபவன் தானே! அப்படிப் பார்த்துவரும் நீ இன்னும் இரங்காவிடில் என்னுள் உன்னையடைய வேண்டும் என்ற ஆசைவடிவில் ஓங்கி எரிந்து வரும் தாபாக்கினி என்னை எரித்து சாம்பலாக்கிவிடும். அப்படி உன் ஆசையால் நான் ஏங்கி எரிபட்டுச் சாம்பலாகுமுன்பே, நீ கருணை மழைபெய்து - எனக்கு உன்னைத் தந்தருளுவதாகிய அருள்மழைபெய்து - காப்பாற்றுவாயாக.

56. **தானாய்ப் பெருகுமுன் றயைமழை யாலென்**
றவிப்பெலா நீக்கிச் சனித்திறக்கும்
ஊனா னெனும்புலை யுணர்வொழித் திதயத்
துனதரு ளரண்மனை யுட்சேர்த்தே

நாளு னெனவரு ணடமிடுஞ் சிவஞா
ஞானந்த மோன ரமணத்தால்
நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, காரணமின்றியே பெய்யப்படும் உன் கருணை மழைப் பெருக்கால் எனது தவிப்பெல்லாவற்றையும் நீ நீக்கி, 'உடம்பே நான்' என்ற உணர்வால் நான் மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து , துன்புறும் அஞ்ஞானத்தைப் போக்கி, உனது அருள் அரண்மனையாகிய இதயத்தில் நீயே 'நான் நான்' என்று ஸ்புரித்து அருள் நடனமாடுகின்ற சிவஞானனந்தமாகிய மோனரமிப்பால் 'நீ' என்றும் 'நான்' என்றும் இருவேறு உணர்வு அற்றுப்போகும்படி என்னுடன் சேர்ந்து எப்போதும் நித்தியானந்தமயமாக விளங்கும் பரபோத நிலையை அருள்செய்வாயாக.

57. **உண்ணுண வாதிக ளெண்ணம்பல் கோடிக**
ளுன்னி யுறக்கமு மோராமற்
புண்ணுறு நெஞ்சப் புன்மைய னுநாட்
போக்குகின் றேனே புலன்வென்ற
கண்ணுளார் கண்டுதங் கரதலக் கனியாக்
களித்திடற் குரிய கடவுளனு(ம்)
நுண்ணுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென்று ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அன்றன்றும் தேவைப்படும் உணவு முதலியவற்றைப் பற்றியே நெஞ்சம் புண்ணுகும்படி தினமும் நினைந்து தூக்கம் கூட வராமல் துயரமடையும் அற்பனுகவே என் வாணுளைப் போக்குகின்றேனே! ஐம்புலன்களையும் வென்ற ஞானிகள் கையிற் கனியாகக் கண்டு களிப்பதற்குரிய கடவுளே, சூக்ஷ்ம ஞானுகாச சொரூபனுன உன்னை நான் அடையும்படி எனது எண்ண அலைகளெல்லாம் எப்போது அழியுமோ? அறியேனே!

58. வாலறி வொன்றே வடிவமா யென்முன்
வந்தநின் மோன வலிவாலே
மேலறி வடைதல் வேண்டுமே யன்றியிவ்
வெளியேன் பரத்தை விவரித்தே
சால வுணர்த்துஞ் சதுர்வே தம்பிரத்
தானத் திரயம் தமிழ்ஞான
நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பிரம்ம ஞானப் பேரறிவே உடல்கொண்டு வந்து என்முன் நின்றாயே. அத்தகைய உனது மௌன சக்தியால் தான் நான் ஞானமடைய வேண்டுமே தவிர, பரம்பொருளை விவரித்துக் கூறும் நான்கு வேதங்கள், பிரஸ்தானத்திரயமாகிய சாஸ்திரங்கள், தமிழிலுள்ள ஞான சாஸ்திரங்கள் ஆகியவற்றை ஒன்றுமே அறியாதவன் நான். பேதையாகிய என்னுடைய அஞ்ஞானத்தை நீயே அறுத்தருள்வாயாக.

59. துக்கமுற் றுள்ளந் துடிப்புறு மென்னைத்
தூவெனத் தள்ளிச் சுத்தமனப்
பக்குவ மிலையெனப் பரிகசி யாதுகண்
பார்ப்பா யெனத்தமிழ்ப் பாப்பாடி
வெட்கமு மொதுக்கியுன் பக்கமுற் றழுதருள்
வேண்டியே யனலிடை மெழுகாக
நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
லக்கணு நின்றனை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன்னை அடையப்பெறாத துக்கத்தால் உள்ளந் துடித்து வருந்தும் என்னை 'நீ பரிசுத்த மனப்பக்குவமில்லாதவன்' என்று நீ கூறி வெறுத்துப் பரிகசிக்காமற் அருட்கடைக் கண்ணினாற் பார்த்தருள வேண்டும் என்று தமிழ்ப்பாக்களால் முறையிட்டுப் பாடி என் சிறுமையை எண்ணி வெட்கப்பட்டாலும், அதையும் பொருட்படுத்தாமல் வெட்கத்தையும் ஒதுக்கிவிட்டு, உன் அருகில் வந்து வீழ்ந்து பணிந்து அழுதழுது அனலில் மெழுகுபோல் நெக்குநெக்கு உருகி, வேண்டி, உன்னையே புகலிடமாக வந்து நிற்கிறேன்.

நீயோ யாதொரு மறைப்புமற்றவனாகி விளங்குகின்றாயாயினும் நான் உன்னை உணர முடியவில்லையே!

60. தூசென விகபரச் சுகங்களைத் தள்ளியித்
தொல்லுல கப்புகழ் தொடர்பென்னும்
பாசமுற் றறுத்தநின் பக்தர்க ளுளத்தெழும்
பரிபக் குவகுரு பக்தியிலோர்
வீசத்தின் கோடியில் வீசமெ னுங்கொளா
வீணனா னன்றோ மெய்யான
நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ்செய் யாதருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இகபர சுகங்களை எல்லாம் தூசுபோல் எள்ளித் தள்ளியும், ''இவ்வுலகத்தில் புகழுடம்பாவது நிலைக்க வேண்டும்'' என்னும் மயக்கத்துக்கும் இடந்தராமலும், உலகபாசம் முழுவதும் அறுத்து நிற்கும் உன் அரிய பக்தர்களின் உள்ளத்தில் எழுகின்ற பரிபக்குவமுற்ற குருபக்தியில் வீசம் ('வீசம்' என்பது பதினாறில் ஒரு பகுதி - 1/16) பங்கைக் கோடிப்பங்காக வகுத்த அச்சிறு பகுதியில் ஒரு வீசம் அளவுகூட கிடைக்கப்பெறாத வீணன் அல்லவா நான்? இவ்வாறு உன்னிடம் மெய்யான பக்தியில்லாத எனக்கு முன்பு எப்படியோ ஒரு சிறிது உனது ஆசையை (ரமண பக்தியை) க் காட்டி யாட்கொண்ட நீ இப்போது அந்த பக்தியைச் சம்பூரணப்படுத்தாமல் மோசஞ்செய்து விடாதே. எனக்கு அருள்வாயாக.

61. உய்ந்திட லாமுனா லுண்ணப்பெற் றாலென்
றுடலிள மையினா னுனைத்தேடி
வந்தடைந் தேனே வாங்கிய கனியை
மறந்தவர் போற்றா மதஞ்செய்தால்
மொய்ந்தெறும் பீக்களான் மூடுண் டும்புகை
முதலிய வற்றான் முதிர்வடைந்து(ம்)
நைந்தழி கனியா னலனிலை பதத்தி
னாடியுட் கொண்ணலம் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன்னுல் உண்ணப்பட்டால் நாம் பிழைக்கலாம் என்று கருதி இவ்வுடல் இளமையோடிருக்கும் போதே உன்னைத் தேடிவந் தடைந்தேனே. ஆனுல் நீயோ ஒருபழத்தை வாங்கியபின் அதைச் சாப்பிடாமல் வெகுநாள் மறந்துபோய் தாமதித்தால் அது எறும்பு, ஈக்கள் மொய்ப்பதாலும், புகை முதலிய வற்ருலும் மேலும் கனிந்து முதிர்ந்து நைந்து அழிந்து போகுமானுல் அதனுல் என்ன பயன்? அது சாப்பிடும் பதத்திலிருக்கும்போதே அதை விரும்பிச் சாப்பிடுவாயாக. அது தான் நல்லது. (அதுபோல உடல்மூத்துத் தளர்ந்து பயனற்றுப்போன பிறகு எனக்கு அருள் செய்யலாமென்று நீ என்னை மறந்தவனுய் தாமதித்திருந்தால் அது பயனற்ற காரியம். ஆகையால் இப்போதே அருள்செய்க என்றபடி)

62. **புந்திந விந்தேய லைந்துதி ரிந்தகம்**
புண்பட விகபரப் புசிப்பாலே
எந்தந லங்களு மின்றிய ழிந்ததை
யெண்ணி யழுங்கழி விரக்கத்தால்
வெந்துனைத் தஞ்சம டைந்துப ணிந்ததொல்
வேதனை யேனினி மேலேனும்
நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தகனீ யெனக்கு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நான் புத்திகெட்டு இகபர சுகானுபவங்களில் அலைந்து, திரிந்து மனம் புண்பட்டு யாதொரு பயனுமில்லாமற் போவதை எண்ணி கழிவிரக்கத்தால் அழுது ஏங்கி உன்னைத் தஞ்சமாக வந்து அடைந்து நான் இத்தகைய பழைய துன்பானுபவங்களால் வேதனையடைந்தவனுய் பணிந்து நிற்கின்றேன். இனிமேலாவது நான் துன்பமடையாதபடி நீ உன்னை எனக்குத் தந்து என்னை உனக்கு அடியவனுகக் கொள்வாயாக. அப்படி நீ செய்யாவிடில் என்னைச் சித்திரவதை செய்யும் எமனுகத்தான் நீ இருக்கிருய் என்றே கருத நேருகிறது.

63. தீக்குழி யைம்புலத் தேவைகள் பெய்துஞ்
சிறிதெனு மணையாத் திறங்கண்டேன்
ஊக்கமி ழந்தவ வாழ்க்கையி னுன்னருள்
மீட்குமென் றுன்னடி வீழ்ந்துள்ளேன்
ஆக்க மளித்தெனைத் தூக்கியெ டுத்தவ்வி
யாஜம தாத்திரு வருட்கண்ணால்
நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஐம்புலன்களாகிய பேராசை நெருப்புக்குழியானது அதற்குத் தேவையான போகப் பொருள்களை எவ்வளவு போட்டாலும் அணையாமல் மேலும் எரிவதையே கண்டேன். அதனால் அவற்றை மேன்மேலும் தேடும் ஊக்கம் இழந்து, அவமான உலகப் பொருளைத்தேடும் வாழ்க்கையினின்றும் என்னை உன் அருள் மீட்கும் என்று நம்பி உன் திருவடிகளிற் சரணடைந்துள்ளேன். எனவே நீ உன் அவ்வியாஜ கருணையால் என்னை இந்த அவவாழ்க்கையினின்றும் தூக்கி எடுத்து, தவவாழ்வில் ஆக்கம் கொடுத்து, உன்திருவருட் கண்களால் நோக்கி, திருவுளத்தால் என்னை உய்விக்கக் கருதி, என் சிரத்தை உன் திருவடிகளால் தீண்டி என்னைப் பக்குவமாக்கி ஆட்கொண்டருள்வாயாக.

64. முற்றவத் தாலுடன் மொழிமன மடக்கும்
மோனமெய்க் கல்வியை முன்கூட்டிக்
கற்றடங் கிடாத காரணத் தாலகங்
காரநச் சரவாற் கடியுண்டேன்
புற்றர வாற்கடி யுற்றிடி னும்விடம்
போமா றிடுமருந் ததுபோலே
பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மனோ வாக்குக் காயங்களை அடக்கி வைத்திருக்கும் மெய்யான மோனக் கல்வியை பூர்வ தவத்தால் கிடைக்கப் பெறுதவனாகையால் அகங்காரம் என்னும்

விஷப்பாம்பினால் கடிபட்டுத் துன்புறுகின்றேனே. புற்றில் வாழும் பாம்புகளால் கடிப்பட்டாலுங்கூட அவற்றின் விஷம் நீங்கும்படி மருந்து கொடுப்பதுண்டல்லவா? அதுபோல அகங்காரமாகிய பெருமயக்க விஷம் என்னைத் தீண்டி தலைக்கேறி நான் கேடுற்றழியு முன்பே உன் திருவருள் மருந்தை எனக்களித்து என்னைக் காப்பாற்றுவாயாக.

65. **ஆர்த்தவர் முப்புர மழிந்திட நகைத்துப்**
பார்த்தனை முன்னு ளனங்கனைத்தீ
நேத்திர மலர்த்திப் பார்த்தனை யழிந்தான்
நினைச்சரண் புகுந்தவென் னெஞ்சத்தே
தூர்த்த வகந்தையைச் சுட்டெரித் துன்பதத்
தூமல ரிதயந் தோய்ந்திடநீ
பார்த்தருள்; மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வர் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நீ முன்னாள் அட்டகாசம் செய்து கொண்டிருந்த திரிபுராதிகள் அழிந்து போகும்படி நகைத்துப் பார்த்தனை. அனங்கனாகிய மன்மதனையும் நெற்றியிலுள்ள ஞானாக்கினிக் கண்ணை விழித்துப் பார்த்தாய். அவன் அக்கணமே அழிந்தான். இப்போதோ, உன்னை நான் சரணடைந்ததால் என் மனமாகிய அகங்காரத்தைச் சுட்டெரித்து உன் திருவடித் தாமரையாகிய இதயத்தில் நான் வாழும்படி அருள்கூர்ந்து பார்த்தருள். என் மயக்கம் அழியும்படி நீ அருட்கண் பார்த்தருளா விட்டால் அந்தோ, உனக்கு என்பொருட்டு சிபாரிசு சொல்லக் கூடியவர் யாருண்டு? பார். (பார்ப்பாயாக)

66. **சத்திய முடலுல கத்தினில் வாழ்வெனுஞ்**
சடமதி யாலே தனக்கான
சொத்துக்க ளெங்கே சுதன்மனை யெங்கே
சுகங்களெங் கேவான் சுரரிறையை
யொத்தபன் மேன்மைக ளெங்கே யெனவலைந்
துளங்கலங் கிடுமிவ் வுலகாசைப்
பித்துவிட் டுனைநேர் பித்தனுக் கினையருள்
பித்தந்தெ ளிமருந்து ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இவ்வுலகில் உடலோடு வாழும் மனிதவாழ்வு சத்தியமானது என்று எண்ணும் மூட புத்தியினால் ''எனக்குள்ள சொத்துக்கள் எங்கே? என் மகன், மனைவி முதலியோர் எங்கே? என் சுகசாதனங்கள் எங்கே? தேவேந்திரனைப் போன்று நான் அடைய வேண்டிய மேன்மைகள் எல்லாம் எங்கே?'' என்று ஏங்கி ஏங்கி அலைந்து மனங்கலங்கி நிற்கக் கூடிய இவ்வுலக ஆசைப் பைத்தியத்தினின்றும் விடுபட்டு, உன்னையே விரும்புகிற தெய்வப்பித்தனாக என்னை ஆக்கிவிட்டாயே! தெய்வமாகிய உன்னை அடைந்து ஆசை பூர்த்தியடைந்து அதனால் இந்தத் தெய்வப் பித்தமும் தெளியும்படி உன் ஞான அருள் மருந்தை எனக்குக் கொடுத்தருள்வாயாக.

67. யாதொரு பொருளு மன்னிய மில்லா
வகண்டநின் னருட்சீ ரளப்பரிதா
யோதிடு மறைக ளொப்புயர் வில்லா
வொருவனு யுள்ளத் துறுபொருளா
யாதியந் தமிலாய்! அடியேற் கருளநீ
யஞ்சுவ தார்க்கே? யதனாலே
பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கேன் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா! தனக்கு அயலாக எப்பொருளு மில்லாத அகண்டாத்ம சொரூபனான உன் அருள்மகிமை அளவிட முடியாதது என்றும், அதனால் நீ ஒப்பும் உயர்வுமற்ற பெரியோன் என்றும் உள்ளத்தில் 'நான் நான்' என்று எப்போதும் விளங்கும் முதற்பொருள் என்றும், முதலும் முடிவுமற்றவன் என்றும் உன்னை வேதங்கள் போற்றுகின்றன. இத்தகைய சர்வ சக்திமானாகிய நீ எனக்கு அருள் செய்யலாமா கூடாதா என்று யாருக்குப் பயந்து தயங்குகின்றாய்? ஆகையால், யாருக்கும் அஞ்சாத நீ உன்னை வந்து பயமற்றுத் தஞ்சமடைந்த என்னை சேர்ந்தருள். உனக்கு பயம் எதற்காக?

68. புல்லொளி மின்மினி நல்லொளி விளக்கெனப்
புகல்வா ரிரவில்; புலருங்கால்
எல்லெழுந் திடினிப் புல்லொளி நல்லொளி
எங்கே விளங்கிடும்? இதயத்தே
எல்லையில் லாவா லறிவுப் பரிதிநீ
யெழுந்தருள் வாயே லெனக்கென்றோர்
புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிட வேயருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இரவில் மின்மினியின் வெளிச்சம் அற்பமாயினும் பரவாயில்லை என்றும், ஆனால் விளக்கொளி மிகவும் நல்ல பயனுள்ள தென்றும் மக்கள் கூறுவர். பொழுதுவிடிந்து சூரியன் உதயமாகிவிட்டால், இந்த அற்ப மின்மினியொளி, நல்ல விளக்கொளி இவையெல்லாம் எங்கே விளங்கும்? (விளங்காது) அதுபோல, இதயத்தில் எல்லையற்ற ஞானசூரியனை நீ எழுந்தருளி விளங்க ஆரம்பித்து விடுவாயானால், பிறகு எனக்கிருந்த நல்ல அறிவு, கெட்ட அறிவு என்பவையெல்லாம் எப்படிப் பொருட் படுத்தப்படும்? (படாது). ஆகவே உன் அருள் எனக்குச் சேரும்படி அருள்வாயாக.

69. கீழ்மையி ரும்பெனி னும்பரி சவேதி
கேண்மை யடைந்தாற் கேடில்லா
ஏமமா தாகியி லங்கிடு மன்றோ
வென்னெஞ் சியல்பு மிதுபோலே
காமமு லோபக டுஞ்சின மோகதுர்க்
கந்தமி குந்த கலிகாலப்
பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அற்பமான இரும்பாக இருந்தாலும் ஸ்பரிசவேதியுடன் சேர்ந்தால் துருப்பிடிக்காத சுத்தமான பொன்னாகி விடுமல்லவா? இதுபோல, என் மன இயல்பும் காமமும், லோபமும், கடுஞ்சினமும், மோகமுமாகிய

துர்நாற்றம் நிரம்பிக் கலி தோஷங்களாகிய பூலோக வாசனைகளுடையதாயினும், அது பரிபூரண ப்ரம்ம வாசனை அடையும்படி நீ என்னை முற்றுஞ் சேர்ந்தருள்வாயாக.

70. ***மயர்வுறும் பொன்பெண் மண்புக ழுடையும்***
வாழ்க்கையி னீங்கு மாவலினுற்
றுயர்மனத் துடன்போர் தொடுத்தன னெனினுந்
தோல்விமேற் றோல்வியே தொடர்ந்தேற்றே
அயர்வுறுங் காலுன் னருளா லோர்நாள்
அருணா சலரம ணாவென்றுன்
பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவார் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மயக்கத்தைத் தருகின்ற பொன், பெண், மண், புகழ் இவைகளை அடைய விரும்பும் வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டும் என்னும் ஆசையால் துன்பம் தரும் மனத்தோடு போர் தொடுத்தேன். ஆயினும், தோல்விமேல் தோல்வி தொடர்ந்து கண்டு களைத்து அயரும்போது ஓர்நாள் உன் திருவருட் செயலால் ''அருணாசலரமணா'' என்று உன் திருநாமத்தை நான் நினைக்கும்படி நீயே என்னைப்பிடித்து இழுத்துக் கொண்டாயே! ஆகா, உன் கருணையின் பெருமையை யார்தான் அறியமுடியும்?

71. ***சேய்த்தனம் போலுளஞ் செம்மையு றாமற்***
செகப்புரட் டினிற்கை தேர்ந்தறப்பக்
காய்த்தன மாய்க்கருங் கற்றன மாயென்
கடைநெஞ் சத்தனங் கனியாமல்
''வாய்த்தனங் கல்விபொன் மாதனம் பூதனம்
வாழ்ந்தனம்!'' என்றே மகிழ்கின்ற
பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனாக் கினையென் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஓர்குழந்தையைப் போல உள்ளம் செம்மையடைந்து நிற்காமல், இந்த உலகின் புரட்டுத் தில்லுமல்லுக்களில் கை தேர்ந்து மனம் பழுக்காத முரட்டுக்

காய்போலவும், கருங்கல் போலவும் என் கீழான மனம் கனிவு பெறுமல், ''ஹா நான் படித்தவன், கல்வி, செல்வம், திரண்ட ஐசுவரியம், நிலம் எல்லாம் பெற்று வாழ்கின்றேன்'' என்று எண்ணி இறுமாப்புடன் மகிழ்ச்சியடைகின்ற பேய்த்தனம் என்னிடமிருந்ததே! இது விட்டு அகலும்படி, நீ என்னை விடாத பிரம்மராக்ஷஸாகப் பிடித்து என்னை உன் பித்துப்பிடித்த ஓர் பேயனுக ஆக்கிவிட்டாயே! என்ன ஆச்சரியம்!

72. **ஐங்கரு விகளா லறிபடு முலக**
வாசைவெம் புயலில கப்பட்டே
உய்ங்கொழு கொம்பொன் றுடனரு கினிலே
யூன்றுவ தின்றே லுலைந்தாடித்
தொய்ங்கரம் பற்றிச் சுற்றிக்கொள் ளாமற்
றுவண்டு துவண்டே விழுகின்ற
பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஐம்பொறிகளால் அறிபடுகின்ற இப்பொய்த்தோற்ற உலகப்பொருள்களின் மேல் ஏற்பட்ட ஆசையென்னும் கொடிய புயல்காற்றிலகப்பட்டு, துணையாகப் பற்றிக்கொண்டு உய்வடைவதற்கு யாதொன்றுமில்லாததால் அவ் வாசைப் புயலால் ஆடியலைந்து துவண்டு துவண்டு கீழே விழுகின்ற ஒரு இளங்கொடியாக உள்ள நான் பற்றிக்கொள்வதற்கு சற்குருவாகிய கொழுகொம்பாம் நீ இன்றி வருந்தாதபடி எனக்குப் புகலளித்துக் காப்பாயாக.

73. **துடியாத் துடித்துறுந் தூயன் பிணிற்பின்**
றுடியாது சொக்குந் தூயோருள்
குடியாப் புகுந்துநீ கொண்டமர்ந் தபின்னருட்
குடியா வாளுமுன் குலமான
வடியார்க் கடியே னுகவோ ராவலென்
னகத்தே நிரம்பிட வருளாசைப்
பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன்பால் மெய்யன்பால் துடியாய்த்துடித்து அதன்முடிவில் யாதொரு மனத்துடிப்புமற்று ஆன்மாவிற் கலந்து சமாதியிற் சொக்கி நிற்கும் பரிசுத்தர்களான உன் அடியவர்களின் உள்ளத்தில் நீ குடிபுகுந்து அமர்ந்த பிறகு, உன் அருளாட்சிக்குட்பட்ட பிரஜைகளாக உன்னால் ஆளப்படும் உனது அருட்குலமான அவ்வடியார்களுக் கெல்லாம் நான் ஓர் அடியவனாக வேண்டும் என்ற ஓர் ஆவல் என் உள்ளத்தே நிரம்புகிறது. இவ்வாறு நீ உன்னருள் ஆசைப்பொடியால் என்னை மயக்கி என் ஜீவபோதத்தை யழித்து உன்சிவ போதத்தைக் காட்டினாயே என்னே உன் அருள்!

74. நீக்கமி லாமல் நிறைபரம் பொருளா
நிற்பதே யன்றியந் நிலைதவறி
நீக்கமுற் றுயிர்களா நெகிழ்வதும் பின்னே
நெடுஞ்சா தனையா னிலைப்பதுமாப்
பார்க்குறு மோரசம் பாவித மான
பந்தமோட் சங்களென் பவையூடே
போக்கும் வரவுமில் பொதுவெளி யினிலருட்
போராட்டம் காட்டு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அழிவற்ற பூரணப்பரம் பொருளாய் இருக்கும் பிரம்ம நிலையினின்றும் தவறிப் பிரிந்து ஜீவர்களாக இழிவடைந்து பிறகு பலபிறவிகள் தோறும் நீண்டகாலம் செய்த ஆன்ம சாதனையால் மீண்டும் பிரம்மத்தில் நிலைபெறுவதாகவும் பார்க்கப்படுகின்ற ஓர் அசம்பாவிதமான (உண்மையில் அப்படி நடந்தேறாத) பந்த மோக்ஷங்கள் என்னும் இரட்டையினூடே போவதும் வருவதுமான மாற்றங்களே இல்லாத பொது அருள் வெளியில் உன் திருவிளையாட்டாகிய அருட்போராட்டத்தை எனக்குக் காட்டியருள்க.

75. அவித்தையி னுருவா யகமிதென் னறிவா
யனாதி யியல்பா யனுதின(ம்)மூ
வவத்தைக ளுறவோ ராற்பத மாயிதை
யகற்றிட வேபல வாறுக

எவிதமு யன்றும் விடுபடச் சற்று
மியலா விலங்கா யிருக்கின்ற
பௌதிக மாமுடற் பற்றற்று நாளுமுன்
பவிசுகண் டுறவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அஞ்ஞான வடிவாய் ''நான் இத்தேகம்'' என்னும் அறிவுருபமாய், அனுதியானதாய், தினமும் ஜாக்கிர, சொப்பன சுழுத்தியாகிய மூவவஸ்தைகளை அடைய ஓர் இருப்பிடமாய், எவ்விதமான பலதிறப்பட்ட சாதனைகளில் எவ்வளவு முயன்ருலும் சிறிதும் விலக்கமுடியாததாய் - விடுபடமுடியாத பெருவிலங்காய் இருக்கின்ற ''பஞ்சபூத உடலே நான்'' என்னும் பற்று முற்றும் நீங்கி எப்போதும் உன் அருட்காட்சி கண்டு ஆனந்த முற்றிருக்க அருள் புரிவாயாக.

76. தலைவிதி வலிவாற் சலிப்பதே யியல்பாய்
சகலவி டயத்துஞ் சலிப்பின்றி
யலைவுறு சிந்தையி னவல மழித்துனக்
கர்ப்பணிக் கும்வழி யறியாமல்
மலைவுறு மாப்பிர மாதமெ னும்பேய்
வசமா கிமயங்கு மடியேற்கோர்
மலைமருந் திடநீ மலைத்திட வோவருண்
மலைமருந் தாயொளிர் ரமணேசா.

அருள்மலை மருந்தாக விளங்கும் ஸ்ரீரமணேசா, பிராரப்த வசமாய் எல்லா விஷயாதிகளிலும் சிறிதும் அலுப்பில்லாமல் சதா அலைந்து கொண்டே யிருக்கின்ற மனத்தின் பலஹீனத்தைப் போக்கி அதை உனக்குச் சமர்ப்பிக்கும் வழி தெரியாமல் மலைப்புற்று, மகாப் பிரமாதமென்னும் பேயாற் பீடிக்கப்பட்டு மயங்கிக் கிடக்கும் அடியேனுக்கு இந்த மாய மலைப்பு நீங்கும்படியான அருள்மருந்தை யருள நீ மலைப்பதோ?

77. வானங்கொண் டாண்டிட வாய்க்கினு மவர்தம்
வயமின்றி யலையும் மனங்கொன்றே
மோனங்கண் டாரிலர் அத்தகைக் கொடுமன
மோகம மிக்க முடியாமற்

தீனங்கொண் டாரெனி னுஞ்சர ணாயுன்
திருவடி யடைந்திடிற் றேகாபி
மானங்கொண் டுறுபவர் மானத்தை யழித்தபி
மானமில் லாதொளிர் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, தேவலோகத்தை ஆளக்கிடைத்த இந்திரன் போன்ற வானவர்களுங்கூட அவர்களது வசப்படாமல் அலைந்து திரிகின்ற மனத்தை அடக்கி யழித்து ஞானமோன நிலையைக் கண்டறியவில்லை. அத்தகைய கொடிய மோகமனத்தை அழிக்க முடியாமல் தீனமடைந்த எளியவர்களாயிருந்தாலும் உன் திருவடிகளைச் சரணாக அடைவார்களாயின், அப்படித் தேகாபிமானங் கொண்டுள்ள அவர்களது பற்றுக்களை யெல்லாம் அழித்து, நீயும் யாதொரு பற்றுமில்லாமல் விளங்குபவனல்லவா?

78. *அஞ்சிப் பிறப்பிறப் பாங்கடல் கடக்க*
வருந்துணை யானநின் னருட்பாதங்
கொஞ்சமு நினையா நெஞ்சின னாயிக்
கோலா கலமூழ் குறுகின்றேன்
எஞ்சிய வினையா லெனைவருத் திடுமா
றிவ்வுடல் வாழ்வில் இடுக்கண்கள்
மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்சவ றிவனியான்
வஞ்சியா தருளெனை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பிறப்பிறப்பென்னும் பெருங்கடலைக் கடக்க முடியாமல், பயந்து நிற்கின்றேன். அதற்குப் பெருந்துணை புரிபவனாகிய உன் அருட்பாதங்களைக் கொஞ்சங்கூட நினைக்காமல் உலக வாழ்வென்னும் கோலாகலத்திலேயே மூழ்குகின்றேன். ஆனால் எஞ்சியுள்ள பிராரப்த வினைகளை அனுபவிக்குங்கால் அக்கர்ம பலன்களாகிய துன்பங்கள் என் உடல்வாழ்வில் என்னை அளவுக்குமேல் வருத்துமாயின், அப்போது மட்டும் துணை கூவி உன்னைக் கெஞ்சுகிறேன். இத்தகைய கொஞ்ச புத்தியுள்ளவன் நான்! ஆயினும் நீ என்னை ஏமாற்றி வஞ்சிக்காமல் அருள் செய்வாயாக.

79. ஏகான்ம ஞானமே யின்பமென் றறியா
திகபர சுகங்களுக் கேங்குகின்ற
மோகாந்த காரத்தில் மூவாசைப் புயன்மேல்
மூண்டடித் திடவினைக் கடன்மூழ்கிப்
போகாத வாறென் புந்தியை யகமுகம்
பொருத்திநின் னருட்டுணை புரியாயோ
மீகாம னில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஏகான்ம ஞானமே பேரின்ப அடைவு என்றறியாமல், இக பர சுகங்களுக்காகவே ஏங்குகிற மோக இருளிற் சிக்கி உறவாசை, பொருளாசை புகழாசையாகிய மூவாசைப்புயல் மூண்டு வீசவே, மூவினைக்கடலில் நான் மூழ்கிப்போகாதபடி, நீ உன் அருட்சகாயத்தால் என் புத்தியை அகமுகப் படுத்த மாட்டாயோ? இச்சமுசார இருட்கடலில், ஓட்டுவோனின்றிப் பெரும்புயலிற் சிக்கிய கப்பலைப்போல் நான் வீணாக புத்தி சிதறியழியாதபடி நீ மீகாமனாக – ஞான நாயகனாக – இருந்து காப்பாற்றி யருள்வாயாக.

80. சடவுடல் சச்சித் திடையினிற் றோன்றிச்
சன்மங்கள் பற்பல சார்ந்தோங்கும்
உடலகம் புத்தி யுருவென் றெவ்வா
றுதித்ததிவ் வுடலுற வெனும்மாய
முடியவிழ்ந் திடுவதும் முடியுமோ வெனநான்
முழுமனத் தோடு முயன்றுமிதோர்
முடியடி காணு முடி! விடுத் தனைநேர்
முடிவிடக் கடனிலை? ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஜடவுடலுக்கும், சத்சித்தான ஆன்மாவுக்கு மிடையில், தோன்றி, பற்பல ஜன்மங்களாக வாழ்ந்து வருகிற 'நான் தேகம்' என்னும் புத்தி எப்போது, எவ்வாறு உதித்ததோ? இந்த 'உடலே நான்' என்னும் பொய்யுறவு கொள்ளும் மாயமுடிச்சை – சித் ஜடக் கிரந்தியை – அறுத்தெரியவும் முடியுமோ என்று நான் முழு உள்ளத்தோடு

முயன்றுங்கூட இது ஆரம்பமும் முடிவும் இரண்டும் காண முடியாத பெருஞ் சிக்கலாக உள்ளது. இதை விடுவித்து தாய்போலக் கருணை செய்து முடிந்த குறிக்கோளாகிய ஆன்ம நிலையில் என்னைச் சேர்க்க வேண்டியது உன் கடமையல்லவா?

81. ஆக்கையிற் பற்றினு மகலா துன்னிட
மான்மஞா னத்தினை யருளென்றே
கேட்குமென் பக்குவக் கேட்டினை யானே
நோக்கிநா ணுறும்படிக் கிஞ்சிற்றும்
வாக்கினாற் குறியாய் புன்முறு வலொன்று
மௌனமா யென்முன் மலர்கின்றாய்
மூக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்
தூக்கியணைந்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, தேகத்தின்மேல் ஆசையபிமானம் இன்னும் நீங்காமலேயே நான் உன்னிடம் ''எனக்கு ஆன்மஞானத்தைக் கொடு'' என்று கேட்கின்றேன். என் அபக்குவத்தை நானே பார்த்து வெட்கப்படும்படி, நீ வாயால் அதுபற்றி ஒன்றும் சொல்லாமலேயே மௌனமாய் என்முன் ஓர் ஏளனப் புன்முறுவல் செய்கின்றாய். இது மூக்கரையனின் முன் காட்டப்படும் முகக்கண்ணாடி யாகவல்லவா இருக்கின்றது? (அதாவது என் அபக்குவத்தை நானே யறியுமாறு அறிவிக்கும் உபாயமே உன்மோன ஏளனப் புன்சிரிப்பு). இவ்வாறாகாமல் என்னைப் பக்குவப்படுத்தி, உயர்த்தி உனக்கு ஏற்றவனாகச் செய்து உன்னுடன் சேர்த்துக் கொண்டருள்வாயாக.

82. உய்யவோர் வழிதுறை யின்றி மயற்புய
லோங்கவ லைந்திரு ளுததியிலே
நொய்யது ரும்பினிப் பொய்ய னுழன்றதை
நோக்கினை யருட்கணால் நொடிப்போதில்
கையகத் துற்றபின் சையெனத் தள்ளாதுன்
காதல ளித்தே கரையேற்றி
மெய்யகத் தின்மன மென்மல ரணையினு
மெய்கலந் திடவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, இருண்டதோர் கடலிலே நான் உய்வடைய யாதொரு வழியும் துறைமுகமும் கிடைக்காமலும், மயலாகிய புயற்காற்று ஓங்கி வீசியடிக்கவும், மிதந்து கொண்டிருக்கும் ஓர் அற்ப சிறு துரும்பையும் விட அற்பமாகிய நான் உழன்று கொண்டிருப்பதை நீ உன் அருட்கண்ணுல் பார்த்துவிட்டாய். உடனே ஒரே நொடியில் நீ என்னை உன் கைப்பிடிக்குள் அகப்படுத்திக் கொண்டாய். அன்று இவ்வாறு உன் அருட்கரத்தினுல் என்னைப் பிடித்துக் கொண்ட பிறகு இனி, ''சை'' என்று நீ வெறுத்துத் தள்ளி விட்டு விடாமல், உன்மேல் எனக்கு உண்மையான பக்தியை உண்டாக்கித் தந்து, சம்சார இருட்கடலிலிருந்து கரையேற்றி உன் உண்மையான வீடாகிய இதயத்தில், சுத்த சத்வ மனமாகிய மிருதுவான மலர்ப் படுக்கையில் நாம் சத்திய ஞானனந்தத்திற் கலந்து சுகித்திருக்க அருள்செய்வாயாக.

83. **''வான்மே லவரினு(ம்) நான்மேல்; மனிதருள்**
நான்மே லென்றிட மறுப்புண்டோ?
நான்மேல், நான்மேல், '' என்று சீர் மையெலா(ம்)
நாடுவோர் தமைநீ நாடாமல்,
ஊன்மே லேற்றுள வுயிர்களொவ் வொன்றிலோர்
உயர்வுகண் டுண்மையி லு ளமடங்கி
மேன்மேற் ருழ்ந்திடு மெல்லியர் சேர்ந்துநீ
மேன்மையுற் றனையென் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ''வானுலகத்தவரை விட நான் மேலானவன்; இவ்வுலகிலுள்ள மனிதர்கள் எல்லோரையும் விட நான் நிச்சயமாக மேலானவன் என்ருல் யார் மறுக்கமுடியும்? ஆகையால் நானே மேல்; நானே மேல்'' என்று பெருமையெல்லாம் வேண்டி உழைப்பவர்களை எல்லாம் நீ விரும்பாமல் புறந்தள்ளிவிட்டு, உலகிற் பிறந்திருக்கும் உயிர்கள் ஒவ்வொன்றிலும் தன்னைவிட யாதேனும் ஒரு மேன்மை இருப்பதைக் கண்டு, உண்மையாகவே கர்வ மடங்கி மேலும் மேலும் தன்னைத் தாழ்மை யுள்ளவனுக அறிந்து

அடங்குகின்ற மென்மை சுபாவமுடைய உன் அடியவர்களை மட்டும் நீ ஐக்கியப்படுத்திக் கொண்டு, அதனால் 'கருணாமூர்த்தி' என்ற மேன்மைப் பெயரை நீ அடைந்தாய். என்னே உன் மஹிமை!

84. **மெய்ம்மையாம் வாழ்வெனில் வீடொன் றலாமல்**
வேறிலை யெனும்வி வேகமிலேன்
செய்மணம் பொன்னிதி தேர்கலை மனைநிலஞ்
சேர்புக ழிவைகளைத் திரட்டுவதாம்
பொய்ம்மையை மேன்மையாய்ப் போற்றிநா னவற்றுட்
புகுந்திடு முன்னே புவிவாழ்வாம்
மைமய னீத்தருண் மையினா லுனதுண்
மைவச மாக்கினை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, சத்தியமான வாழ்வு என்றால் முத்திநிலை யொன்றே தவிர வேறெதுவுமல்ல, என்று தீர்மானிக்கும் விவேகமில்லாதவனாய், திருமணம் செய்துகொள்வது, பொன், ஐசுவரியம் திரட்டுவது, கலைகளில் தேர்ச்சியடைவது, வீடுகளைப் பெறுதல், நிலங்களை வாங்குவது, புகழைச் சேர்ப்பது, இப்படிப்பட்ட இவைகளைத் திரட்டுவதாகிய பொய்ம்மை வாழ்வையே மேன்மையான வாழ்வு என்று கருதி, நான் அவைகளுக்குள் புகுவதற்குமுன்பே, உலகச் சிறப்பு வாழ்வு என்னும் இருண்ட அஞ்ஞானத்தினின்றும் என்னை மீட்டு, உனது திருவருளாகிய மையினால் உனது உண்மை வசமாக இழுத்துவந்து விட்டனையே. ஆ! என்ன விந்தை!

85. **கெட்டலைந் துழலும் கிறிமலி நாயினுங்**
கீழ்மையே னெனையுன் கிருபையினாற்
சட்டெனப் பிடித்தருட் சங்கிலி யாலென்
றலைவிதி மாற்றியுன் றாணிழலை
விட்டகன் றினியும் மீண்டுல கியலை
மேவிடாப் புதியதோர் விதிசெய்தே
மொட்டை யடித்தெனை வெட்டவெ ளியினீ
நட்டமா டினையென் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மிகவும் வெறிபிடித்துக் கெட்டு அலைகின்ற

தெருநாயை விட மிகவும் கீழோனாகிய என்னை உன் கிருபையினால் சட்டென இளமையிலேயே பிடித்து, அருளாகிய சங்கிலிபோட்டுக்கட்டி, என் தலைவிதியை மாற்றி, உன் திருவடி நிழலைவிட்டு நீங்கி இனிமேலும் மறுபடியும் நான் உலகியல் வாழ்வை மேற்கொள்ளாதபடி, ஒரு புது ஏற்பாடாக (சந்நியாசி கோலம் தந்து) என்னை மொட்டை யடித்து, வெட்டவெளியில் வீடின்றி அலைபவனாக்கி உன் அருள் நடனமாகிய கருணைத் திருவிளையாட்டை யாடினாயே. இது என்ன ஆச்சரியம்!

86. போகங் களிலுவர்ப் பேகண் டலுத்துண்மைப்
பொருளெது வெனச் சரண் புகுவோர்க்கே
''ஏகம் பொரு''ளென வெல்லா மறைகளு
மிசைப்பதைக் கேட்டும் என்னுள்ளம்
ஊகங் கொடுசெய்வி வேகமில் லாததா
லுடலே நானென் றுதிக்கின்ற
மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் ரமணேசா.

என் ஆன்ம சொரூபனான ஸ்ரீரமணேசா, இக பரமாய சுவர்க்காதி உலகங்களில் அனுபவிக்கும் சகல விதமான போகங்களிலும் மனம் அலுத்துச் சப்பிட்டு வெறுப்புற்று ''மெய்ப்பொருள் எது?'' என்று சற்குருவை வந்து சரணமடையும் பக்குவிகளுக்கே எல்லா மறைகளும் ''பரம்பொருள் ஒன்றேதான் சத்தியம்'' என்று கூறுகின்றன. இந்த சத்திய உரையை நான் கேட்டிருந்தும் நல்ல யூகத்தோடு செய்யப்படும் விவேகத்தால் 'உடலே நான்' என்றுதிக்கும் மோகத்தைத் தவிர்க்க முடியவில்லை. ஆதலால் நீ இந்த என்மோகத்தை நீக்கி உன்மேல் அளவு கடந்த ஆசையாகிய பத்தியில் என்னை மயங்கச்செய்து, எனது இந்த வெகுநாள் ஏக்கத்தைத் தீர்த்து வைப்பாயாக.

87. எவ்விதந் தானின் னியலறி வானந்த
மிருப்பதென் பதைமறைத் தெனைமூடிக்
கவ்விய மாயக் கனவிரு ளூர்ந்துண்மைக்
கண்விழித் தடியேன் கண்டிடநீ

யொவ்விலை யோநா னோலமி டுங்குர
லொன்றெனுஞ் செவியி லோராமன்
மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உனது சச்சிதானந்த விளக்கத்தை எவ்விதமோ மறைத்து என்னைக் கவ்வி மூடிய மாயையாகிய கனத்த இருளைத் தீர்த்து சத்திய ஞானக் கண்ணைத் திறப்பித்து அடியேன் உன்னைக்காண நீ சம்மதிக்க மாட்டாயா? இவ்வாறு நான் ஓலமிடும் குரல் ஒன்று கூட உன் செவியிற் கேளாதவன் போலவும், கல்போலவும் நீ மௌனியாக இருந்து வருகிறுயே! நீ திருவாய் மலர்ந்து அபயம் கொடுக்கா விட்டால், உன்னுடைய இந்த மௌனம் நல்லதாகுமா? (ஆகாதே).

88. *அவநிந் தனைகளுக் காளாக் கிடும்புல*
வாசைக ளாலிழுத் தலைப்புண்டிப்
பவவெங் கடலடிப் பதிந்தவென் றனையும்
பாதுகாத் திடவே பரிவோடு
சிவமங் களவடி வாக வெழுந்த
தெட்சிணு மூர்த்தி நீயன்றி
யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்தது ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உலகப் பழிச்சொல்லுக்கு என்னை ஆளாக்கி வைக்கின்ற ஐம்புல ஆசைகளால் இழுத்து அலைக்கப்பட்டு, இக்கொடிய பிறவிக்கடலின் அடியில் ஆழ்ந்து கிடக்கும் என்னையும் பாதுகாப்பதற்காகவே என்மேல் பரிவோடு சிவமங்கள வடிவினனுய் எழுந்தருளிய தக்ஷிணுமூர்த்தியே! உன்னைத் தவிர, என் ஜீவபோத வாழ்வின் வாயில் மண்ணைப்போட்டு, என் தனியிருப்பாகிய - வியக்தியாகிய - பிழைப்பை ஒழித்தது வேறு யாவரேயாகும்? (வேறு யாருமில்லை; அது நீயேதான் என்றவாறு)

89. பாரிலி ருந்தோ ரூரிலி ருந்தோர்
பழகியிருந்தோர் பகலிரவாய்
நேரிலி ருந்தோர் நேசமி குந்தோர்
நீண்மனக் கோட்டையி னோடன்பென்
பேரிலி ருந்தோர் பெற்றவ ருற்றவர்
பெருவா ரியான பிறமக்கள்
யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்டது ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உலகத்து மக்களும், என் ஊர்மக்களும், என்னோடு பழகி வாழ்ந்திருந்த மக்களும், இரவும் பகலும் என் கண்முன் இருந்த மக்களும், என்னிடம் நேசம் கொண்டிருந்த மக்களும், என்னைப்பற்றிப் பலவாறு எதிர்காலச் சிறப்புக்களை நினைந்து அன்போடு நீண்ட மனக்கோட்டை கட்டி வந்த மக்களும், என்னைப்பெற்ற தாய் தந்தையரும், உறவினர்களும், இன்னும் பல பிறமக்கள் யாரும் அறியாதபடி என் புத்தியை மயக்கித் தன்பால் கொள்ளை கொண்டவர். உன்னைத் தவிர வேறு எவர்?

90. மமவகங் காரவ ரக்கரின் சிறையில்
வணமற மதியற வாழ்ந்தேனை
இமையினி லருணு சலசிவ வத்திர
மெய்துளங் கொய்தே யினியென்றுந்
தமதென மீட்டுவந் தடிமையாக் கியதாற்
தவறு தெனையு(ம்) ரமிக்கின்ற
ரமணனென் றுரைத்தேன் ரோசங்கொ ளாதெனை
ரமித்திடச் செயவா ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, 'எனது, நான்' என்னும் மமகார, அகங்காரங்களாகிய அரக்கர்களின் சிறையில் எழிலின்றி, புத்தித் தெளிவின்றி சிறைப்பட்டுக் கிடந்த என்னை, 'அருணசலசிவ' என்ற அஸ்திரத்தை விட்டு, இமைப் பொழுதில் என் உள்ளத்தைப் பறித்து ''இனிநான் எப்போதும் உன் உடைமை'' என்று சிறைமீட்டு வந்து உன் அடிமையாக்கி

விட்டாயல்லாவா? அதனால் "இனி தவறாமல் என்னையும் ஆன்ம ஞானானந்தத்தால் ரமிக்கின்ற ரமணன் நீதான்" எனக் கூறுகின்றேன். நீ ரோஷங்கொள்ளாமல் என்னை ரமிப்பிப்பதற்கு எழுந்தருள்வாயாக.

91. காப்பவ னுனைமனக் கரணங்க ளெதுவுங்
கண்டிட வியலாக் காரணத்தால்
மாப்பரம் பொருணீ வந்தெனை ரமித்திடின்
மனிதராய்த் தேவராய் வாழ்வோருட்
பார்ப்பவ ரில்லை; கேட்பவ ரில்லை;
பகவனே யினிமேற் பயமின்றி
ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, எனது பரமரக்ஷகனான உன்னை மனம் முதலிய அகக்கரணங்களோ, கண் முதலிய புறக்கரணங்களோ பார்க்கவே முடியாதல்லவா? ஆகையால் பரம்பொருளாகிய நீ வந்து என்னை உன்னோடு ஒன்றாக ஐக்கியப்படுத்தி ரமிப்பாயானால் மனிதர்களுள்ளும் தேவர்களுள்ளும் யாரொருவரும் அதைக் காணக் கூடியவரோ, ஏன் என்று கேட்கக் கூடியவரும் யாருமில்லை. ஆகையால் பகவானே, இனிமேல் நாம் யாதொரு பயமுமில்லாமல் இரவு பகலற்ற ஞானாகாசமாகிய திறந்த வீட்டில் (மோக்ஷத்தில்) ரமித்திருப்போம், வருவாயாக.

92. கட்செவி மழுபுலி களிறுரி வேட்டுவக்
கடவுணீ பனிமேற் பயனின்றாய்
உச்சிவிட் டிறங்கிவந் துற்றரு ணாசலம்
உயிர்களைப் பலிகொளு மொருநாளில்
தக்ஷிண(ம்) நோக்கவுன் னக்ஷய திருமுக
வக்ஷியிற் படலு(ம்)நா னுடனேநீ
லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோடு ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, விஷ நாகங்களை மாலையாகவும், புலி, யானை இவற்றின் தோலை ஆடையாகவும், மழுவை ஆயுதமாகவுங் கொண்ட வேட்டுவக் கடவுளாக (சிவனாக) நீ பனி மூடிய கைலாய கிரியின் உச்சியில் தங்கியிருந்தாய். ஆனால் அதனால் பயனில்லை என்று கருதி கைலாயத்தின் உச்சியை விட்டு இறங்கி அருணாசலத்திற்கு வந்து உன் அருளால் நீ உயிர்களை வேட்டையாடிப் பலி கொள்கின்ற குருவவதாரக் காலமாகிய இந்நாளில் அருணாசலத்தினின்றும் தென்முகமாகத் திரும்பிப் பார்த்தாய். பார்த்ததும் அழிவற்ற உனது கண்களில் நான் தென்படவே, உடனே நீ என்னைக் குறிவைத்து உன் அருளாகிய அஸ்திரத்தை விட்டு என்னைப் பிராணனோடுங்கூட உண்டு தீர்த்துவிட்டாய்!

93. சாபமெ டுத்தவர் தகுபொரு ளெய்தாற்
சாமர்த் தியமா மஃதின்றிக்
கோபமி குத்தொரு கொசுகினை வீழ்த்திக்
கொள்பயன் யாதோ? குறிவைத்துப்
பாபமி குத்துள பாழெனைக் கொண்டோய்
பரமசு கிர்தசிவ புருஷார்த்த
லாப(ம்)நீ, இகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஓர் பெரிய வில்லை எடுத்து, நாண் பூட்டிய வீரன் ஒருவன் அதற்குத் தகுதியான ஒரு வலிய பகைவனை அம்பு எய்து கொன்றால் அது சாமர்த்தியம் ஆகும். அவ்வாறின்றி மிகுந்த கோபாவேசங் கொண்டு அவ்வீரன் ஒரு கொசுகை (Mosquito) அம்பு எய்து கொன்றால் அதிலென்ன வீரமோ, லாபமோ உண்டு? ஒன்றுமில்லையல்லவா? அதுபோல பாபங்கள் மிகுந்த அற்பனும் அசத்துமான என்னை அருளுக்குக் குறியாக எய்து பிடித்தாயே! இகபர லாபம் ஒன்றுமில்லாத என்னை அடைந்து, பரமசுகிர்தசிவ புருஷார்த்த லாபமே வடிவமாக விளங்கும் நீ என்ன லாபமடைந்தாய்? (ஒன்றுமில்லையே!)

94. அரும்பொரு ளுடையூ ணாதிக ளின்றி
யமையாச் சிறிதள வதைக்கூடத்
தரும்படி வேண்டத் தகுவனோ நின்பால்?
தடைபடுஞ் சொன்மனந் தான்வெட்கித்
திரும்பிடு முள்ளே திருவுளப் படியே
செய்கநீ யேயெனைச் சிறுகாலை
வரும்படி சொலிலை வந்தென் படியள
வருந்திடுன் றலைவிதி ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, ஒருவன் உயிர்வாழ, சிறிது பொருள், உடை, உணவு முதலியன மிக இன்றியமையாதனவே யாகும். இவற்றைக் கூட 'நீ எனக்குத் தா' என்று உன்னிடம் வேண்டிக் கொள்ள நான் தக்கவனோ? இல்லையே. உன்னிடம் இவற்றைக் கேட்க என் நாக்கு தடைபடும். கேட்காது. மனமும் சொல்லும் வெட்கப்பட்டு உள்ளே திரும்பிவிடும். நீ உன் இஷ்டப்படியே செய்தருள்க. ஏனெனில், நீ என் இளமையில் என்னை உன்னிடம் வரும்படிக் கட்டளையிட்டாயல்லவா? ஆகையால் இப்போது நீயே வந்து இவற்றை எனக்கு அளித்தருள்க. இது உனக்கு சிரமம் என்றால், அந்தச் சிரமத்தைப் படுவது உன்தலைவிதியே யாகும்.

95. தீவெந் திடலின்றித் தீண்டியே பொன்னாச்
செய்திடும் வேதிபோற் றிருவருளால்
தூவெண் குணமாச் சுத்திசெய் தெனையருட்
டோய்கவென் றழுதே துதிசெய்து
காவென் றரற்று(ம்) கடையே னெனினுமுன்
கருணையா லபயக் கரங்காட்டி
வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, "தீயிலிட்டுச் சுட்டுப் புடம்போடாமல், சும்மா தொடுவதனாலேயே ஸ்பரிசவேதி மற்றத்தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கி விடுவது போல, என்னை வருத்தாமல் உன் திருவருட் கடாக்ஷத்தால் தீண்டுவதனாலேயே

சுத்தசத்துவகுண சம்பன்னனுகச் செய்து என்னை அருளில் தோய்த்தெடுப்பாயாக'' என்று உன்னைத் துதித்து அழுது ''என்னைக் காப்பாற்றுக'' என்று கெஞ்சி வேண்டி நிற்கும் கடையேனுமாகிய எனக்கு உன் கருணையால் அபய கரத்தைக் காட்டி, ''இங்கு வா'' என்றழைத்து, என் உள்ளத்தில் புகுந்து உன் திருவருள் வாழ்வைத் தருவாயாக. அப்போது அன்றைக்கே என் அகந்தை வாழ்வை இழந்துவிடுவேன். இவ்வாறு அருள்க.

96. **ஒட்டிடு பிறவியு றுத்திட மரணமு**
றும்பொழு தபயமென் றுன்பாதங்
கட்டிய பத்தி கனிந்துநி றைந்தமார்க்
கண்டனைக் காக்கக் காலனையும்
எட்டியு தைத்தகற் றிட்டவி தமிலாமல்
எப்பிழை கருதியும் எனைநீகை
விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துணையுயிர்
விட்டிட வருள்புரி ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மரணம் வரப்போகிறதென்று அறிந்து, அதையொட்டிப் பிறவியும் மறுபடி வருமே என்று பயந்து வந்து அபயம் வேண்டி உன்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டவரும், கனிந்த பக்தி நிறைந்தவருமான மார்க்கண்டேயரைக் காப்பாற்றுவதற்காக, யமனையும், எட்டி உதைத்து, விரட்டிய உன் கருணைத் தன்மையைக் காட்டாமல் என்னிடம் எந்தப் பிழையையாவது கருதிக் குற்றம்சாட்டி நீ என்னைக் கை விட்டாயாகில், எனக்கு சொல்ல முடியாத (பிறவித்) துன்பம் வந்து விடுமே, ஆகையால், உன்னை நான் மறந்து விடாமல் மனத்தாற் கட்டிக் கொண்டவனுய் இத்தேகத்தையும் பிராணனையும் விடும்படி அருள்புரிவாயாக.

97. **பாடுபட் டுழைத்துவீண் பாபமே குவித்தவிப்**
பதிதனை யுங்கடைக் கண்பார்த்தாய்
''கேடுகெட் டலைந்தது போதுமென் னடிநிழற்
கீழிரு; முன்வினைக் கேடெல்லாம்

ஈடுகட் டினியெனு மிழந்ததைப் பெறுக" வென்
றிரக்கமோ டெனையுட லிளமையிலே
வீடுவிட டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மிகப்பாடுபட்டு இவ்வுலகில் கர்ம நெறியிலேயே வீணாக உழைத்து பாபங்களையே அதன் பயனாய்ச் சேர்த்துள்ள இந்த பதிதனாகிய என்னையும் உன் அருட்கடைக்கண்ணால் நீ இரக்கத்தோடு பார்த்தருளி, "நீ கேடுகெட்டு அலைந்தது போதும்; என் திருவடி நிழலின் கீழ் வந்து இருந்துவிடு; இதுவரை நீ செய்த வினைகளின் கேட்டுக்கெல்லாம் ஈடுசெய்து, இழந்த உன் ஆன்மநிலையை இனிமேலேனும் பெறுவாயாக" என்று கருணையோடு கூறி நீ என் உடலின் இளமைப் பருவத்திலேயே என் வீட்டை விட்டு என்னை வெளியில் இழுத்து வந்து, என் உள்ளமாகிய வீட்டிற் புகுந்து, கொஞ்சங் கொஞ்சமாக உன் வீடாகிய அருணாசல மகிமையை என் புத்தியிற் படும்படி காட்டித் தந்தாயே. இனி வேண்டியவற்றையெல்லாம் முற்றிலும் அருள்வாயாக.

98. *அளியிட் டெனையுமுன் னடியவ னாக்கொண்*
டகலவி டாம லருகீர்த்துக்
களியிட் டணைத்தருட் கரத்தினால் மர்மமாய்க்
கலந்துநீ காக்குங் காரியமாய்
ஒளியிட் டுணர்த்தியிவ் வுலகறி யாதென்
னுளத்தினுள் ளொளித்துவைத் ததையெல்லாம்
வெளிவிட்டே னுன்செயல் வெறுத்திடா துன்னருள்
வெளிவிட் டெனக்கா ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நீ என் மேற் கருணைகூர்ந்து, என்னையும் உன் அடியவனாக ஏற்றுக் கொண்டு, நான் உன்னைவிட்டு தூரச் சென்று விடாமல் என்னை உன் அருகிலேயே இருக்கும்படி இழுத்துவந்து, உன் அருட்கரத்தினால் சந்தோஷமாக அணைத்துக்கொண்டு, என் புத்தியில் இரகசியமாகக் கலந்து, நீ என்னைக் காப்பாற்றி வருவதற்கடையாளமாக உன்

அறிவொளியை அறிய உணர்த்தித் தந்து, ஆனால் உன் கருணையால் எனக்கு நீ தந்ததையெல்லாம் உலகமக்கள் காணாதபடி என் உள்ளத்தில் ஒளித்து வைத்திருந்தாயே. அந்த உன் அருட்காரியங்களை யெல்லாம் இப்போது பிறர் அறிய வெளியிட்டு விட்டேன்! அதற்காக என்னை வெறுக்காமல் உன் அருளை வெளிப்படையாகவே செய்து என்னைக் காப்பாற்றுவாயாக.

99. **ஓதாக் கடையே னுயர்ந்தோர் தொண்டிற்**
குதவாக் கடையேன் ஒருநான்காம்
வேதார்த் தத்தின் மெய்யறி வேனோ
வேத(ம்)முக் குணவிரி வினைத்தாண்டி
நாதாந் தத்தே நானென விளங்கும்
ஞானபண் டிதனே ஞானங்க
வேதாந்த தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருளருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, நான் கற்றறியாத கடையேனும். மேலும் ஞானிகளாகிய மேலோர்களுக்குத் தொண்டு செய்வதற்கும் உதவாத கடையேனும். எனவே ஒப்பற்ற நான்கு வேதங்களின் உண்மையை அறியவல்லேனோ? சப்தத்தின் முடிவாய 'நான் நான்' என்று, சப்தமில்லாமல், ஸ்புரிக்கும் ஆத்ம ஸ்புரண வடிவ ஞான பண்டிதனே, முக்குணங்களையே விரித்துக் கூறும் கர்ம காண்ட வேதத்தைத் தாண்டி, ஞானகாண்ட வேதமாகிய வேதாந்த சாஸ்திரங்களில் இரண்டற்று (அத்வைதமாய்) விளங்கும் வேதத்தின் உண்மையான பொருளாகிய ஏகாத்ம ஞானத்தை எனக்கு அருள் செய்வாயாக.

100. **ஐதலை யாயிப் பொய்தலை யேன்வி**
ணழிதலை யஞ்சி யழுதழுதென்
கைதலை மேற்சேர்த் துய்தலை வேண்டிக்
கால்தலை விளங்காக் கடைமதியால்

நைதலை வேன்றுதி செய்தலா வெண்ணிநின்
னருளினு லசைவுறு நாவாலே
வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, பஞ்சமுகப் பெருமானே, பொய்யர்களில் தலை சிறந்தவனுகிய நான் வீணுக அழிந்து போவதற்கு அஞ்சி, அழுது புலம்பி என் இரு கைகளையும் சிரமேற் கூப்பிக்கொண்டு, உய்வடைய வேண்டி, ஆனுல் நல்லது – தீயது எது என்று விவேகிக்கும் நல்ல விவேகமில்லாத கால் தலை புரியாத அற்ப புத்தியால் உழன்று கெடுகின்றேன். அப்படிப்பட்ட நான் உன்னைத் துதி செய்வதாக நினைத்துக்கொண்டு, உன்னருளால் அசைக்கப்பட்டு இயங்கும் நாவால் என்னென்னவாறு நிந்திப்பதையும் வாழ்த்துவதாகக் கொண்டு, உனது அருளாட்சிக்குட்பட்ட ஒரு பிரஜையாக வைத்து எனை என்றும் கைவிடாது அருள்செய்வாயாக.

101. ***அம்புவில் லாலன்றி யருணகை யாற்புர***
மழித்தோ யருணு சலச்சாரல்
தென்புறம் ரமண தக்ஷிணு மூர்த்தியாய்
தினகர னேயருட் சிரிப்பாலே
என்புவி மயலா யிறுகியு றைந்தமெய்
யியல்பினை யுருக்கி யிதயத்தே
அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாய்க் கரைத்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மேரு மலையாகிய வில்லையும், மகாவிஷ்ணுவாகிய அம்பையும் நீ எடுத்துச்சென்ருலும் அவற்றை உபயோகிக்காமல் ஜீவகோடிகளின்பா லேற்பட்ட அருளால் முப்புரங்களையும் சிரித்து எரித்து அழித்தவனே! தற்காலத்தில் அருணுசலத்தின் தென் சாரலில் தக்ஷிணுமூர்த்தி சொரூபமான ஸ்ரீ ரமண வடிவாக எழுந்தருளிய ஞான சூரியனே! நீ என் உண்மையியல்பான அன்பானது உலக ஆசைவடிவாக இறுகிக் கெட்டிப்பட்டுக் கெட்டுப் போனதை உன் அருட்

புன்னகையால் இதயத்தில் உருக்கி, தண்ணீரில் பனிக்கட்டிக் கரைந்து ஒன்றுகி விடுவது போல சச்சிதானந்தப் பிரிய ரூபமான உன்னில் என்னை அன்புமயமாகவே உருக்கிக் கரைந்து ஒன்றுக்கிக் கொண்டருள்வாயாக.

102. மருணயந் துனைநான் மறந்துபல் கோடி
வகைபிறப் பேற்று வரும்போதும்
அருணிறைந் தென்னுட னுங்காங் கிருந்தெனை
யழைத்துவந் திறுதியி லாசானுய்க்
கருணையா னீநினை யாமனி னைந்தெனைக்
கவர்ந்துன்ன வைத்த காரணத்தால்
அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டேனுன்
னருள்வலை தப்புமோ ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, மாயையால் மயங்கி நான் உன்னை மறந்து, பலகோடி வகையான பிறவிகளை ஏற்று, உழன்று வரும்போதெல்லாம், நீ என் மீது தயைகூர்ந்தவனுய் எனது ஒவ்வொரு பிறவியிலும் ஆங்காங்கே என்னுடனிருந்து வழிப்படுத்தி அழைத்து வந்து எனது கடைசிப் பிறவியாகிய இதில் நீ என் சற்குருவாக அவதரித்து அதி கருணையால் என்னைக் கவர்ச்சிசெய்து நான் உன்னை நினைக்கும்படி, நீ நினையாமலே நினைந்துசெய்த அருளால் நான் என் இளமையில் **'அருணுசலம்'** என்று எண்ணும்படி செய்தாய். அவ்வாறு உன்னருளால் உன்னை நினைத்ததால் நான் உனது அருட்கண்ணி வலையில் அகப்பட்டுக்கொண்டேன். இனி உனது அருள்வலை என்னைத் தப்பிப்போக விட்டு விடுமோ? விடாது.

103. வந்தித் தழுதழு தெங்கெங் கோதடு
மாறிய வெனையுன் மலர்க்கண்ணுற்
சந்தித் தினியெவர் தம்மிடத் திலுநான்
சாரா விதமன்புத் தளையாலே
பந்தித் தருணையம் பதியே கதியாய்ப்
பற்றிக் கிடந்திடும் படியாகச்
சிந்தித் தருள்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, உன்னையே துதித்து, அழுது தொழுது, ஆனால் எங்கோ வழியில்லா வழிகளில் தடுமாறி யலைந்து கொண்டிருந்த என்னை உன் அருண்மலர்க் கண்களால் சந்தித்து, இனி நான் வேறு யாரிடமும் போய் நிற்க வேண்டிய அவசியமற்றுப் போகும்படி உன் அன்புக்கயிற்றூற் கட்டி அருணாசலமே கதியாக நான் திருவண்ணாமலையிலே ஸ்திரமாக வாழும்படி நீ சங்கற்பித்து, நான் உன் அருள்வலையிற் சிக்கி விடுமாறு, சிலந்திப் பூச்சி வலைகட்டிப் பிற பூச்சிகளைப் பிடிப்பது போலப் பிடித்து, உனக்கு ஊணாக உண்டு விட்டாயே!

104. தன்போற் சராசரஞ் சகலமுங் காணுஞ்
சகஜநி லைமையுன் றண்ணருளால்
முன்போ லடைந்து முடிந்தவ் வருட்கடல்
முழுகிமு ழுகியக முகத்தாலே
என்போடு மூனுட லெல்லா முருகிட
வியலறி வின்பா யிருந்தான்ம
அன்போடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, சகல சாரசரங்களையும் ஆன்மாவாகவே காணுகின்ற சகஜ நிர்விகற்ப சமாதி நிலையை உன் திவ்விய அருளால் முன்போலவே யடைந்து, பூரணமாகி, அந்த ஞானானந்த அருட்கடலிலேயே முழுகி முழுகி, அந்த அகமுக பக்தியால் தமது ஊனுடலும் எலும்புங்கூட உருகும்படி சச்சிதானந்தாத்மஸ்வரூப பக்தியோடு 'அருணாசல ரமணா' என்னும் உன் திவ்ய திருநாமத்தைக் கேட்டு மகிழும் உன் அன்பர்களின் அன்பர்களுக்கும் அடியவனாகி நான் நிற்க அருள்புரிவாயாக.

105. அன்போடு சத்திய மஹிம்சைவை ராக்கியம்
ஆர்ந்தவர்க் கருள்வதோ டமையாமல்
தன்போத மடைமையாற் சஞ்சல வினைப்பயன்
ஜனனம ரணமாய்த் தகிக்கின்ற

துன்போடும் வாதனைத் தொடரொடும் போராடித்
தோற்றுவந் துன்பாற் றுதிக்கின்ற
என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, அன்பு, சத்தியம், அஹிம்சை, வைராக்கியம் ஆகிய தெய்வீக சம்பத்துக்களை உடைய மேலான பக்தர்களுக்கு நீ அருள் செய்வாய் என்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அகங்கார மடமையாலும் பலவிதமாய்ச் சலிக்கும் வினைகளைச் செய்து பெற்ற தீவினைப் பயன்களாலும், பிறப்பு இறப்பு, வடிவ சம்சாரத் தீயால் வெந்து படும் துன்பத்தாலும் வாசனைக் கூட்டங்களாகிய பகைவர்களோடு போராடித் தோற்று வந்ததாலும் துக்கித்து உன்திருவடிகளை யடைந்து துதிக்கின்ற என்னைப் போன்ற தீனர்களையும் இன்பமுறும்படிக் காப்பாற்றிக்கொண்டு நீ அருள்கூர்ந்து என்றென்றும் வாழ்ந்திருப்பாயாக.

106. தும்புரு நாரதர் தொன்மறை பதஞ்சலி
துதிகளும் சைவத் தொளிர் நால்வர்
தென்பெரு மொழிபுனை தேவமா லைகளுந்
திருப்புக ழுகந்தபின் சிவரமண
அன்புரு வேற்றபோ தருண்முரு கனுதி
யரும்பெரு மடியருன் னருள்மாந்தி
என்புரு கன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, சிவ பரமேசுவரனாகிய நீ தும்புரு, நாரதர், புராதன வேதங்கள், பதஞ்சலி முதலியவர்களால் முன்பு துதிக்கப்பட்டு, பிறகு சைவசமய குரவர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வராலும் தென்பெரு மொழியாகிய தமிழால் தேவார திருவாசங்களால் துதிக்கப்பட்டாய். பிறகு அருணகிரியாரின் திருப்புகழ் அலங்காரத்தை திருமுருகனாய் இருந்து ஏற்றருளினாய். அதன்பின் அன்பு சொரூபமான சிவரமணனாக அவதரித்த

இப்போது அரும்பெரும் அருளடியவர்களான முருகனார் முதலியோர் உன்னருளைப் பெற்றுப் பாடியதும் எலும்பையும் உருக்கும் பக்திக்கனல் வீசுகின்ற ஸ்ரீ ரமணசந்நிதி முறை முதலிய உன் பழைய அடியார்களின் இனிய தமிழ்க் கவிகளையும் கேட்டு மகிழ்ந்த உன் செவிகள், இப்போது எனது இந்த அற்பத் துதிகளையும் ஏற்றுக்கொண்டு அருள்செய்வ தாகுக.

107. வெறுமையாய் பொருளின் விவேகமில் லாமல்வி
சேடமில் லாக்கவி வேடத்தின்
சிறுமையை யுடனே தெற்றென விளக்குந்
திறத்தா லன்றியுந் திருவருளின்
வறுமையம் போதியை மடைமையான் மனநா
வழிவாய்க் காலா வார்க்கின்றேன்.
பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தரு ளிஷ்டம்பின் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, சிறந்த விவேகமுள்ள பொருள் ஒன்றுமில்லாத வெறும் பாட்டாகவும், யாதொரு விசேஷமுமில்லாததும், கவிகளைப் போன்ற வேஷம் மட்டும் போட்டு ஆனால் புலமையின் சிறுமையைப் பார்த்தவுடனேயே சிறந்த புலவர்களுக்குப் பளிச்செனக் காட்டிக் கொடுப்பது மட்டுமல்லாமல், ''திருவருள் பெறாத ஏழை இவன்'' என்ற அருள் – வறுமைச் சமுத்திரத்தை மனம், நாக்கு ஆகிய வாய்க்காலின் வழியாக மடமையால் கவிகளாக வார்த்துக் கொட்டுகிறேன். பொறுமை மலையாகவே வடிவெடுத்தவனே! இந்த அற்ப மொழிகளையும் நல்ல துதிகளாகப் பொறுத்து ஏற்றுக்கொண்டு அருள் செய்க. இனி உன் இஷ்டம் எப்படிச் செய்யினும் எனக்கு மகிழ்ச்சியே!

108. காலை விளித்தெனக் காசை விளைத்துனைக்
காண வழைத்தநீ கனஞானப்
பாலை யளித்திருட் பாச மழித்தெனு
பாதி யழிக்கும் பைம்பொன்பூங்

காலை யளித்தருட் காவ லளித்தருட்
காத லளித்தெனைக் கைகோர்த்துன்
மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தருள் ரமணேசா.

ஸ்ரீ ரமணேசா, என் உடலிளமையில் சிறுகாலையில் எனக்கு உன்மேல் ஆசையை ஏற்படுத்தி, உன்னை நான் தரிசிக்கும்படி அழைத்துக்கொண்ட நீ, பிரம்மஞானமாகிற பாலைப் பருகக் கொடுத்து, உடலுலக பாசங்களாகிய அஞ்ஞானத்தை அழித்து, என் உபாதிகளையும் நீக்கித்தரக் கூடியதான உனது செழும் பொன்னடிகளை எனக்குத் துணையாகத் தந்து அதன்மூலம் எனக்கு அருட்காவ லளித்து, உன் அருளுக்குப் பாத்திரமாகும் படி ஞானக்காதலை யளித்து, கைகோத்து, உன் மாலையை எனக்களித்து, அருணாசலரமணா, எனது இவ்விரிவுப் பாமாலையை நீ யணிந்து கொண்டருள்வாயாக.

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ ரமணேசா
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ ரமணேசா.

இந் நூலாசிரிய ரருளிய இதர நூல்கள் :-

தமிழ்

1. ஸ்ரீ ரமண வழி - பாகம் -1,2,3,4 (தனித்தனியாக)
2. ஸ்ரீ ரமண ஸஹஸ்ரம் - உரையுடன்
3. ஸ்ரீ ரமணோபதேசநூன்மாலை - விளக்கவுரையுடன்
4. உபதேசவுந்தியார் - விளக்கவுரை
5. ஸ்ரீ ரமண பிரார்த்தனை அமுதம்
6. ஸ்ரீ ரமண கான அமுதம்
7. ஸ்ரீ ரமண கீதங்கள்
8. ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம் - பதவுரையுடன்
9. குருவாசகக்கோவை - உரை
10. ஸ்ரீ ரமண வருகை

English

1. The Path of Sri Ramana, Part I & II (Separate)
2. Guruvachaka Kovai (with commentary)
3. Light on the Teachings of Sri Ramana
4. Sri Arunachala Stuti Panchakam (Word by word commentary)
5. Sri Ramanopadesa Noonmalai (Word by word commentary)